விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 30 கதிர் 203 வள்ளுவர் ஆண்டு 2046 ஆனி 03, வியாழக்கிழமை 18.06.2015

தேனிசை இராகங்கள்
(27.06.2015)
தொடர்பு: 0771013235
அனுசரணை: Hari Engineers, Rio Ice Cream
ஊடக அனுசரணை: உதயன்

# எதிர்பாராத வேளையில் நாடாளுமன்று கலையும்

## தமிழ் முற்போக்குக் கூட்டணியிடம் உறுதியளித்தார் ஜனாதிபதி மைத்திரி

கொழும்பு, ஜூன் 18

எவரும் எதிர்பாராத விதத்தில் விரைவில் திடீரென நாடாளுமன்றம் கலைக்கப்படும்.

–இவ்வாறு நேற்று தமிழ் முற்போக்குக் கூட்டணியிடம் உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான அமைச் சர் பழனி திகாம்பரம், இராஜாங்க அமைச்சர் வி. இராதாகிருஷ்ணன் ஆகியோர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தச் சந்திப்பு பிற்பகல் 2 மணிமுதல் 3 மணிவரை நடைபெற்றது.

இதன்போதே ஜனாதிபதி மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார். இந்தச் சந்திப்பு தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் கூறியதாவது:–

எமது சந்திப்பின் போது பல்வேறு விடயங்களை நாம் கலந்துரையாடினோம். ஜனாதிபதி எம்மிடம் கூறிய விடயங்களில் ஊடகங்களுக்கு கூறக்கூடிய பின் வரும் விடயங்களை என்னால் கூறமுடியும்.



பிரதமர் 24 ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்படலாம் எனக் கூறியிருக்கலாம். இந்த நாடாளு மன்றம் இனியும் தொடர முடியாது. இது கலைக்கப்படவேண்டும். அதற்கான முடிவை நான் எடுத்து விட்டேன். திட்டவட்டமான திகதியை நான் இன்னமும் தீர்மானிக் கவில்லை. இன்னமும் சில தினங்களில் திகதி தீர்மானிக்கப்படும். எனினும் எவரும் பக்.24

## உள்ளக விசாரணை குறித்து உயர்மட்ட பேச்சு ஆரம்பம்

கொழும்பு, ஜூன் 18

போரின்போது இடம்பெற்ற சில சம்பவங்கள் தொடர்பான உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை ஒன்றை அமைப்பது குறித்த உயர்மட்டப் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளதாக அரசு அறிவித்துள்ளது. உள்ளகப் பொறிமுறை சம்பந்தமான விடயங்களில் அதனுடன் தொடர்புபட்ட பொறுப்பான அதிகாரிகள் உயர்மட்டத்தில் உள்ளக ஆலோச னைக் கலப்பில் ஈடுபட்டுள்ளதுடன், தக்கநேரத்தில் இதனுடன் தொடர்புடைய அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாராய வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துகொண்டுள்ளது என வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேசினி கொலன்ன தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் பக்.24

## செப்ரெம்பர் மாதத்திற்கு முன் நிச்சயம் உள்ளக பொறிமுறை

### கூறுகிறார் நீதி அமைச்சர்



கொழும்பு, ஜூன் 18

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் எதிர்பார்ப்பிற்கு அமைய எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர், உள் ளக விசாரணைப் பொறிமுறை உருவாக்கப்படும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்தார் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ. கொழும்பின் உள்ளக விசாரணைப் பொறி முறை சர்வதேச சமூகம் நம்பிக்கை கொள்ளக்கூடிய – ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாக நிச்சயம் இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பொறுப்புக்கூறல் விவகாரத்தில் இலங்கை பக்.24

## படைகளின் வசம் இன்னும் 168 கட்டடங்கள் உள்ளன

யாழ்ப்பாணம், ஜூன் 18

போர் முடிந்து 6 ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், யாழ். மாவட்டத்தில் இராணுவம், கடற்படை, பொலிஸின் கட்டுப்பாட்டில் 168 வீடுகள் – கட்டிடங்கள் உள்ளன. இந்த வீடுகள் – கட்டிடங்கள் யாவும் தனி நபர்களுக்குச் சொந்த மானவை. அத்துடன் இவற்றுடன் இணைந்த 48 ஏக்கர் நிலப் பரப்பையும் மூன்று தரப்பினரும் கையகப்படுத்தி வைத்துள்ளனர்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் மாத்திரம், 23 வீடுகள் – கட்டடங்கள் 5.38 ஏக்கரில் உள்ளன. வேலணையில் 4 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் 7 வீடுகளும், நல்லூரில் ஓர் வீடும், சண்டிலிப்பாயில் 5 வீடுகளும், பருத்தித்துறையில் 6 வீடுகளுமாகவே, 23 வீடுகள் இராணுவத்தினரிடம் உள்ளன.

பொலிஸாரின் கட்டுப்பாட்டில், 88 வீடுகள் – கட்டடங்கள் 11.68 ஏக்கரில் உள்ளன. வேலணையில் ஓர் வீடும், ஊர்காவற்றுறையில் 12 வீடுகளும், பக்.24

## காவல் நிலையங்களே மூடப்பட்டன வடக்கில்

### இராணுவ முகாம்களல்ல என்று உண்மையை ஒப்புக்கொண்டது படைத் தலைமையகம்

கொழும்பு, ஜூன் 18

தேசிய பாதுகாப்பு விடயத்தில் எந்த விட்டுக்கொடுப்பும் கிடையாது எனத் தெரிவித்துள்ள இராணுவத் தலைமையகம், யாழ்ப்பாணத்தில் இருந்த புறக்காவல் நிலைகள் மட்டுமே மூடப்பட்டன என்று தெரிவித்துள்ளது.

புதிய அரசு அமைந்த பின்னர் வடக்கில் 59 இராணுவ முகாம்கள் மூடப்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த தரப்பினர் சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்து வருகின்றனர். இந்தக் குற்றச்சாட்டுக்கு இராணுவத் தலைமையகம் பதிலளித்துள்ளது. அது விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக் கப்பட்டுள்ளதாவது:

2009ஆம் ஆண்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. அதன் பின்னர் ஒழுங்கான முறையில் பாதுகாப்பு நிலைமைகள் மீளாய்வு செய்யப்பட்டு படை நிலைகள் மாற்றியமைக்கப்பட்டன.

இது உலகின் எந்தவொரு நிபுணத்துவ இராணுவமும் கையாளுகின்ற தர நியமம். இலங்கையில் மட்டும் கடைப்பிடிக்கப்படும் புதிய முறை அல்ல.

இதற்கமைய, வடக்கில் 2009 ஆம் ஆண்டுக்குப் பக்.24

## பல வருடங்களின் பின்னர் மீண்டும் மலேரியா நோய்

### *இந்தியாவுக்குச் சென்று திரும்பியவர் மூலம் வந்தது*

யாழ்ப்பாணம், ஜூன் 18

மாதகலில் மலேரியா நோயாளி ஒருவர் நேற்றையதினம் அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்தியாவுக்குச் சென்று வந்த நிலையிலேயே அவர் பக்.24

## 20 ஆவது திருத்தம் பற்றிய வர்த்தமானி வெளிவந்தது

கொழும்பு, ஜூன் 18

தேர்தல் முறையை மாற்றியமைப்பதற்கான 20ஆவது அரசமைப்புத் திருத்தம் தொடர்பான யோசனை, நேற்று முன்தினம் நள்ளிரவு வர்த்தமானியில் வெளியி டப்பட்டுள்ளதாக, இலங்கை அரச அச்சகக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித் தார். பக்.24

## கழிவு ஒயிலின் தாக்கம் படிப்படியாக குறைகிறது

### 5 சுகாதார அதிகாரிகள் பிரிவில் தொடர் கண்காணிப்புக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 18

வலிகாமம் பிரதேசத்தில் கழிவு ஒயிலில் தாக்கம் கடந்த பெப்ர வரி மாதத்துடன் ஒப்பிடுகை யில் அடுத்தடுத்த மாதங் களில் படிப்படியாகக் குறைந்து வருவதாக பிராந்திய சுகா தார சேவைகள் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனினும் தொடர்ந்தும் தண்ணீரில் கழிவு ஒயில் கலப்பின் அளவைக் கண்காணிப்பதற்கான நடவடிக்கைகளையும் பணிமனை முன்னெடுத்துள்ளது.

உடுவில், தெல்லிப்பழை, கோப்பாய், சங்கானை மற்றும் சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளிலேயே தொடர் அவதானிப்புக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. மக்கள் மத்தியில் உள்ள தேவையற்ற பீதியை, இந்த அவதானிப்பின் மூலம் கிடைக்கும் பெறுபேறுகளைக் கொண்டு கட்டுப்படுத்த முடியும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய கண்காணிப்புச் செயற்திட்டத்தின் கீழ் பக்.24

## வடமராட்சியில் நேற்று பொலிஸாரின் அதிரடி

### வீதிகளில் இடையூறு விளைவித்ததாக 23 இளைஞர்கள் கைதாகி விடுவிப்பு

வடமராட்சி ஜூன் 18

மாணவிகளுக்கு வீதிகளில் தொல்லை கொடுத்த, பெண்களுடன் அநாகரிகமாக நடந்து கொள்ளுதல், பாடசாலை நேரத்தில் வீதிகளில் இடையூறு விளைவிக்கும் வகையில் நடமாடுதல் ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் நேற்று வடமராட்சிப் பகுதியில் 23 இளைஞர்களை அதிரடியாகக் கைது செய்தனர் நெல்லியடிப் பொலிஸார்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்றுப் பாடசாலை நிறைவுறும் நேரமான 2 மணியில் இருந்து மாலை 5 மணிவரை முன்னெடுக்கப்பட்டது. உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜவ்பர் இந்தக் கைது நடவடிக்கைக்குத் தலைமை தாங்கினார்.

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி வீதிகள், தேவரையாளி இந்துக் பக்.24

## இலங்கை–இந்தியா இடையே தரை வழி

கொழும்பு, ஜூன் 18

பாக்கு நீரிணை ஊடாக இந்தியாவையும், இலங்கையையும் பாலம் மூலமாகவோ அல்லது கடலுக்கு அடியிலான சுரங்கப் பாதை மூலமாகவோ தரைவழியாக இணைக்கும் திட்டத்தை இந்திய அரசு கொண்டிருப்பதாக, இந்தியாவின் தரைவழிப் போக்கு பக்.24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிதி ஒதுக்கீடுகள் கடந்த காலத்தில் அரசியலுக்குப் பயன்படுத்தப்பட்டன

## யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில்நந்தனன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் ஜூன் 18
கடந்த காலத்தில் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியும் ஒதுக்க வேண்டிய நிதியும் மக்களுக்காக அல்லாமல் அரசியல் தேவைகளுக்காகவும் கட்சிகளின் தேவை களுக்காகவுமே செலவிடப்பட் டுள்ளன. இது ஒரு மிகப்பெரும் தவறான செயல். – இவ்வாறு தெரி வித்தார் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் பா.செந்தில் நந்தனன்.



நல்லூர், ஊர்காவற்றுறை பிரதேச செயலகங்களில் உள்ள வறுமைக் கோட்டுக்குட்பட்ட குடும்பங்களுக்கு வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் நிதி வழங்கும் நிகழ்வு நேற்று குறித்த கழகத்தின் செயலகத்தில் முன்னெடுக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

போர் மேகங்கள் சூழ்ந்திருந்த கடந்தகால வரலாற்றில் எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து பொருளாதாரத்திலும் வாழ்வாதாரத்திலும் மிகவும் வீழ்ச்சியடைந்துபோய் இருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் இருக்கும் எமது மக்களின் வாழ்வு மீண்டும் புத்துணர்ச்சி பெறவேண்டுமாயின் அரசின் நிதி ஒதுக்கீட்டுடன் ஆலயங்கள், புலம்பெயர் அமைப்புக்கள், சங்கங்கள், ஸ்தாபனங்கள், ஆகியன வாழ்வாதார உதவிகளை வழங்க முன்வர வேண்டும். அவ்வாறாக வழங்கப்படும் வாழ்வாதார உதவிகள் மக்களின் வாழ்க்கையில் நீண்ட காலமாக நிலைத்து நின்று பயனுள்ள வகையில் அமையக் கூடியதாக இருக்க வேண்டும். அத்துடன் அரச ஊழியர்கள் தமது ஊழியம் மக்களுக்கானது என்பதனை உணர்ந்து செயலாற்ற வேண்டும்.– என்றார்.

குறித்த நிகழ்வில் உரையாற்றிய வணிகர் சங்கத் தலைவர் ஜெயசேகரம் தெரிவித்ததாவது

வர்த்தகர்கள் வர்த்தகத்துடன் நின்றுவிடாது மக்களுக்கான சேவைகளை வழங்க முன்வரவேண்டும். வர்த்தகர்கள் மட்டுமல்ல பொருளாதார ரீதியாக சமூகத்தின் அந்தஸ்தில் உள்ளவர்கள் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மக்களின் வாழ்க்கையை தூக்கி விடும் படியாக செயலாற்ற வேண்டும்.– என்றார்.

குறித்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக பிரிவில் இருந்து 15 பயனாளிகளும் ஊர்காவற்றுறை பிரதேச செயலகப்பிரிவில் இருந்து 16 பயனாளிகளும் வணிகர் சங்கத்தின் கொடுப்பனவைப் பெற்றுக் கொண்டதுடன் நிகழ்வுக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலர் எழிலரசி அன்ரன் ஜோகநாயகம் மற்றும் நல்லூர் பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர்.(ம)

# கிணற்றுள்இறங்கிய பெண் தத்தளித்து உயிரிழந்தார்

## அம்பாள் குளத்தில் நேற்று சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 18
பாதுகாப்பற்ற கிணற்றினுள் கயிறு கட்டி இறங்கிய மனநலம் குன்றிய பெண் மீண்டு வர முடியாமல் தத்தளித்து உயிரிழந்தள்ளார். இந்த சம்பவம் நேற்று கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் நடந் துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் மூன்று பிள்ளைகளின் தாயான முல்லைத்தீவு ஒட்டுசுட்டானைச் சேர்ந்த மரியதாஸ் உசாரானி (வயது–36) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் பற்றி தெரிய வருவதாவது

போரால் தனது தாய் தந்தையரை இழந்த குறித்த உயிரிழந்த பெண் திருமணமாகி மூன்று பிள்ளைகளும் பிறந்ததன் பின்னர் அவரது கணவனால் கைவிடப்பட்டிருந்தார். அதனால் மனநலம் குன்றி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்துள்ளார். இதனால் குறித்த பெண்ணின் உறவினர்களால் அவரது பிள்ளைகள் மூவரும் பராமரிக்க முடியாமல் ஆச்சிரமம் ஒன்றில் சேர்க்கப்பட்டதாக அறியமுடிகின்றது. அத்தோடு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சி அம்பாள் குளம் பகுதியில் உள்ள தனது அக்காவின் வீட்டுக்கு வந்த பெண் நேற்றயதினம் அக்கா வீட்டில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் கயிறு கட்டி இறங்கியுள்ளார் பின்னர் மீண்டு மேலே வர முயற்சித்த போது மீளமுடியாமல் உயிரிழந்ததாகவும், கிணற்றில் தத்தளித்த போது கிணற்றி நீர் அதிகமாக இருந்ததால் காப்பாற்ற முடியாமல் அயலவர்களை அழைத்தும் பயனில்லாமல் உயிரிழந்தள்ளதாக உயிரிழந்த பெண்ணின் உறவினர்கள் கூறினர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலம் கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு அனுப்பிவைக் கப்பட்டது. (21)

# யாழ்.நீதிமன்ற தாக்குதல் சம்பவம்: மேலும் ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம் யூன் 18
யாழ்ப்பாண நீதிமன்ற தொகுதி மீது இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களில் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் மேலும் ஒரு சந்தேகநபர் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு நேற்று யாழ்.நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார்.

தாக்குதல் சம்பவம் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட காணொலிகளிலும் ஒளிப்படங்களிலும் அவர் நீதிமன்ற கட்டடம் மீதும், சிறைச்சாலை பேருந்து மீதும், சட்டத்தரணியொருவரின் கார் மீதும் தாக்குதல் நடத்தும் காட்சிகள் உள்ளது எனத்தெரிவித்தே பொலிஸார் அவரை நீதிமன்றில் முற்படுத்தினர். சந்தேகநபரை இம்மாதம் 26 ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பெ.சிவகுமார் உத்தரவிட்டார். (ற–103)

# யோகா தினத்தன்று ரியூஸன்களை மூட கோரிக்கை

சர்வதேச யோகா தினமான எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று தனியார் கல்வி நிலையங்களை மூடி ஒத்துழைப்பு வழங்குமாறு வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் கேட்டுள்ளார்.


மாணவர்கள் யோகா நிகழ்வில் கலந்து கொள்வதற்காகவே தனியார் கல்வி நிலையங்களை மூடுமாறு அவர் கேட்டுள்ளார். யோகா நிகழ்வை இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்கள் அதில் கலந்து கொள்ளவுள்ளனர். அன்று காலை 6 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை யோகா நிகழ்வு இடம்பெறவுள்ளது. என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற–4)

# கிரிஜாயோக ஆரண்ய சேவை மையம் திறப்பு

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சர்வதேச யோகாதினம் கடைப்பிடிக்கப்படவுள்ள நிலையில் அன்றையதினம் ஓம் கிரிஜாயோக ஆரண்யத்தின் சேவை மையம் ஒன்று கனகராயன் குளத்தில் முற்பகல் 9 மணிக்குத்திறந்து வைக்கப்படவுள்ளது என்று ஆரண்ய சேவை மையத்தினர் தெரிவித்துள் ளனர்.

கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் எதிர்வரும் 21 ஆம் திகதி வரையும் யோகா கொடிவாரமாக அனுஷ்டிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ற)

# நயினை நாகபூசணியின் கொடியேற்றம் நேற்று



யாழ்ப்பாணம், ஜூன் 18
வரலாற்றுச் சிறப்பு மிக்க நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. நேற்றுக் காலை 6.30 மணிக்குப் பூசைகள் ஆரம்பமாகி நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றம் நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களில் இருந்தும் 5 ஆயிரத்துக்கும் அதிகமாக அடியார்கள் கொடியேற்றம் காண வந்திருந்தனர். பக்தர்களின் நலன் கருதி விசேட போக்குவரத்துச் சேவை, படகுச்சேவை என்பன ஒழுங்குசெய்யப்பட்டிருந்தன. நேற்றைய தினம் 28 படகுச் சேவைகள் இடம்பெற்றன என்று தனியார் படகு உரிமையாளர் சங்கத் தலைவர் தனபாலசிங்கம் தெரிவித்தார்.

எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு முத்துச் சப்பரமும், 27ஆம் திகதி பகல் விசேட கருட சர்ப்ப பூசையும் வாயு பட்சணி நாகம் வீதியுலாவும் இடம்பெறும். 29ஆம் திகதி இரவு சப்பரத் திருவிழாவும், 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

நேற்று பெருமளவு பக்தர்கள் திரண்டிருந்த நிலையில் ஆலயச் சூழலில் சங்கிலி ஒன்று களவாடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. பக்தர்கள் ஆலயத்துக்கு நகைகள் அணிந்து வருவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது. (ற–7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமற்ற பல படகுகள் நயினாதீவு சேவையில்

## உடனடியாக சீர்ப்படுத்துமாறு அறிவுறுத்தியுள்ளது வர்த்தக கப்பல் போக்குவரத்துத் திணைக்களம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

குறிகாட்டுவான் – நயினாதீவு இடையே சேவையில் ஈடு படும் 41 படகுகளில் பெரும்பாலா னவை, உரிய தரத்துடன் இல்லை என்று தெரிவித்துள்ள வர்த்தக கப்பல் போக்குவரத்துத் திணைக் களம், அவற்றை மேம்படுத்துவதற் குரிய நடவடிக்கைகளை மேற் கொள் ளுமாறு அறிவுறுத்தியுள்ளது.

யாழ்.மாவட்டச் செயலகத்தின் ஏற் பாட்டில், குடாநாட்டில் பயணிகள் படகுச் சேவையில் ஈடுபடும் படகுகளை பரிசோதனை மேற்கொள் ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்முதல் கட்டப் பரிசோதனை நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக் கிழமையும், திங்கட்கிழமையும் குறி காட்டுவானில் மேற்கொள்ளப்பட்டது. இதன் போது 41 படகுகள் பரிசோ தனைக்கு உட்படுத்தப்பட்டன. குறித்த படகுகள், பாதுகாப்பான பயணிகள் சேவைக்கு உகந்தனவா என்பது தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன் போது மிகக்குறைந்த எண்ணிக்கை யிலான படகுகளே பூரண தகுதியைக் கொண் டிருந்தமை கண்டறியப்பட்டுள்ளது. எஞ்சிய படகுகளின் உரிமையாளர் களுக்கு, படகுகளை சீர்செய்யு மாறு பணிப்புரை விடுக்கப்பட்டது. அத்துடன் படகு ஓட்டுவதற்குரிய அனுமதிப் பத்திரம் எடுப்பவர்கள் மாத்திரமே படகுகளைச் செலுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள் ளது. அனுமதிப் பத்திரத்தினை பெற் றுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த படகுகளை சீர் செய்து, மீள வும் பரிசோதனைக்கு உட்படுத்தி, பாதுகாப்பான பயணிகள் சேவைக்கு குறித்த படகுகள் உகந்தது என்று உறுதிப்படுத்தப்பட்டால் மாத்திரமே அந்தப் படகுகளை தொடர்ந்து சேவையில் ஈடுபட அனுமதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. (ற–5)

# போதைப் பொருள் குற்றங்களுக்கு விதிக்கப்பட்டன கடும் தண்டனைகள்

## கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று நேற்று அதிரடி

கிளிநொச்சி, ஜூன் 18

போதைப்பொருள்கள் பாவனை தொடர்பான வழக்குகளில் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட குற்ற வாளிகளுக்கு கடுமையான தண்ட னைகளையும், அதிகப்படியான தண்டமும் விதித்துத் தீர்ப்பளித்தார் கிளிநொச்சி மாவட்ட நீதிபதி எம்.ஐ வஹாப்தீன்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கசிப்பு, கஞ்சா, போன்ற போதைப் பொர்ருள் களை விற்பனை செய்தார்கள், உடைமையில் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சி பொலிஸாரால் கைது செய்ய்ட்ட 8 குற்றவாளிகளுக்கே நீதிவான் இவ் வாறு தீர்ப்பு வழங்கினார்.

3 போத்தல், 2போத்தல், கசிப்பை உடைமையில் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப் பட்ட இரு சந்தேக நபர்கள் தங்கள் மீதான குற்றத்தை ஒப்பு கொண் டதை அடுத்து இருவருக்கும் தலா ஒரு லட்சம் ரூபா தண்டமும் கட்டத்தவறின் 6மாதகால சிறை தண்டனையும் அத்தோடு 6 மாத கால கடூழிய சிறை தண்டனையும் விதித்தார்.

150 மில்லிலீற்றர் அரச சீல் சாரா யம் வைத்திருந்தார் என்ற குற்றச் சாட்டில் கைது செய்யபட்ட சந்தேக நபர், தன்மீதான குற்றத்தை ஒப்பு கொண்டதை அடுத்து ஒரு லட்சம் ரூபா தண்டப்பணமும் ஒரு லட்சம் ரூபா ஆட்பிணையும் தண்டனை விதிக்கப்பட்டது.140 மில்லி கிராம் கஞ்சாவைத் தனது உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றசாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவருக்கு விசாரணைகளின் பின்னர் 3 மாத கடூழிய சிறைத் தண்டனையும், 10 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதிக்கப்பட்டது.

3 ஆயிரத்து 830 மில்லிகிராம் கஞ்சாவை தனது உடைமையில் வைத்திருந்தார் என்று குற்றச் சாட்டில் கைது செய்யப்பட்ட 55 வயதுடைய முதியவர் ஒருவ ருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த தோடு முதியவரால் கொள் வனவு செய்யப்பட்ட தவறணை ஒன்றை யும் தேடுதல் நடவடிக்கைக்கு உட் படுத்துமாறும் நீதிவான் உத்தரவிட் டார்.

187 மில்லி லீற்றர் கசிப்பு வைத்தி ருந்தார், குடித்துவிட்டு மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தினார் என்ற குற்றத்துக்காக கைது செய்யபட்ட இளைஞர் ஒருவருக்கு 13ஆயி ரத்து 500 ருபா தண்டமும், கடூழி யச் சிறை தண்டனையும் விதிக்கப் பட்டது. 2போத்தல் கசிப்பை உடை மையில் வைத்திருந்தார் என்று கூறி கைது செய்யப்பட்ட கைக்குழந் தையுடனான பெண் ஒருவருக்கு 75ஆயிரம் ரூபா தண்டப்பணமும், கட்டத்தவறின் 6மாதகால சாதா ரண சிறைதண்டனையும் விதிக்கப் பட்டது.

போதைப்பொருள் தொடர்பான வழக்குகளில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்று வழங்கிய கடுமையான தீர்ப்புகள் குறித்து பொதுமக்கள் வர வேற்புத் தெரிவித்துள்ளனர்.(ற–21)

## நெடுந்தீவுக்கான அரச படகு சேவை ஸ்தம்பிதம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை கள் கடந்த பத்து நாள்களுக்கு மேலாக ஸ்தம்பிதமடைந்துள்ளன. வடதாரகை, குமுதினி ஆகிய இரண்டு படகுகளுமே தற்போது பழுதடைந் துள்ள நிலையில் மக்கள் பல இடர் பாடுகளின் மத்தியில் தமது பயணத் தைத் தொடரவேண்டியுள் ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பொதுமக்கள், நெடுந்தீவுக்கான அரச படகுகளின் சீர்குலைவுக ளால் அவதிப்படும் மக்களின் கஷ் டங்கள் குறித்து அதிகாரிகள் எந்த வித அக்கறையும் செலுத்துவதில்லை எனவும் நெடுந்தீவில் பணியாற்ற உத்தியோகத்தர்கள் தாமாகவே முன்வந்து அந்த மக்களுக்கு வினைத் திறன் சேவை கிடைக்க உதவ வேண்டும் என யாழ். அரச அதிபர் நா.வேதநாயகன் விடுத்த கோரிக்கை குறித்து மகிழ்ச்சியடைந்திருப்பதா கவும், நெடுந்தீவுக்கான அரச படகுச் சேவை விடயத்திலும் கவனம் எடுத்து தமக்குஒருநல்லபோக்குவரத்துசேவை கிடைக்க அரச அதிபர் உதவவேண் டும் என்றும் தெரிவித்தனர்.

அத்துடன் சம்பந்தப்பட்ட திணைக் கள அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நல்ல தீர்வு பெற்றுத்தர முன்வருவார் எனத் தாம் நம் பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரி வித்தனர். (ற–7)

# 17 ப.நோ.கூ. சங்கங்களில் சம்பள உயர்வு நடைமுறையில்

## கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 17

யாழ். குடாநாட்டில் தற்போது 17 வரையிலான பல நோக்குக் கூட்டு றவுச் சங்கங்கள் பணியாளர்களுக் கான முப்பது வீத சம்பள உயர்ச் சியை நடைமுறைப்படுத்தி வருகின் றன என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கணேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:–

குடாநாட்டில் மொத்தம் 24 பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் தற்போது 17 வரையிலான சங்கங் கள் பணியாளர்களுக்கான முப்பது வீத சம்பள உயர்ச்சியை நடை முறைப்படுத்தி வருகின்றன. மற் றைய ஏழு சங்கங்களும் இந்த சம் பள உயர்ச்சியை பணியாளர் களுக்கு வழங்கமுடியாத இக்கட் டான நிலையில் உள்ளன.

இந்த சங்கங்கள் நட்டத்தில் செயற் படுவதோடு போதிய நிதி வசதி இன்றியும் சிரமப்பட்டு வருகின்றன. இதன் காரணத்தால் இந்தச் சங்கங் கள் மாதாந்த சம்பளத்தைக் கூட வழங்கமுடியாத நிலையில் சிரமப் பட்டும் வருகின்றன.

இந்தச் சங்கங்கள் கூடுதலாக நூறு நாள் வேலைத்திட்டத்தில் இணைக் கப்பட்டுள்ளன. இந்தச் சங்கங்க ளின் செயற்பாடுகள் மற்றும் வியா பார நடவடிக்கைகளை அதிகரிப் பதற்கான மாற்று ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

சம்பந்தப்பட்ட சங்கங்களின் இயக்கு நர்சபை மற்றும் பணியாளர்கள் இதற்கு முழுமையாக ஒத்து ழைப்பை வழங்க வேண்டும்.

இந்த நூறுநாள் வேலைத்திட்டத்தில் முப்பது சங்கங்கள் இலாபகரமாக முன்னோக்கிய பாதைக்கு செல்ல வேண்டும்.

இதனைவிட குடாநாட்டில் இரண்டு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தைத்தவிர ஏனைய சங்கங்கள் பணியாளர்களுக்கான முப்பது வீத சம்பள அதிகரிப்பை நடைமுறைப்படுத்தியுள்ளன.– என்றார். (ற–17)

# கட்டுமரம் நிறுத்துமிடம் அமைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 18

வளலாய் பகுதியில் மீளக்குடியே றிய மீனவர்கள் தங்களின் கட்டு மரங்களை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு வான் அமைத்துத் தருமாறு கோரியுள்ளனர்.

கடந்த 25 வருடங்களாக உயர் பாதுகாப்பு வலயமாகவிருந்து அண் மையில் விடுவிக்கப்பட்ட வலிகா மம் கிழக்கு வலளாய் பகுதியில் மீளக்குடியேறிய மக்களின் பிர தான தொழிலான மீன்பிடித் தொழில் காணப்படுகின்றது.

இந்த மக்கள் கட்டுமரங்களில் சென்று மீன்பிடிகளை மேற்கொண்ட பின்னர் தங்கள் கட்டுமரங்களை பாதுகாப்பாக கடற்கரையில் நிறுத்த முடியவில்லையென தெரி வித்தனர். வான் அமைக்கப்படாமல் இருப்பதால் காற்று வீசும் காலங் களில் கட்டுமரம் சேதமடையும் அபாயம் இருப்பதால் வான் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கு மாறு அந்தப் பகுதி மீனவர்கள் கோரியுள்ளனர்.

இந்தப் பகுதி மக்கள் தங்களிடம் உள்ள மீன்பிடி உபகரணங்களைக் கொண்டு கட்டுமரத்திலும், வீச்சு வலையிலும் தொழில் செய்து வருகின்றனர். (ற)

## சடலத்தை பொறுப்பேற்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப் பட்டுப் பின்னர் உயிரிழந்த ஒருவ ரது சடலத்தை உரியவர்கள் உரிமை கோரி எடுத்துச் செல்லுமாறு வைத் தியசாலைப் பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவானந்த ராஜா கேட்டுள்ளார்.

கடந்த முதலாம் திகதி கே.குலேந் திரன் (வயது–51) என்பவர் சிகிச் சைக்காக யாழ்.போதனாவில் சேர்க் கப்பட்டிருந்தார். பின்னர் சிகிச்சை பயனளிக்காது அவர் உயிரி ழந்துள் ளார். அவரது சடலத்தையே உரித்து டையவர்கள் பெற்றுக் கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது. (ற–4)

# வீதியோரம் சென்றுகொண்டிருந்த முதியவரை மோதிக் கொன்றது சாரத்திய பயிற்சி வாகனம்

## சாவகச்சேரியில் நேற்றுச் சம்பவம்

தென்மராட்சி, ஜூன் 18

மருத்துவமனையில் சிகிச்சை பெற நடந்து சென்றவரை அவ்வழியே வந்த சாரத்திய பயிற்சிப் பாடசாலை வாகனம் மோதியதில் வயோதிபர் சம்பவ இடத்திலேயே சாவடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மு.ப. 9.30 மணியளவில் சாவகச்சேரி ஏ 9 வீதியில் நடந்துள்ளது. சரசாலை வடக்கைச் சேர்ந்த ஏரம்பு நல்ல தம்பி (வயது – 75 ) என்பவரே சாவடைந்தவராவார்.

மருத்துவமனையில் சிகிச்சை பெறு வதற்காக சைக்கிளில் வந்த இவர் சைக்கிளை பிரதேச செயலகத் திற்கு அருகில் உள்ள கடையில் விட்டுவிட்டு ஏ–9 வீதி ஊடாக நடந்து சென்றுள்ளார். பிரதேச செய லகத்துக்கு அருகில் உள்ள தேவா லயத்துக்கு முன்பாக அதே திசை யில் வந்த வாகனம் திடீரென அவர் மீது மோதியதில் அவர் கீழே விழுந் துள்ளார். வாகனத்தின் இரு சில்லுக ளும் உடலில் ஏறியதாக சம்ப வத்தை நேரில் பார்த்தவர்கள் தெரி வித்தனர். வயோதிபர் உடனடியாக மருத்துவனைக்குக் கொண்டு செல் லப்பட்டபோதும் அவர் உயிரிழந்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வாக னத்தைச் செலுத்தி வந்த சாரதிய பயிலுநரைப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். வயோதிப ரின் மரணம் தொடர்பாக பொலி ஸார் நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்துள்ளனர்.

இது தொடர்பில் சாரத்திய பயிற்சிப் பாடசாலை பயிற்றுவிப்பாளருடன் தொடர்பு கொண்டபோது,

பயிற்சியில் ஈடுபட்ட பயிலுநர் எதிரே வந்த வாகனத்துக்காக வீதி யோரம் வாகனத்தைச் செலுத்தி யதாகவும் முன்னால் முதியவர் நடந்து செல்வதால் பிரேக் போடு மாறு தெரிவிக்கப்பட்டபோது பயி லுநர் பிரேக்குக்கு பதிலாக 'அக் ஸிலேட்டரை' அழுத்தியதால் வாக னம் முன்னோக்கிச் சென்று முதிய வரை மோதிவிட்டது. – என்று தெரி வித்தார். (ற–9)

## சேதமடைந்த நிலையில் நீர்ப்பாசன வாய்க்கால்கள்

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் நீர்ப்பாசன மற்றும் கழிவு வாய்க் கால்கள் மிக நீண்டகால மாக புனர மைக்கப்படாமல் சேதமடைந்த நிலை யில் காணப்படுகின்றன என்று விவசாயிகள் தெரிவித் துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மிகப் பெரிய குளமான இரணைமடுக் குளமும் அதன் கீழான பிரதான மற்றும் கிளை நீர்ப்பாசனக் கால்வாய் கள், கழிவு வாய்க்கால்கள் கடந்த 30 வரு டங்களுக்கு மேலாக புனர மைக் கப்படாமல் அதன் கட்டுமானப் பணி கள் சிதைவடைந்து காணப்படுகின்றன என்றும் இத னால் பயிர் செய்கை காலங்களில் பெருமளவு நீர் விரய மாகி வருகின்றது என்றும் அவர் கள் மேலும் தெரிவித் தனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திராட்சைச் செய்கை பாதிப்பு

## நெருக்கடிகளை எதிர்கொள்வதாக விவசாயிகள் கவலை

அச்சுவேலி, ஜூன் 18

யாழ். குடாநாட்டில் திராட்சைப் பழப் பயிர்ச்செய்கை இந்தவருடம் பெருமளவில் பாதிப்படைந்துள் ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த காலங்களில் இது போன்ற பாதிப்பு ஏற்படவில்லை என்றும் இதனால் திராட்சைப் பழப்பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசா யிகள் எதிர்பாராத பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த வருடம் திராட்சைப் பழப் பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள எதிர்பாராத பாதிப்புக்களை யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள வட்டாரங்களும் ஏற்றுக்கொண்டி ருப்பதோடு திராட்சைப் பயிர்ச் செய்கையில் ஏற்பட்டுள்ள பாதிப் புக்களில் இருந்து விவசாயிக ளுக்கு நிவாரணம் வழங்குவதற் கானவேலைத்திட்டங்களைதிணைக் களம் மேற்கொண்டுள் ளது.

திராட்சைப்பழப் பயிர்ச் செய் கையை மீளவும் குடாநாட்டில் மேல் நிலைப்படுத்துவதற்கும் பாதிப் புக்கு உள்ளாகிய விவசாயிக ளுக்கு நிவாரணம் அளிப்பதற்கும் ஏதுவாக எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திராட்சைப் பழப்பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கான செயற்பட் டறை ஒன்று நடைபெறவுள்ளது.

திராட்சைப் பழப்பயிர்ச் செய்கை யில் யாழ். குடாநாட்டில் 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் ஈடுபட்டுள் ளனர். இந்த வருடம் பயிர்ச்செய் கையில் ஏற்பட்ட பாதிப்பு பொரு ளாதார ரீதியிலான பாதிப்பை ஏற்படுத்தி இருப்பதோடு குறிப் பிட்ட எண்ணிக்கையானோரை பயிர்ச்செய்கையில் இருந்து இடை விலகவும் செய்துள்ளது.

திராட்சை இந்த வருடம் வழமை யைப்போல பூக்கவோ காய்க் கவோ இல்லை என்றும் மிகமிக குறைந்த அளவில் காய்த்த போதி லும் உரிய முறையில் பழுக்க வில்லை என்றும் தெரிவிக்கப்படு கின்றது. முற்றிய காய்களும் இடை யில் பழுதடைந்து அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித் துள்ளனர். (ற-11)

# உணவகம் தீயிட்டு எரிப்பு; நந்திக் கடலோரம் சம்பவம்



முல்லைத்தீவு, ஜூன் 18

முல்லைத்தீவு வற்றாப்பளை செம் பன்மோட்டயில் (நந்திக்கடலோ ரத்தில்) உள்ள சிறு உணவகம் நேற்று முன்தினம் இரவு இனந்தெரி யாதோ ரால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

நந்திக்கடலில் தொழில் செய்யும் தொழிலாளர்கள் தாங்கள் பிடிக் கும் இறால் மற்றும் மீன்களை குறித்த சிறு உணவகம் அமைந்தி ருக்கும் இடத்தில் கொண்டுவந்து வியாபாரிகளிடம் விற்பனை செய் வதுடன், இவ்விடத்திலேயே காலை மற்றும் மதிய உணவுகள், தேநீர், சிற்றூண்டிகளை உண்பது வழக்க மாகும்.

வழமைபோல நேற்றுமுன்தினம் இச் சிறு உணவகம் திறந்திருந் ததுடன், பின்னர் மாலை மூடப்பட் டுள்ளது. அதன்பின்னர் இரவு வேளையில் இனந்தெரியாதவர்கள் குறித்த சிறு உணவகத்திற்கு தீயிட் டுள்ளனர். இந்தச் சம்பவம் பற்றி முள் ளியவளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. சம்பவ இடத்திற்கு சென்று பொலி ஸார் விசாரணைகளையும் மேற் கொண்டனர். (ற-433)

# யாழ்.நீதிமன்ற உணவகத்தில் பேஸ்ரிக்குள் புழு: உரிமையாளருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாண நீதிமன்ற தொகு தியில் இயங்கிவருகின்ற உணவ கத்தில் விற்பனை செய்யப்பட்ட பேஸ்ரியை நேற்றுமுன்தினம் வாங்கிச் சுவைக்க முற்பட்ட சட்ட உதவி மன்றத்தில் கடமையாற்றும் இளம் பெண் சட்டத்தரணியொரு வர் அதனுள் உயிருடன் புழு வொன்று இருப்பதைக்கண்டு அதிர்ச் சியடைந்தார்.

சிரேஷ்ட சட்டத்தரணியொருவர் மூலமாக இவ்விடயம் நீதிமன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டு உணவகத்தின் உரிமையாளருக் கெதிராக பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப் பட்டது.

உணவகத்தின் உரிமையாளர் குற் றத்தை ஏற்றுக்கொண்டதையடுத்து அவரை 5 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறும் பாதிக்கப்பட்ட வருக்கு 10,000 ரூபா இழப்பீடு செலுத்துமாறும் நீதிவான் பெ.சிவ குமார் உத்தரவிட்டார். (ற-103)

# விவசாயிகளுக்கு கருத்தமர்வு



வலி.மேற்கு, ஜூன் 18

வலி.மேற்கு பிரதேசத்திலுள்ள விவ சாய சம்மேளனப் பிரதிநிதி களுக் கான கருத்தமர்வு 4ஆம் திகதி வலி. மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்தக் கருத்தமர்வு வேள்ட் விஷன் (சங் கானை) நிறுவனத்தின் அனுசர ணையுடன் வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக இலங்கை நீர்ச் சபையின் இரசாயனப் பகுதி பணிப்பாளர் திரு.க.சரவணன், யாழ்.பல்கலைக்கழக சமூதாய மருத் துவத் துறைத் தலைவர் வைத்திய கலாநிதி.ச.சுரேஸ்குமார், மாவட்ட விவசாயப் பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் மற்றும் வேள்ட் விசன் (சங்கானை) அபிவிருத்தி ஊக்குவிப்பாளர் தி.பிரியவக்சலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.(ற)

# வீட்டிலிருந்து சென்ற முதியவர் மயங்கிய நிலையில் பற்றைக்குள்

## அவரது தங்கமோதிரம், பணம் என்பன மாயம்

முதல்நாள் காலை சைக்கிளில் புறப்பட்டுச் சென்ற முதியவர் மறு நாள் காலை பற்றைக்குள் மயங் கிய நிலையில் மீட்கப்பட்டு தனி யார் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டுள்ளார். இவரிடம் காணப் பட்ட ஒரு பவுண் தங்கமோதிரம், சைக்கிள், 5ஆயிரம் ரூபா பணம் கையடக்கத் தொலைபேசி போன் றவை காணாமற் போயுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் சாவகச்சேரி நகரப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கடந்த திங்கட்கிழமை காலை வீட் டிலிருந்து சைக்கிளில் சென்ற இவர் அன்று முழுவதும் வீட்டுக்கு வராத தால் பல இடங்களிலும் அவரைத் தேடியுள்ளனர். மறுநாள் காலை பாட சாலைக்குச் சென்ற இவரது பேர்த்தி அந்தப் பகுதியில் உள்ள ஆல யத்தை அண்டிய பற் றைப் பகுதி யில் இவரது சேர்ட் போடப்பட்டி ருப்பதைக் கண்டு பெற்றோருக்கு தகவல் கொடுத்துள்ளார்.

அவர்கள் அங்கு சென்றபோது மர மொன்றில் அணிந்திருந்த சேர்ட் காணப்பட்டதால் பற்றைப் பகுதி யில் தேடினர். அந்த வேளையில் பற்றைக்குள் மயங்கிய நிலையில் காணப்பட்டதையடுத்து அவரை மீட்டு வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

அவர் அந்தப் பகுதியில் உள்ள தனி யார் மருத்துவமனையில் சேர்க் கப்பட்டார் என்று தெரிவிக்கப்பட் டது. இவர் அணிந்திருந்த ஒருபவுண் தங்கமோதிரம் மற்றும் 5ஆயிரம் ரூபா பணம், கையடக்கத்தொலை பேசி, சைக்கிள் ஆகிய காணாமற் போயுள்ளன என்றும் தெரிவிக் கப்பட்டது. (ற-9)

# கஞ்சா வைத்திருந்த நால்வருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வவுனியாவிலிருந்து வந்திருந்த மதுவரித்திணைக்களத்தின் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் யாழ்ப் பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில் சட்ட விரோதமாக கஞ்சா வைத்திருந்த போதகர்மடம், துன்னாலை, மத் தியூஸ் வீதி- யாழ்ப்பாணம், கண்ண புரம் -யாழ்ப்பாணம் மற்றும் மீனாட் சியம்மன் கோயிலடி - யாழ்ப் பாணம் ஆகிய பகுதிகளைச்சேர்ந்த நால்வர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அவர்களிடமிருந்து 65 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் நால்வரையும் இம்மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தர விட்டார். (ற-103)

# சாவு வீட்டுக்கு சென்றபோது கேலி செய்து தாக்க முயற்சி

## துணுக்காய் பிரதேச சபையினர் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 18

துணுக்காய் பிரதேச சபைச் செய லாளரின் இறுதிச்சடங்கில் கலந்து கொண்ட துணுக்காய் பிரதேச சபைத் தலைவர் மற்றும் உறுப்பினர் களைக் கேலி செய்ததோடு – அவர் களை தாக்குவதற்கும் முயற்சித்த போதையில் இருந்த கும்பல் ஒன் றின் பிரதான சூத்திரதாரிக்கு எதிரா கவும் – குழுவினருக்கு எதிராக வும் துணுக்காய் பிரதேச சபையி னர் மல்லாவி பொலிஸ் நிலையத் தில் முறைப்பாடு பதிவு செய்துள்ள னர்.

இந்தச் சம்பவம் துணுக்காய் மயா னத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் நடந்துள்ளது.

துணுக்காய் பகுதியில் உயிரிழந்த துணுக்காய் பிரதேச சபை செயலா ளரின் வீட்டில் கடந்த சில வருடங்க ளுக்கு முன்னர் மதுபானச் சாலை ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்த மதுபானச்சாலையால் அப்பகுதி இளைஞர்கள், பாடசாலை மாண வர்கள் என அனைவரும் சீர்கெட்டு போவதாக மக்கள் பிரதேச சபையி னரிடம் முறையிட்டதன் காரண மாக மதுபானச் சாலைக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய் யப்பட்டு கடந்த மாதம் மதுபான சாலையும் மூடப்பட்டிருந்தது.

இந்நிலையில், மதுபானச் சாலையை முடியதன் காரணமாகவே பிரதேச சபை செயலாளர் உயிரிழந்தார் என சர்வதேசப் பொலிஸாரால் தேடப்படுபவர் என்று கூறப்படும் குறித்த மதுபானச் சாலையின் உரி மையாளரான சடா என்பவர் கூறி யதாக முறைப்பாடு செய்துள்ள தாகப் பிரதேச சபையினர் தெரி வித்தனர்.

அந்த நபர் துணுக்காய் பிரதேசத் தில் உள்ள சில இளைஞர்களுக்கு மதுவை இலவசமாக வழங்கி குறித்த பிரதேச சபை உறுபினர்களுக்கு எதிராக திசை திருப்பிவிட்டதாக வும், அதனால் போதை அதிகமான இளைஞர்களே தங்களை தகாத வார்த்தைகளால் ஏசித் தாக்கமுற் பட்டதாகவும் பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அதனையடுத்து மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளதாகத் தெரிவித்த பிர தேச சபையினர், குறித்த மதுபான சாலையின் உரிமையாளர் முன் னாள் ஜனாதிபதியின் ஆட்சி காலத் தில்பலசலுகைகளைபெற்று கொண் டவர் எனவும் தெரிவித்தனர்.

இது சம்பந்தமான விசாரனைக ளுக்காக இரு தரப்பினரும் நேற்று மாலை மல்லாவி பொலிஸாரால் அழைக்கப்பட்டி ருந்தனர். எனி னும் பொலிஸாரது அழைப்பை ஏற்று விசாரணைக்குச் சென்ற தம்மைப் பொலிஸார் உரிய முறையில் நடத்தாது நீண்ட நேரம் காத்திருக்க வைத்தனர் என்று பிரதேச சபையினர் தெரிவித்தனர். எனினும் குழப்பம் விளைவித்ததா கக் குற்றம் சுமத்தப்படும் குறித்த சூத்திரதாரி உள்ளிட்ட குழுவினர் பொலிஸ் நிலையத்துக்கு வர வில்லை என்றும் பிரதேச சபை யினர் தெரிவித்தனர். (ற-4,21)

# பழுதடைந்த உணவு, பழங்கள் விற்பனை செய்த வர்த்தகர்களுக்கு அபராதம்



யாழ்ப்பாணம், ஜூன் 18

அழுகிய பூசணிக்காய், வாழைப் பழம் மற்றும் பழுதடைந்த றொட்டி, றோல்ஸ் போன்றவற்றை விற் பனை செய்த கல்வியங்காடு பகுதி யைச்சேர்ந்த வியாபாரிகள் நால் வரை பொது சுகாதார பரிசோதகர் கள் நேற்றுமுன்தினம் யாழ்ப்பா ணம் நீதிவான் நீதிமன்றில் முற் படுத்தினர்.

அவர்கள் தமக்கெதிரான குற்றச் சாட்டை ஏற்றுக்கொண்டதைய டுத்து அவர்களை தலா 10 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்துமாறு நீதிவான் பெ.சிவகுமார் உத்தர விட்டார். (ற-103)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர் தமிழரையே திருப்திப்படுத்துகின்றது அரசு

## குற்றஞ்சாட்டுகின்றது பொதுபல சேனா



கொழும்பு, ஜூன் 18

புலம்பெயர் தமிழர்களின் சர்வதேச மாநாடு ஒன்றை கொழும்பில் நடத்த வெளிவிவகார அமைச்சு எடுத்துள்ள தீர்மானத்தை பாராட்டும் அதேவேளை வடக்கு கிழக்கு உட்பட அனைத்து பிரதேசங்களிலும் எமது இராணுவ வீரர்களின் செயற் பாடுகளுக்கு முட்டுக்கட்டை போடும் நடவடிக் கைகளை நாம் ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப் போவது இல்லை என பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

புலம்பெயர் தமிழர்களை மட்டும் திருப்திப்படுத்துவதில் இந்த அரசு மும்முரமாக செயற்படுவதைத் தவிர்த்து எமது பல்லாயிரக் கணக்கான இராணுவ வீரர்களின் உயிர்த் தியாகங்களின் அர்ப்பணிப்பினால் கிடைக்கப்பெற்ற தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தவறிவிடக் கூடாது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிருலப்பனையில் அமைந்துள்ள பொதுபல சேனா பௌத்த அமைப்பின் ஊடகவியலாளர் மாநாடு அதன் தலைமை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம் பெற்றது. இதன் போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைப்பின் பொதுச் செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:–

புதிய அரசின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அண்மையில் லண்டன் மாநாட்டில் புலம்பெயர் தமிழர்களுடனா அல்லது விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுடனா பேச்சு நடத்தினார் என்பது தொடர்பில் எமக்கு எவ்வித தெளிவான தகவல்களும் இல்லை. இது தொடர்பில் அரசு அனைத்து மக்களுக்கும் விளக்கமளிப்பது அவசியம்.

இவ்வாறான நிலையில் வெளிவிவகார அமைச்சர் எமது நாட்டிலிருந்து வெளியேறிய நாட்டுப் பற்றுள்ள புலம்பெயர் தமிழர்களுடன் பேச்சு மேற்கொண்டிருப்பாரானால் அதனை நாம் பாராட்டுகின்றோம். அவ்வாறே எமது நாட்டின் போர்க் காலப்பகுதியிலும் அதற்கு பின்னரான காலப்பகுதியிலும் எமது நாட்டில் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் மட்டுமல்ல பௌத்த, சிங்கள மற்றும் முஸ்லிம், கிறிஸ்தவ மக்களை மீளக் குடியேற்றும் நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்குமாயின் அவை மிகவும் பாராட்டத்தக்கவையே.

சிறுபான்மை இன சமூகம் தொடர்பில் அக்கறை செலுத்தும் இந்த அரசு பௌத்த சிங்கள மக்களையும் எமது இராணுவ வீரர்களையும் மறந்து செயற்படக் கூடாது.

எமது நாட்டில் நிலவிய முப்பது வருட கால கொடிய போரை, பயங்கரவாதிகளுக்கு எதிராக பல்வேறு உயிர் தியாகங்களின் மத்தியில் எமது இராணுவத்தினர் வென்றெடுத்தனர். அதனை ஒரு போதும் மறந்து எந்த ஓர் அரசும் செயற் படக் கூடாது.

மறுபுறம் இன்று எமது நாட்டில் சுதந்திரமானதொரு நிலையில் தேசிய பாதுகாப்பு உறுதிசெய்யப் பட்டுள்ளது. அந்த வகையில் புலம்பெயர் தமிழர்கள் உட்பட வெளிநாடுகளில் வாழும் டயஸ்போரா என்ற பதங்களில் அடங்கும் தரப்பினர்களின் செயற்பாடுகள் காரணமாக எமது நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட வாய்ப்புக்கள் இருக்க கூடாது. இந்த விடயங்களில் அரசு மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரி பால சிறிசேனவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தார்கள் என்ற ஒரே காரணத்துக்காக வடக்கு, கிழக்கில் மீண்டும் பயங்கரவாத செயற்பாடுகள் தலை தூக்குவதற்கு இடமளிக்க முடியாது. இவை தொடர்பிலும் அரசு அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் எமது நாட்டில் முற்று முழுவதுமாக ஒழிக்கப்பட்டாலும் ஏனைய உலக நாடுகளில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. உருத்திர குமாரன் போன்ற சில தரப்பினர் இன்னமும் செயற்படுவதோடு இயக்கங்களுக்கு தேவையான பணமும் சேகரிக்கப்படுகிறது.

இவ்வாறான நிலையில் எமது நாட்டின் தேசிய பாதுகா ப்பு தொடர்பில் எப்போதுமே அரசு எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும்.

**சந்திரிகாவின் செயற்பாடுகள்**

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகள் எமது பௌத்த மக்களுக்கு எதிரானதாகவே சகல சந்தர்ப்பங்களிலும் காணப்படுகின்றன. அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் எமது நாடு யாருடையது என்று தனக்குத் தெரியாது என்ற கருத்தொன்றை அவர் தெரிவித்திருந்தார்.

உண்மையில் அவருடைய நாடு எது, அவரின் பூர்வீகம் என்ன என்பது குறித்தும் அவருக்கு தெரியாது. கள்ளத் தோணியொன் றில் இலங்கைக்கு வந்த பூர்வீகத்தை சேர்ந்தவர் என்றே அவரைக் குறிப்பிட வேண்டும். இந்தக் காலகட்டங்களில் அவரது ஆலோசனைகளோ, செயற்பாடுகளோ எமது நாட்டுக்கு தேவைப்படாது என்பதனை அவர் புரிந்துக் கொள்ள வேண்டும்.


**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு**

வடக்கு, கிழக்கு பகுதியில் இன்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராணுவத்தின் செயற்பாடுகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைப்பதிலும், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தும் வகையில் இராணுவ முகாம்கள், விகாரைகளை அகற்றும் வகையில் போராட்டங்களை மேற்கொள்வதிலும் மும்முரமாகச் செயற்படுகின்றனர்.

இவ்வாறான செயற்பாடுகளை நாம் தென்னிலங்கையில் முன்னெடுத்தால் என்ன நடக்கும் என்பதை தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் புரிந்து கொள்ள வேண்டும். தேசிய பாது காப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வகையில் இவர்களின் செயற்பாடுகள் அமையக் கூடாது. – என்றார். (ற)

# நாடாளுமன்றைக் கலைக்க முனைந்தால் புதிய அரசொன்றை நாம் அமைப்போம்

## நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை



கொழும்பு, ஜூன் 18

சிறுபான்மை அரசு என்ற காரணத்தை முன்னிலைப்படுத்தி நாடாளுமன்றத்தை கலைப்பதே ஐக்கிய தேசியக் கட்சியின் உறுதியான நிலைப்பாடாக இருந்தால், நல்லாட்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு தற்போதைய நாடாளுமன்றத்திற்குள் புதிய அரசொன்றை அமைப்போம் என்று ஜாதிக ஹெல உறுமயவின் இணைத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தேர்தல் மறுசீரமைப்பின்போது சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகளின் இணக்கபாடும் மிகவும் அவசியமாகும். எனினும் தற்போதுசிறுபான்மைக்கட்சிகளினால்முன்மொழியப்பட்டுள்ள இரட்டை வாக்கு சீட்டு முறைமை ஒரு போதும் சாத்திய மாகாது. அந்த முறைமை பிரச்சினைகளை மேலும் வலுப்படுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தூய்மையானதொரு நாளைக்கான தேசியப் பேரவையின் விசேட ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:–

**அரசால் குழப்பம்**

தற்போது முழு நாடாளுமன்றத்தையும் அரசு குழப்பியடித்துள்ளது. அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் பெரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலைமை நல்லாட்சிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக மாறியுள்ளது.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிய தருணத்திலேயே தேர்தல் மறுசீரமைப்பை உள்ளடக்கிய 20 ஆவது திருத்தச் சட்டத்தையும் நாடாளு மன்றத்தில் சமர்ப்பித்திருக்க வேண்டும். ஆனால் அரசின் ஆர்வம் இன்மையால் அதனை நிறைவேற்ற முடியாமல் போனது.

தற்போதைக்கு ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசே காணப்படுகிறது. இந்த நிலையில் நாடாளுமன்றத்தின் முரண்பாடான சூழலை மாற்றியமைப்பதற்கு அரசால் இயலவில்லை. அரசு என்ற வகையில் பொறுப்பைத் தட்டிக் கழித்துச் செயற்பட்டு வருகிறது.

தேர்தல் மறுசீரமைப்பு குறித்த பிரதான யோசனைக்கு அனைத்து கட்சிகளும் ஆதரவாக செயற்பட்ட போதிலும் ஆசனங்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதில் கட்சிகளிடையே கருத்து வேறுப்பாடுகள் காணப்படுகின்றன. பொதுவாக நாடாளுமன்றத்தின் ஆசனங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கக் கூடாது என்பது மக்களின் வாதமாக இருப்பினும், தற்போதைய சனத்தொகை வளர்ச்சிக்கேற்ப ஆசனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும் என்பதே அரசியல் ஆர்வலர்களின் பிரதான வாதமாக உள்ளது. அதே போன்று சிறுப்பான்மைக் கட்சிகளினதும்அபிப்பிராயமும் அதுவாகவே உள்ளது.

எனினும் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சியானது நாடாளுமன்றத்தின் ஆசனங்களின் எண்ணிக்கையை 225க்கு மட்டுப்படுத்த வேண்டும் என்பதனையே வலியுறுத்தி வருகிறது. இந்த யோசனைக்கு சிறுபான்மை மற்றும் சிறிய கட்சிகள் ஒருபோதும் உடன்படமாட்டா. எனவே தற்போதைக்கு அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ள 237 ஆசனங்கள் அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய திருத்தமாக உள்ளது.

**இரட்டை வாக்கு சீட்டு முறைமை ஏற்புடையதல்ல**

இந்நிலையில் தேர்தல் மறுசீரமைப்பின்போது சிறுபான்மை மற்றும் சிறியக் கட்சிகளின் இணக்கப்பாடு மிகவும் அவசியமாகும். எனினும் 20 ஆவது திருத்தத்துக்கு சிறுபான்மைக் கட்சிகளால் தற்போது முன்மொழியப்பட்டுள்ள இரட்டை வாக்குச் சீட்டு முறைமை ஒரு போதும் சாத்தியமாகாது. அந்த முறைமை, ஆசனங்கள் தொடர்பிலான பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கச் செய்யும். இதனால் தற்போதைய முறைமையை விடவும் ஆபத்தான நிலைமையை ஏற்படுத்தலாம். எனினும் குறித்த முறைமையில் சாதகமான அம்சங்களும் உள்ளன. எனினும் சிறுபான்மைக் கட்சிகளின் யோசனைக்கு பிரதான கட்சிகள் இரண்டும் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளன.

ஆசனங்களின் எண்ணிக்கையைக் காரணம் காட்டி அரசு 20 ஆவது திருத்தத்துக்கு முட் டுக்கட்டையாக உள்ளது. நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்துவோம் என எதிரணி பொது வேட்பாளருக்கு ஆதரவாக செயற்பட நாம் உறுதியளித் திருந்தோம். இந்த நிலையில் அந்த வாக்குறுதி தொடர்பில் காலை வார முற்படுவது நியாயமாகாது.

நாடாளுமன்றத்தின் சிறுபான்மை பிரதிநிதித்துவத்தை பெற்ற கட்சியின் தலைவர் பிரதமராக்கப் பட்டுள்ள நிலைமையில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதியைத் தட்டிக்கழிக்க முனைவதைப் பொறுப்புணர்வுமிக்க தலைவர்களின் செயலாகக் கருதமுடியாது.

ஆகவே நாடாளுமன்றத்தை கலைப்பது ஜனாதிபதிக்குள்ள அதிகாரங்களுக்கு உரிய பங்காகும். இந்நிலையில் மக்களின் ஆணைக்கு மாறாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு நாடாளுமன்றத்தை கலைப்பதற்கு எந்தவொரு உரிமையும் கிடையாது.

**தேர்தல் முறையை மாற்ற வேண்டும்**

எனவே அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றியே ஆக வேண்டும். விகிதாசார முறைமையை மாத்திரம் வைத்துக் கொண்டு விருப்பு வாக்கு முறைமையை முற்றாக இல்லாமல் செய்ய வேண்டும்.

விருப்பு வாக்கு முறைமையால் நாட்டை ஆட்சி செய்யத் தகைமை யற்றோர், கொள்கையற்றோர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகின்றனர். இதன்காரணமாக கட்சிகளுக்கு உள்ளேயே தகராறுகள் ஏற்படுகின்றன. அதேபோன்று பண வசதி படைத்தோருக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. ஆகவே இந்த முறைமையை மாற்றியமைத்து இலங்கை அரசியல் கலாசாரத்தை முழுமையாக மாற்றியமைக்க வேண்டும்.

இந்த வரலாற்றுப் பூர்வமான மாற்றத்துக்கு எவரும் தடையாக இருக்க முடியாது. சிறுபான்மை அரசின் பிரதமர் என்ற வகையில் மக்களுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெரும் பொறுப்பாகும். அவரால் நல்லாட்சி வேலைத் திட்டங்களைத் தட்டிக்கழித்து விட்டுச் செயற்பட முடியாது. ஆகவே அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்ற வேண்டியது அரசின் பொறுப்பாகும். இதற்குத் தொடர்ந்தும் அரசு தடையாக இருந்தால் அழுத்தம் பிரயோகிக்கும் சக்தியாக நாம் பரிணமிப்போம்.

இந்த நிலையில் அரசின் அராஜக ஆட்சியால் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் முற்றாகக் குழம்பியுள்ளன. ஆகவே தேர்தல் மறுசீரமைப்பு என்பது நாட்டு மக்களின் பிரதான அபிலாஷையாகும். அதனை நிறைவேற்றாமல் நாடாளுமன்றத்தைக் கலைப்பதற்கு இயலாது.

**அரசே பிற்போடுகிறது**

சிறுபான்மை அரசு என்ற காரணத்தை முன்னிலைப்படுத்தி அரசமைப்பின் 20 ஆவது திருத்தச்சட்டத்தை பிற்போடு வதற்கு அரசு முனைகிறது. முன் னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவின் ஆதரவு அணியினர் இடை யூறாக காணப்படுவதாகவும் அரசு குற்றம் சுமத்துகிறது.

அது முற்றிலும் தவறான வாதமாகும். அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்துக்கு மஹிந்த ஆதரவு அணியினர் ஆதரவாக வாக்களித்தனர். எனவே 20 ஆவது திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தால் தேசத் துரோகிகள் யார் என்பது தெரிந்துவிடும். இந்த நிலையில் சிறுபான்மை அரசு என்ற காரணத்தால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆட்சி அமைக்க முடியாவிட்டால் தற்போதைய நாடாளுமன்றத்தினுள் புதிய அரசை ஏற்படுத்துவதற்கு நாம் தயாராக உள்ளோம்.

பொறுப்பு வாய்ந்தவர்கள் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும்,பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் 20 ஆவது திருத்தச்சட்டத்தை நிறைவேற்றியே தீர வேண்டும்.

ஊழல் மோசடி தொடர்பில் அரசின் செயற்பாடாக நாட்டு மக்களுக்கு வாக் குறுதியளித்ததைப் போன்று ஊழல் மோசடிக்கு தண்டனை வழங்குவோம். அரசமைப்பின் 19 ஆவது திருத்தச்சட்டத்தினூடாக இதற்கான அடித்தளத்தை இட்டுள்ளோம்.– என்றார். (ற)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உங்கள் நலனில் அக்கறையுள்ளவரை சந்திப்பீர்கள். எதிர்பாராத அதிர்ஷ்ட சம்பவம் ஒன்று நடக்கும். தொழில், வியாபாரத்தில் உருவாகும் வளர்ச்சியால் மகிழ்ச்சி பெறுவீர்கள். தாராள அளவில் பணவரவு இருக்கும்.

**இடபம்:** உங்கள் திறமையான பணியை சிலர் குறை சொல்வர். பொறுமையாக இருப்பதால், சிரமத்தைத் தவிர்க்கலாம். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். திட்டமிட்ட பயணத்தில் மாற்றம் செய்வீர்கள்.

**மிதுனம்:** குடும்பத்தில் உள்ளவர்கள் அன்பு செலுத்துவர். புதிய திட்டங்களை நிறைவேற்ற ஆர்வம் வளரும். தொழில் வளர்ச்சி அபரிமிதமான முன்னேற்றம் தரும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். இனிமையான நாள்.

**கடகம்:** உங்களுக்கு வேண்டாதவர்களிடம் இருந்து விலகி இருக்க வேண்டிய நாள். சமயோசித புத்தியால் நன்மை பெறுவீர்கள். தொழிலில் உருவாகிற இடைஞ்சலை தாமதமின்றிசரிசெய்து விடுவீர்கள். நடைமுறைச் செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** உங்கள் உழைப்பின் தன்மையைப் பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று, வாழ்க்கைத்தரம் உயரும். பெண்கள் நகை, ஆடை வாங்குவர். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும்.

**கன்னி:** நம்பிக்கை இழக்க வைத்த செயல் கூட வெற்றி பெறும். தொழில், வியாபார வளர்ச்சியில் அக்கறையுடன் ஈடுபடுவீர்கள். உற்பத்தி, விற்பனை செழித்து பணவரவு அதிகரிக்கும். இல்லறத் துணையுடன் விழாவில் கலந்து கொள்வீர்கள்.

**துலாம்:** பணவரவு ஓரளவுக்கு இருக்கும். உறவினர்களுடன் கருத்து வேறுபாடு வரலாம். தொழில், பணியில் கவனமாக இருக்கவும். பெண்களுக்கு கணவருடன் இணக்கமான போக்கு இருக்கும்.

**விருச்சிகம்:** உங்களை புரிந்து கொள்ளாதவர்களிடம் இருந்து விலகியிருப்பது நல்லது. தொழில், வியாபாரம், வேலையில் கடும் வேலைப்பளு இருக்கும். இருப்பினும், அதற்குரிய பணபலன் கணிசமாக இருக்கும்.

**தனுசு:** கடுமையான சுமையைத் தரும் பணியைக் கூட எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரம் வளர அதிக மூலதனம் இடுவீர்கள். உறவினர்கள் மத்தியில் உங்கள் மீதான மரியாதை அதிகரிக்கும்.

**மகரம்:** இனிய எண்ணங்களால் உற்சாகம் பெறுவீர்கள். சிறிய பணிகளைக் கூட நேர்த்தியாகச் செய்வீர்கள். தொழில், வியாபாரம், வேலையில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

**கும்பம்:** பிள்ளைகள் ரீதியில் நன்மை அடைவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணவரவு சுமாராக இருக்கும். நகை, பணத்துடன் பாதுகாப்பு குறைவான இடங்களுக்குச் செல்ல வேண்டாம். கவனமாக செயல்பட வேண்டிய நாள்.

**மீனம்:** வேலைகளை கடும் முயற்சியின் பின்னர் முடித்து விடுவீர்கள். அதிக முயற்சி தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் ஓரளவு இலாபம் கிடைக்கும். எவருடனும் சச்சரவு கூடாது. உடல்நலத்துக்காக செலவு வரலாம்





நீங்களெல்லாம் எங்கேயிருந்தடா கிளம்பி வாறீங்கள் ?



நாங்களா... மொரட்டுதனமா யோசிப்போம்ல...



காலையில பல்லு விளக்கிட்டு சாப்பிட வேண்டாம். சாப்பிட்டுகிட்டே.... பல்லு விளக்கலாம். நாங்களும் யோசிப்போம்ல.

# இந்த வயதில் திருமணமா?

திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழும் வழக்கம் மேற்கத்தேய நாடுகளில் சாதாரணமானது. இவ்வாறு சேர்ந்து வாழும் ஜோடிகள் சில நேரம் பாதியிலே பிரிந்து போவதும் உண்டு.

ஆனால் 27 ஆண்டுகளாக சேர்ந்து வாழ்ந்த வயதான ஒரு தம்பதியினர் சமீபத்தில் திருமணம் செய்து கொண்ட சம்பவம், இங்கிலாந்தில் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது. தெற்கு இங்கிலாந்தின் ஈஸ்ட் போர்ன் பகுதியை சேர்ந்தவர் ஜோர்ஜ் கிர்பி. முன்னாள் குத்துச் சண்டை வீரரான இவர், டொரீன் லக்கி என்ற பெண்ணுடன் 27 ஆண்டுகளாக சேர்ந்து வாழ்ந்தார்.

இவர்களுக்கு 7 பிள்ளைகளும், 15 பேரப்பிள்ளைகளும், 7 கொள்ளு பேரப்பிள்ளைகளும் உள்ளனர். தற்போது ஜோர்ஜுக்கு 103 வயதும், லக்கிக்கு 91 வயதும் ஆகிறது. இந்த நிலையில், இந்த தம்பதியினர் திருமணம் செய்ய முடிவெடுத்தனர். அதன்படி கடந்த காதலர் தினத்தன்று இருவருக்கும் நிச்சயதார்த்தம் நடந்தது. அதைத் தொடர்ந்து கடந்த வாரம் இவர்கள் இருவரும் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டனர்.

தங்கள் திருமணம் தாமதமாக நடந்திருப்பதில் எந்த வருத்தமும் இல்லை என புதுமணப்பெண் லக்கி கூறியுள்ளார். இந்த தம்பதியினரது ஒட்டு மொத்த வயது 194 என்ற நிலையில், உலகிலேயே வயதான தம்பதி என்ற சிறப்பை இவர்கள் பெற்றுள்ளனர்.


# அரண்மனை 2 ஆரம்பம்

சுந்தர்.சி இயக்கத்தில் சித்தார்த், திரிசா, ஹன்சிகா நடிப்பில் உருவாகும், 'அரண்மனை 2' திரைப்படத்தின் படப்பிடிப்பு நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது.


வினய், சந்தானம், ஹன்சிகா, லட்சுமிராய், அண்ட்ரியா உள்ளிட்ட பலர் நடிப்பில் சுந்தர்.சி இயக்கத்தில் வெளியான படம் 'அரண்மனை'. இந்தப் படம் ரசிகர்களிடையே வரவேற்பைப் பெற்றது.

'அரண்மனை' படத்தைத் தொடர்ந்து 'ஆம்பள' படத்தை இயக்கினார் சுந்தர்.சி. அரண்மனையின் வெற்றியைத் தொடர்ந்து மீண்டும் பேய், நகைச்சுவை கூட்டணியில் 'அரண்மனை 2' படத்திற்குதிட்டமிட்டார்கள். அவ்னிசினிமேக்ஸ் நிறுவனம் மூலம் இந்தப் படத்தை குஷ்பு தயாரிக்கிறார்.

சென்னையில் நேற்று முன்தினம் 'அரண்மனை 2' படத்தின் படப்பிடிப்பு தொடங்கி இருக்கிறது. சூரி சம்பந்தப்பட்ட நகைச்சுவைக் காட்சிகளோடு படப்பிடிப்பு தொடங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.








# பாஸ்வேர்ட் பாதுகாப்பில்லை

பாஸ்வேர்ட் பாதுகாப்பில் போதிய விழிப்புணர்வு இல்லை என்பதை, பிரிட்டன் மற்றும் அமெரிக்காவில் டெலி சைன் எனும் கைத்தொலைபேசி நிறுவனம் நடத்திய ஆய்வில் கண்டறிந்துள்ளது.

இணையவாசிகளில் ஐந்தில் ஒருவர் பாஸ்வேர்ட் விதியை மீறி வருவதாக இந்த ஆய்வு தெரிவிக்கிறது. அதாவது இவர்கள் பத்தாண்டுகளுக்கும் மேலாகத் தங்கள் பாஸ்வேர்டை மாற்றாமல் இருக்கிறார்கள். பாஸ்வேர்ட் தாக்குதலுக்கு இலக்காகாமல் இருக்க அவற்றை அடிக்கடி மாற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

இதுதான் பாஸ்வேர்ட் பயன்பாட்டின் பிரதான விதியாகக் கருதப்படுகிறது. அடிக்கடி மாற்றாமல் இருந்தால்கூடப் பரவாயில்லை. ஆண்டுக் கணக்கில் ஒரே பாஸ்வேர்டைப் பயன்படுத்துவது என்பது வேலையை எளிதாக்கும்.

47 சதவீதம் பேர் கடந்த ஐந்து ஆண்டுகளாக ஒரே பாஸ்வேர்டையே தொடர்ந்து பயன்படுத்தி வருவதாகவும் இந்த ஆய்வு தெரிவிக்கிறது. அது மட்டுமா, 73 சதவீத இணையக் கணக்குகள் அவற்றுக்கென பிரத்தியேக பாஸ்வேர்ட் இல்லாமல் பயன்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கிறது. அதாவது ஓர் இணையக் கணக்குக்குப் பயன்படுத்தும் பாஸ்வேர்ட் இன்னொரு இணையக் கணக்கை இயக்கவும் பயன்படுத்தும் நிலை பரவலாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வறுமை கல்விக்கு தடையாக இல்லை

## கிழக்கு மாகாண அமைச்சரான எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவிப்பு

அம்பாறை, ஜூன் 18

பாடசாலைகளிலுள்ள வளப் பற்றாக்குறையும் வறுமையும் கல்விக்கு ஒருபோதும் தடையாக அமையாது. இந்த கஷ்டங்களை அனுபவித்து கல்வியை தொடர்கின்ற பிரதேசங்களிலேயே கல்வியின் அடைவு மட்டம் உயர்ந்துள்ளது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளரும் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.ஐ.எம்.மன்சூர் தெரிவித்தார்.

சம்மாந்துறை சென்னல் சாஹிறா மகா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்ற முப்பெரும் விழாவில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு இன்று கல்விக்காகக் கூடுதல் நிதியை ஒதுக்குகின்றது. இது மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமாகும். எமது நாட்டில் இலவசக்கல்வி நடைமுறைப்படுத்தப் படுகின்றது. எனினும், பாடசாலைகளிலுள்ள சில வளப் பற்றாக்குறைகளை வைத்துக்கொண்டு கல்வியை பின்னோக்கான நிலைக்கு இட்டுச் செல்வது பொருத்தமற்றதாகும். இன்று சம்மாந்துறைப் பிரதேசத்தில்ஆசிரியப்பற்றாக்குறைநிவர்த்திக் கப்பட்டுள்ளது.– என்றார். (ற)

# கிழக்கு மீள்குடியேற்றத்துக்கு ஒருமித்து செயற்படுவோம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

திருகோணமலை, ஜூன் 18

கிழக்கு மாகாண மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக ஒருமித்து செயற்படுவோம் என கிழக்கு மாகாணசபைமுதலமைச்சர்ஹாபீஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார். கிழக்கு மாகாணசபையின் மாதாந்த சபை அமர்வு நேற்று முன்தினம் கூடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

சம்பூர் மீள்குடியேற்றம் மற்றும் பல இடங்களில் பூர்வீகமாக அம்மக்கள் வாழ்ந்த காணிகளை அவர்களிடம் கையளிக்கவேண்டும் என்ற நோக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருகின்றார். அதற்கு கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்டின் பெர்னாண்டோவின் தந்திரோபாயமான நகர்வுகளும் எமக்கு உறுதுணையாகவுள்ளன. எனினும், கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் எந்த இன மக்களாக இருந்தாலும், அவர்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக ஒரு மித்து செயற்படுவோம். – என்றார். (ற)




கொக்குவில் மேற்கு

சித்தி விநாயகர் (ஐயனார்) கோயில்

**மஹோற்சவம்**

எதிர்வரும் 22.07.2015 புதன்கிழமை

விநாயகப் பெருமானுக்கு கொடியேற்ற

விழாவுடன் வருடாந்த உற்சவம்

ஆரம்பமாகி தொடர்ந்து

பத்து (10) தினங்கள் நடைபெறும்

என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்

கர்மகர்த்தா

சு.சற்குணம்.


# ப.நோ.கூ. சங்க கிராமிய வங்கிக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிராமிய வங்கிக்கு தனியான கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப் படவுள்ளதாக சங்கத் தலைவர் மு.ஜெ. சுஜிந்திரன் தெரிவித்தார்.

தற்போது சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ஒரு பகுதியிலேயே கிராமிய வங்கியும் செயற்பட்டு வருகின்றது. இந்த நிலையில் கிராமிய வங்கிக்கு தனியான கட்டடம் ஒன்றை விரைவாக அமைப்பதற்கும் சங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. அத்துடன் கிராமிய வங்கியின் செயற்பாடுகளும் சங்கத்தால் அதிகரிக்கப்படுகிறது.

இதன் ஒரு கட்டமாகவே கிராமிய வங்கிக்கு தனியான கட்டடமும் அமைக்கப் படவுள்ளன. சங்க வளாகத்தில் இந்தக் கட்டடத்தை அமைத்து இந்த ஆண்டு இறுதிக்குள் திறந்து வைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த கிராமிய வங்கி நவீனவசதிகளுடன்அமைக் கப்பட்டு அதன் செயற்பாடுகளும் அதிகரிக் கப்படும்.

அங்கத்தவர்களின் வசதி கருதி புதிய கடன் திட்டங்களும் நடைமுறைப்படுத் தப்படும். கிராமிய வங்கியில் கூடுதலான வாடிக்கையாளர்களை இணைக்கும் செயற் றிட்டங்களும் முன்னெடுக்கப்படவுள்ளன. (ற-17)

# நடமாடும் சேவை

வலி.தென்மேற்கு, ஜூன் 18

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய இரு பிரதேசங்களைச் சேர்ந்த மக்களின் நலன்கருதி பாலிநகர் மகாவித்தியாலயத்தில் இன்று 18 ஆம் திகதி நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. மக்களின் கோரிக் கைக்கு இணங்க நடத்தப்படவுள்ள இந்த நடமாடும் சேவையில் வட மாகாண முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள், உறுப்பினர்கள், சகல திணைக் களங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள்.

இந்த நடமாடும் சேவையில் தீர்வு காணப்படாமல் இருக்கும் காணிப் பிரச்சினை, இறப்புப், பிறப்புப் பத்திரங்கள் உட்பட பல விடயங்கள் ஆராயப்பட்டுதீர்வு வழங்கப்படவுள்ளன. (ற-115)


குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் தேவஸ்தானம் கட்டட வேலைகளுக்கான கூலிக்

**கேள்விக் கோரிக்கை**

கீழ் வரும் வேலைகளுக்கான தகுதி வாய்ந்தவர்களும் ஆலய கட்டடத்தை ஆகமமுறைப்படி செய்து தரக்கூடியவர்களிடமிருந்தும் கீழ்வரும் வேலைகளுக்கான கூலிக்கோரிக்கை (கேள்விப் பத்திரங்கள்) குப்பிளான் கற்கரை கற்பக விநாயகர் ஆலயத்தின் பரிபாலன சபையினரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேற்படி வேலைகளுக்கான கூலி மதிப்பீடுகள் ஆலயத்தை நேரில் பார்வையிட்டு தற்போது அமைந்துள்ள அளவுப் பிரமாணங்களுக்கு அமைய மாற்றமின்றி மதிப்பீடுகள் தயாரிக்கப்படல் வேண்டும்.

பூரணப்படுத்திய கேள்விக்கோரிக்கைகள் செயலாளர், கற்கரை கற்பக விநாயகர் ஆலயம் குப்பிளான் ஏழாலை என்ற முகவரிக்கு நேரில் அல்லது பதிவுத் தபாலில் 2015.06.29 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் ஆராயப்பட்டு பரிபாலன சபை எடுக்கும் முடிவு இறுதியானதாகும். வேலைகள் ஆரம்பிக்க முன் வேலை கொள்வோன் ஆலயபரிபாலன சபையுடன் உடன்படிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

**வேலைகள் தொடர்பான விவரம்.**

**அ.** கருவூலம், அர்த்தமண்டபம் கருங்கல் வேலைக்கானது. கருவூலம் 9அடி4அங்குலம் X 9'X4" நீள அகலமும் 10' 6¼" உயரம் கொண்ட மூலஸ்தானமாகும்.

**ஆ.** அர்த்த மண்டபம், மகாமண்டபத் திருப்பம் வரை கருங்கல் திருப்பணியாகும். 7'X4¼" நீள அகலம்.

**இ.** மூலஸ்தானத்திற்கான விமானம் 12'X10¾" உயரங்கொண்டசிமெந்து திருப்பணி

**ஈ.** மகாமண்டபம் கட்டடத்திலிருந்து மேல்தளத்தை வில்லு மண்டபமாக மாற்றி அமைத்தல் (சிமெந்து வேலைக்குரியது).

மேற்படி வேலைகளின் கருங்கற்களின் அளவுப்பிரமாணத்தையும் அவற்றினை செதுக்குவதற்கான(வடிவமைப்பதற்கான கூலியும், நிர்மாணத்திற்கான கூலியும் தனித்தனியாக தரப்படல் வேண்டும்)

தொடர்பு: 077 103 8030
077 230 9939
(61024) (3.7.9) 077 328 9491

செயலாளர்,
தலைவர்,
ஆலய பரிபாலனசபை.



**மருத்துவ ஆய்வுகூட உதவியாளர் தேவை**

யாழ்.நகரில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள மருத்துவ ஆய்வு கூடத்திற்கு

- Biochemistry Analysis
- Haematology Analysis

பாவிக்கத் தெரிந்த, பழக விரும்பும் மருத்துவ ஆய்வு கூட உதவியாளர் தேவை. உங்களுடைய விண்ணப்பங்களை தெளிவான விலாசம், தொலை பேசி இலக்கம், சுயவிவரக் கோவை ஆகியவற்றுடன் கீழ் வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இலக்கம் : 5066

மே/பா. உதயன்,

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (61038) (3.11)



**ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி மாரி அம்மன் பண்டிதர் ஸ்ரீ ராமலு**

மெய்யன்பர்களே! T.P 076 770 0820

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல கைரேகை ஜோதிடர் வல்லுநர் கைரேகை மூலம் துல்லிய மான நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப் போகின்றவை, சாதகம், கல்வி, உத்தியோகம், திருமணயோகம், குழந்தைப்பாக்கியம், வெளிநாட்டுப்பயணம் பற்றிய விவ ரங்களை, பலன்களை குறைந்த செலவில் கூறுவார்.

இல 185, கஸ்தூரியார் வீதி ,யாழ்ப்பாணம்.
(நியூ லலிதா மாளிகை) மீனாட்சிதங்கமாடம் (ராஜா தியேட்டருக்கு அருகில்)
நேரம் காலை 7.30 மணி முதல் மாலை 6.30 மணி வரை பார்க்கப்படும்.


# நவசமசமாஜக் கட்சியின் கருத்தரங்கு நாளை

யாழ்ப்பாணம், ஜூன் 18

"தமிழரின் விடுதலைக்கான வழி" என்ற தொனிப்பொருளில், நவசமசமாஜக் கட்சி நடத்தும் கருத்தரங்கு, நாளை வெள்ளிக்கிழமை பி.ப 3.30மணிக்கு யாழ்.பொது நூலக மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

வே.பொன்னம்பலம் தலைமையில் நடைபெற உள்ள இந்த நிகழ்வில், கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்னா, ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞானத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ரெறன்ஸ் புரசிங்க ஆகியோர் முக்கிய உரையாற்றுவர்.

கட்சியின் அரசியல் குழுவின் உறுப்பினர் தோழர் வ.திருநாவுக்கரசுவும் பங்குபற்றும் இந்த நிகழ்வில் கலந்துரையாடலும் இடம்பெறும். (அ)







**யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி -யாழ்ப்பாணம்**
**கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர்தரம்-2015**

மேற்படி பயிற்சிநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைப் பொறுத்தவரை கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர சாதாரணதரப் பயிற்சி நெறியில் முதலாம் 2ஆம் பிரிவுகளில் சித்திபெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்

**அல்லது**

02. கூ.ப (சாதாரணதர) பயிற்சி நெறியில் மூன்றாம் பிரிவில் சித்தி பெற்று 2 வருடம் கூட்டுறவுச் சங்கத்தில் பணிபுரிந்த நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்.

**அல்லது**

03. க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்ற நிரந்தரம் பெற்ற கூட்டுறவுப் பணியாளர்கள்

**அல்லது**

04. வெளிவாரி மாணவர்களைப் பொறுத்து க.பொ.த (உயர்தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் ஏதாவது மூன்று பாடங்களில் சித்தி பெற்றவர்கள்

**அல்லது**

05. கூட்டுறவு பணியாளர் சாதாரண பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்

**விண்ணப்ப முடிவு திகதி:** 30.06.2015

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:**

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை,
வீரசிங்கம் கட்டடத் தொகுதி,
இல.12, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் .

விண்ணப்பப்படிவங்களை சபையில் பெற்று விண்ணப்பிக்கவும்.

*அதிபர், கூ.ப. கல்லூரி, யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### அமரர் விஜயலட்சுமி சபாரஞ்சிதம்

20.05.2015 புதன்கிழமை இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி விஜயலட்சுமி சபாரஞ்சிதம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (19.06.2015) வெள்ளிக்கிழமைமு.ப. 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் பங்கெடுத்து ஆறுதல் வழங்கிய அனைவருக்கும், கண்ணீர் அஞ்சலி வெளியிட்டு இறுதி மரியாதையில் கலந்து கொண்ட அனைவருக்கும் மனமார்ந்த நன்றி களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் வீதி, பருத்தித்துறை. — குடும்பத்தினர்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

### திருமதி சந்திரபூரணி பூபாலபிள்ளை



தோற்றம் 13.10.1948

மறைவு 20.05.2015

கடந்த 20.05.2015 சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக் கிருத்தியம் நாளை (19.06.2015) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும். மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அத்துடன் எமது தாயார் வைத்தியசாலையில் நோயுற்றிருந்த வேளை சிகிச்சை அளித்து சகல வழிகளிலும் உதவிய வைத்தியர்கள், தாதிமார்கள் அனைவருக்கும் மற்றும் இறைபதம் அடைந்தபோது சகலவழிகளிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மூலமும் மலர்வளையங்கள்வைத்தும், பதாகைகள் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் தேவையான உதவிகளை சேவையாக வழங்கிய அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

இல.63, கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (சி.18799) (45.3.7) பூபாலபிள்ளை - குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



### திருமதி நல்லம்மா பொன்னம்பலம்

மலர்வு 02.01.1937

உதிர்வு 09.07.2013

திதி : ஆனி பூர்வ பக்க துதியை

நவ மலராக இத்தரணியில் பூத்து
நறுமணம் மிக்க குணவதியாய் வாழ்ந்து
நாம் அனைவரதும் தவிக்க
நல் உலகம் அடைந்து விட்டாய் ....!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

டச்சு வீதி, மீசாலை மேற்கு. — குடும்பத்தினர்.

# 15 நாள்களில் நாய்களால் கடியுண்டவர்கள் 115 பேர்

### சாவகச்சேரி ஆதார மருத்துவமனை புள்ளி விவரங்கள் கூறுகின்றன

தென்மராட்சி, ஜூன் 18


சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் கடந்த 15 நாள்களில் 115 பேர் நாய்களால் கடியுண்ட நிலையில் சிகிச்சை பெற்றுள்ளனர். அவர்களில் 52 பேர் தெரு நாய்களால் கடியுண்டுள்ளனர் என்றும் அவர்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட்டுள்ளது என்றும் மருத்துவமனை புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலமாக கட்டாக்காலிகளாக வீதிகளில் அலையும் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து, அவற்றால் கடிபடுவோரின் எண்ணிக்கையும் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

வளர்ப்பு நாய்கள் மற்றும் விலங்கு விசர் நோயத் தடுப்பூசி மருந்து ஏற்றிய நாய்கள் போன்றவற்றால் கடிபடுவோருக்கு ஒரு வகை மருந்தும், கட்டாக்காலி நாய்களால் கடிபடுவோருக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூ மருந்தும் ஏற்றப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

கடந்த ஐந்து மாதங்களில் ( ஜனவரி, மே ) கட்டாக்காலி நாய்களால் கடியுண்ட 502 பேருக்கு சாவகச் சேரி ஆதார மருத்துவமனையில் விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து ஏற்றப்பட் டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-9)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் இராசேந்திரம் ஜெயச்சந்திரா

(வாத்தியார் -தொண்டைமானாறு)

கடந்த (20.05.2015) அன்று இறைபதம் எய்திய உடுப்பிட்டி அமெரிக்கன்மிஷன் பாடசாலை நாள்களில் வடமராட்சியின் தலைசிறந்த விளையாட்டு வீரனாகவும் (புளியடி ரெக்கேடர்)சில காலம் கொழும்பு விவேகானந்த சபையின் எழுதுவினைஞராக கடமையாற்றியவரும் திருகோணமலை பிரபல வர்த்தகர் நிலச்சுவாந்திரரும் ஆன காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் இரத்தினேஸ்வரி (தொண்டைமான் கருணாகரனின் வழித்தோன்றல் ஆண்டி அப்பர் வழித்தோன்றல்) தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற மலேசியா குவாந்தன் தனேஸ்வரி வில்வராஜா, காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி தில்லையம்பலம் குணேஸ்வரி சிவகாமி ஆண்டார் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற தங்கலீலா வதியின் கணவரும் கீதா, சந்திரன், தர்மினி ஆகியோரின் தந்தையும் சந்நிதி கோயிலில் சந்தனத் தொண்டு செய்தவரும் எல்லோராலும் வாத்தியார் என அன்பாக அழைக்கப்பட்டவருமான இராசேந்திரம் ஜெயச்சந்திரா அவர்களின் ஆத்மா சந்நிதி முருகனின் பாதார விந்தங்களில் நிரந்தரமாக தங்கி இளைப்பாற வேண்டுமென சந்நிதி வேலனைப் பிரார்த்திக்கும்.

கெத்தியகாடு, தொண்டைமானாறு.

குணா வில்வராஜா - மலேசியா
தில்லையம்பலம் முருகதாசன்
யோகலிங்கம் சிவகாமி ஆண்டார் (கனடா)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் ★ 01 . 01 . 1933

மறைவு ★ 21 . 06 . 2012

திதி: துதியை (18.06.2015)

### அமரர் அருணாசலம் கோபாலரத்தினம்

(உப தபாலதிபர்-நல்லூர்)

அன்பை மனதில் ஏற்றி அறிவை உளத்தில் தேக்கி
வளமாய் நாம் வாழ வழிகாட்டிய தெய்வமே
ஆண்டுகள் மூன்று கடந்தாலும்
உங்கள் அன்பு எமக்கு மறக்குமா?

88, பருத்தித்துறை வீதி, நல்லூர். — குடும்பத்தினர். (61041)(18.6.3)

## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 24.02.1944

மறைவு 19.05.2015

கடந்த 19.05.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் இளையதம்பி நடராஜா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

16/2, [illegible] வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். — குடும்பத்தினர்.

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு கண் வில்லைகள்

தென்மராட்சி, ஜூன் 18

சாவகச்சேரி மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவில் விழி வெண்படலத்தில் பூப் படர்வுக்குச் சிகிச்சை பெறும் நோயாளர்களுக்கு வழங்கவென ஒரு தொகுதி கண் வில்லைகள் நேற்று வழங்கப்பட்டுள்ளன.

சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்ட முன்னாள் ஆளுநர் லயன் ரஞ்சித் பெர்னாண்டோ கண்வில்லைத் தொகுதிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் ஊடாக சாவகச்சேரி மருத்துவமனைப் பொறுப்பதிகாரியிடம் வழங்கியுள்ளார்.

சாவகச்சேரி மருத்துவமனை கண் சிகிச்சைப் பிரிவுக்கு சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தினால் ஏற்கனவே 150க்கு மேற்பட்ட கண்வில்லைகள் வழங்கப்பட்டு அவை கற்றாக் ஏற்பட்ட நிலையில் சிகிச்சை பெற்றவர்களுக்கு சத்திரசிகிச்சை மூலம் பொருத்தப்பட்டிருந்தன. (ற-9)

## விபத்துக்களில் இருவர் காயம்

தென்மராட்சி, ஜூன் 18

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற வீதி விபத்துக்களில் சிக்கி காயமடைந்த இருவர் யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொடிகாமம் கச்சாய் வீதி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் இடம்பெற்ற வீதி விபத்தில் கொடிகாமம் ஐயனார் கோயிலடியைச் சேர்ந்த நல்லதுரை ஜெகதீபன் ( வயது–20 ) என்பவரும், நுணாவில் பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதியில் இடம்பெற்ற மற்றொரு விபத்தில் மிருசுவில் பழைய வாய்க்காலைச் சேர்ந்த பாக்கியநாதன் ரஜீவன் (வயது–35 ) என்பவரும் காயமடைந்தனர்.

குறித்த இருவரும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ற-9)

## சாவகச்சேரி மருத்துவமனைக்கு மருத்துவர்கள் நியமனம்

தென்மராட்சி, ஜூன் 18

சாவகச்சேரி மருத்துவமனையில் புதிதாக இரண்டு மருத்துவர்கள் நேற்று கடமைகளைப் பொறுப் பேற்றுள்ளனர். யாழ்.போதனா மருத்துவமனையில் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்த மருத்துவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், இரு மருத்துவர்கள் சாவகச்சேரி மருத்துவமனைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். (ற-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ அறிவை மேம்படுத்த மாணவர்களுக்குப் போட்டிகள்

## உலக சைவத் திருச் சபை நடவடிக்கை

தென்மராட்சி, ஜூன் 18

மாணவர்கள் மத்தியில் சைவ அறிவை ஏற்படுத்தும் செயற் திட்டங்களை உலக சைவத் திருச் சபையினர் பாடசாலைகளையும் ஆலயங்களையும் ஒன்றிணைத்து ஆரம்பித்துள் ளனர்.

இந்தத் திட்டத்தை அண்மையில் பல பாடசாலைகளில் மேற்கொண்டு மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளன. புத்தூர் வாதரவத்தை கேதுவுப் பிள்ளையார் ஆலயமும், புத்தூர் விக்னேஸ்வரா வித்தியாலயமும் இணைந்து மாணவர்களுக்கிடையிலான சைவ சமய பொது அறிவுப் போட்டியை நடத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கியுள்ளனர். இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் அனுசரணை வழங்கியிருந்தார்.

அத்துடன் கிளிநொச்சி நகர் சித்திவிநாயகர் ஆலயமும், கிளிநொச்சி சைவ மங்கையர் கழகமும் இணைந்து உலக சைவத் திருச் சபையின் பங்களிப்புடன் கிளிநொச்சி மத்திய கல்லூரி மற்றும் கிளிநொச்சி மத்திய வித்தியாலயம் ஆகியவற்றில் தரம் 4, தரம் 7, தரம் 11 ஆகிய வகுப்பு மாணவர்களுக்கிடையில் சைவ சமய-பொது அறிவுப் போட்டியை நடத்தினர். போட்டிகளில் கலந்து கொண்ட 300 மாணவர்களில் 270 மாணவர்கள் சித்தி பெற்றுள்ளனர்.

புத்தூர் கிழக்கு கன்னியர் வைரவர் ஆலயமும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியும் இணைந்து ஆலய அறநெறிப் பாடசாலை மாணவர்களிடையே சைவ சமய பொது அறிவுப் போட்டியை நடத்தி கடந்த 11ஆம் திகதி வெற்றி மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கியுள்ளன.

புங்குடுதீவு நான்காம் வட்டாரம் காளிகா பரமேஸ்வரி ஆலய பெருந் திருவிழாவையொட்டி ஆலய பரிபாலன சபையினரும், நான்காம் வட்டார சைவ இளைஞர் மன்றமும் இணைந்து புங்குடுதீவு பிரதேச பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சைவ சமய பொது அறிவுப் போட்டியை எதிர்வரும் 20 ஆம் திகதி ஆலய மண்டபத்தில் நடத்தவுள்ளனர்.

பரந்தன் குமரபுரம் முருகன் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினர், பரந்தன் இந்து வித்தியாலய மாணவர்களுக்கிடையிலான சைவ சமய பொது அறிவுப் போட்டியையும், முழங்காவில் செல்வ யோக சித்தி விநாயகர் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலய நிர்வாகத்தினரும் உலக சைவ திருச்சபையும் இணைந்து சைவ சமய விழுமிய பொது அறிவுப் போட்டியையும் நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட் டது. (ப-9)

# தொழில் வாய்ப்பற்றோர் குறித்து கணக்கெடுப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 18

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் தொழில் வாய்ப்பற்றோர் குறித்த கணக்கெடுப்பு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை அனைத்துக் கிராம சேவகர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படவுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர்பிரிவில்தொழில் வாய்ப்பற்று தொழில் தேடிக் கொண்டிருப்போரின் சரியான தொகையைக் கண்டறிந்து அவர்களது சுய விவரங்களைப் பெற்று, அவர்களுக்குப் பொருத்தமான தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் இந்தப் பதிவு நடவடிக் கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

எனவே குறித்த பிரதேசத்துக்கு உட்பட்ட தொழில் வாய்ப்பற்றவர்கள் தமது கிராம சேவகர் பிரிவுகளுடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு தெல்லிப் பழை பிரதேச செயலர் அறிவித்துள் ளார். (ஐ)

# மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் குறித்த மீளாய்வு

வரணி, ஜூன் 18

பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தொடர்பில் மீளாய்வு நடவடிக்கைகள் கொடிகாமம் பிரதேசத்தில் இடம்பெற உள்ளதாக தென்மராட்சி பிரதேச உதவிச் செயலர் செல்வி ரஞ்சனா நவரட்ணம் அறிவித்துள்ளார்.

இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 – 12 மணி வரை கச்சாய் கிராம அலுவலர் காரியாலயத்திலும், நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9 – 12 மணிவரை பாலாவி கிராம அலுவலர் காரியாலயத்திலும், அன்றைய தினம் பி.ப. 4 – 7 மணிவரை கொடிகாமம் வடக்கு கிராம அலுவலர் காரியாலயத்திலும், இந்த நடவடிக்கை இடம்பெறவுள்ளது. அதே சமயம் கொடிகாமம் மத்தி கிராம அலுவலர் காரியாலயத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 – 12வரை யும் மீளாய்வு இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் தமது பணம் பெறும் அட்டை, அடையாள அட்டை, பங்கீட்டு அட்டை ஆகியவற்றை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ப-122)

# பெண்ணை தாக்கியவருக்கு மறியல்

தென்மராட்சி, ஜூன் 18

வீட்டினுள் அத்துமீறி நுழைந்து குடும்பப் பெண்ணைத் தாக்கிய நபரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதிமன்றில் உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த 3ஆம் திகதி சாவகச்சேரி அல்லாரைப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்து மீறிப் பிரவேசித்த ஒருவர் அங்கிருந்த பாலசிங்கம் பேபி என்னும் பெண்ணைக் கோடரிப் பிடியால் தாக்கிக் காயப்படுத்தியுள்ளார்.

காயங்களுக்கு இலக்கான பெண் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து சாவகச்சேரி பொலிஸார் அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் குறித்த நபரை எதிர்வரும் 25ஆம் திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ப-9)

## மரண அறிவித்தல்கள்

### இராசு ரட்ணம்



77/56, இராமநாதன் றோட், கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசு ரட்ணம் (பிறவி) 16.06.2015 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகன் - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னன் - சுபத்திரை தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற இராசுவின் அன்பு மனைவியும் வரதராஜா (ஜேர்மனி), பரமேஸ்வரி (ஜேர் மனி), சுபத்திரா (லண்டன்), கலாமதி, சந்திரமதி(பெல்ஜியம்),புலேந்திரன்(பிரான்ஸ்)ஆகியோரின் அன்புத்தாயும் செல்வராசா, கமலாம்பாள் ஆகியோரின் சகோதரியும் வசந்தி, நாகேந்திரம், ரவிநாயகம், நவக்குமார்(சந்திரன்), புவனேந்திரன், பிறேமலதா ஆகியோரின் அன்பு மாமியும், கம்சன், பமிலிசா, நிருபன், தர்ஷிகன், பவீந்தன், முத்துக்கிஸ்ணன், அபிராமி, அஸ்மிதா, அரோன், அதீஸ் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (19.06.2015) வெள்ளிக் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு இராமநாதன் றோட், கலட்டியில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

77/56, இராமநாதன் றோட்,
கலட்டி.

தகவல்: குடும்பத்தினர்.
077 616 5282,
021 222 5139

### கனகரட்ணம் அருந்தேஸ்வரி



தோற்றம் : 29.12.1959
மறைவு : 14.06.2015

காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாவும் வவுனியா, பண்டா ரிக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரட்ணம் அருந்தேஸ்வரி (யசோ) 14.06.2015 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமசாமி பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பையா - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், கனகரட்ணத்தின் அன்பு மனைவி யும், அரவிந்தன் (கனடா), தவராணி (பிரான்ஸ்), அருள்ராசா (பிரான்ஸ்), இந்திராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், அன்சவா (கனடா), சச்சிதானந்தம் (பிரான்ஸ்), சிவதர்சினி (பிரான்ஸ்), கணநாதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், அஸ்வின், எஜிவின், தேனுஜன், சைந்தவி, சாளினி, பிரவீண், சகாணா, பிரதீஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கனகேஸ்வரி, விக்கினேஸ்வரன், மகேஸ்வரன், சந்திரேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேஸ்வரி, புவனேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின்இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக் கிழமை காலை 7.00 மணிக்கு பண்டாரிக்குளத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தச்சனாங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


இல.91/5, [illegible],
பண்டாரிக்குளம்,
வவுனியா. T.P.024 567 0157

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

(58597) (45.7.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்



### திருமதி நாகராஜேஸ்வரி இராசசிங்கம்

காரைநகரைச் சேர்ந்த யாழ்ப்பாணம் கன்னாதிட்டி ஒழுங்கை, தெகிவளை வண்டவர்ட் பிளேஸ் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. இ.நாகராஜேஸ்வரி அவர்கள் 15.06.2015 திங்கட்கிழமை அன்று கொழும்பில் காலமானார். அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கதிரவேல் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி செல்லையா தம்பதிகளின் அன்பு மருமகளும், இராசசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரி, காலஞ்சென்ற முருகேசு, தியாகராசா (அவுஸ்திரேலியா), புவனேஸ்வரி (அவுஸ்திரேலியா), நடராசா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், ஜீவகன் (அவுஸ்திரேலியா), ஜயந்தன் (அவுஸ்திரேலியா), ஜனகன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவானி, சாந்தினி, பிருந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், வினோ, ஆரணி, ஸ்ரீசக்தி ஆகியோரின் அன்பு பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் 18.06.2015 இன்று வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை ஈமக்கிரியைகள் நடைபெற்று, பின்னர் கல்கிசை பொது மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்.

Tel: 011 2734383 / 077 3868525 – ஜீவகன் / 075 5227603 – ஜனகன்

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 | 16 |
| 06 | 06 |
| 1982 | 2015 |



### அமரர் பிரியசாந்தி ஜெயக்குமரன் (சாந்தி)

(முகாமைத்துவ உதவியாளர் - கமநல அபிவிருத்தி திணைக்களம் - மன்னார்)
கறுக்காகுளம் - வட்டக்கந்தல் - மன்னார்)

கறுக்காக்குளம், வட்டக்கந்தல் மன்னாரைச் சேர்ந்த பிரியசாந்தி ஜெயக்குமரன் அவர்கள் 16.06.2015 அன்று காலமானார். இவர் மன்னார் பிரதான வீதியை சேர்ந்த இராசரெட்ணம் ஜெயக்குமரன் (கடினப் பந்து பயிற்சியாளர் - மன்னார்) அவர்களின் அன்பு மனைவியும், சந்தியோகு சந்தாள் தம்பதிகளின் அன்பு மகளும், மன்னார் காலஞ்சென்ற இராசரெட்ணம் சசி தம்பதிகளின் மருமகளும், சமிஷிகா, சாக்ஷிகா, ஆகியோரின் பாசமிகு தாயும், அன்ரனிதாஸ் புஸ்பானந்தன், நோபேட் தர்மேந்திரன் ஆகியோரின் சகோதரியும், யூட் சர்வானந்தன், சதிஸ்குமார், தர்ஷினி, அனு ஆகியோரின் மைத்துணியும் ஆவார். அன்னாரின் இறுதிச்சடங்குகள் கறுக்காகுளத்திலுள்ள அவரின் இல்லத்தில் இடம்பெற்று 18.06.2015 பி.ப 1.00 மணிக்கு கறுக்காக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு காத்தான்குளம் பொதுச் சேமக்காலையில் புகழுடல் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்: தந்தை ஆ.சந்தியோகு, கறுக்காக்குளம், வட்டக்கந்தல்
தொடர்பு: 0775 716 655

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சி மாவட்ட தொண்டர் ஆசிரியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை கிளிநொச்சி எடிசன் கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட தொண்டராசிரியர் சங்க தலைவர் இ.ஜெயராஜ் தெரிவித்துள்ளார்.

2010ஆம் ஆண்டுக்கு முன்பிலிருந்து இன்று வரை பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாக தொடர் பணியில் ஈடுபடும் தொண்டராசிரியர்களுக்கே இந்த கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், எதிர்கால திட்டங்கள் சம்மந்தமான தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்பட உள்ளதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளார். (ற–21)

# சாவகச்சேரி நகர சபை நடத்தும் குறைகேள் சேவைக்கு வரவேற்பு

## சபைத் தலைவர் தேவசகாயம்பிள்ளை தெரிவிப்பு

தென்மராட்சி, ஜூன் 18

சாவகச்சேரி நகர சபையால் வட்டார ரீதியில் நடத்தப்படும் நடமாடும் குறைகேள் சேவை மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது என்று நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார்.

நகரசபையினால் அறிவிக்கப்படும் குறைகேள் நிலையங்களில் உரிய நேரத்துக்கு வரும் மக்கள் தங்கள் குறைபாடுகளைத் தெரிவித்து தீர்வ பெற்றுச் செல்வதுடன் நகரசபைக்குச் செலுத்த வேண்டிய ஆதன வரி மற்றும் வாகன, விலங்கு வரி போன்றவற்றையும் செலுத்திவருகின்றனர்.

நகரசபையால் ஆண்டுதோறும் வருடத்தின் முதல் மாதத்தில் நகர சபைக்குச் செலுத்த வேண்டிய ஆதன வரி செலுத்துவதற்கு கழிவு வழங்கப்படுவதால் பெரும் எண்ணிக்கையிலான வரியிறுப்பாளர் தமது ஆதனத்துக்குரிய ஆதன வரியை வருட ஆரம்பத்தில் 10 வீத கழிவுடன் செலுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் நகர சபையினர் கடந்த மாதம் வட்டார ரீதியாக குறைகேள் நடமாடும் சேவை நிலையங்களை நடத்தி மக்களின் குறைகளை அறிந்து தீர்வுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டனர். அதன் பிரகாரம் முதன் முறையாக நான்காம் வட்டாரமான கல்வயல் பிரிவில் கடந்த மாதம் குறைகேள் சேவை நிலையம் நடத்தப்படுமென அறிவித்திருந்தனர்.

அன்றையதினம் சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர், செயலாளர், கணக்காளர் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களென பலர் கலந்து கொண்டனர்.

அங்கு கலந்து கொண்ட பெரும்பாலான மக்களால் முன்வைக்கப்பட்ட குறையாக ஜனவரி மாதத்தில் சபைக்குச் செலுத்த வேண்டிய ஏதுநிலை காணப்படாததால் ஆதன வரி, விலங்கு, வாகன வரி, வியாபார வரி போன்றவற்றை இந்த குறைகேள் நிலையத்தில் செலுத்த நடவடிக்கை மேற் கொள்ளவேண்டுமென கோரிக்கை விடுத்தனர்.

அதையடுத்து சபை அலுவலகத்திலிருந்து உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்பட்டு வரி அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டன. அன்று பெரும் எண்ணிக்கையிலான வரியிறுப்பாளர்கள் கலந்து கொண்டதால் மறு நாளும் நடமாடும் சேவையை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. இரு தினங்களும் ஆதன வரி விலங்கு, வாகன வரி, வியாபார வரி ஆகியவற்றின் மூலம் 77ஆயிரம் ரூபா அறவிடப்பட்டது.

அதன் பின்னர் ஒன்பதாம் வட்டாரம், ஆறாம் வட்டாரம் ஆகிய பிரிவுகளிலும் குறைகேள் நடமாடும் சேவை நிலையங்கள் நடத்தப்பட்ட போது பெரும் எண்ணிக்கையான வரியிறுப்பாளர்கள் தமது ஆதனங் களுக்குரிய வரிகளையும் செலுத்தியுள்ளனர்.

நடமாடும் சேவையில் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளை பெருமளவில் வரியிறுப்பாளர்கள் பெற்றுக் கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–9)

## குடும்பஸ்தரைக் காணவில்லை என முறைப்பாடு

தென்மராட்சி, ஜூன் 18

வீட்டிலிருந்து வேலைக்குச் சென்ற குடும்பஸ்தரொருவர் கடந்த 12 தினங்களாக வீடு திரும்பவில்லையென அவரது மனைவியால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய் யப்பட்டுள்ளது.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான வரணி குடமியனைச் சேர்ந்த சிவராசா சிவயோகராசா (வயது–41) என்பவரையே காணவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது.

வழமை போன்று கடந்த ஆறாம் திகதி வேலைக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சைக்கிளில் சென்றார் என்றும்–அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லை என்றும்–முறைப்பாட்டில்தெரிவிக்கப்பட்டுள்ளது.(ற–9)

## ஊஞ்சலில் இருந்து வீழ்ந்து சிறுவன் காயம்

தென்மராட்சி, ஜூன் 18

ஊஞ்சலிலிருந்து தவறி வீழ்ந்து காயங்களுக்குள்ளானர் என்று தெரிவித்து 7 வயது பாடசாலை மாணவன் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான்.

உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவனான ஜஸ்மின் நியூட்டன் நிதர்சன் ( வயது –7 ) என் னும் மாணவனே இவ்விதம் சிசிக்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளவராவார்.(ற–9)

# இறால் பண்ணைக்கு எதிராக பட்டிப்பளையில் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, ஜூன் 18

மட்டக்களப்பு, பட்டிப்பளைப் பிரதேசத்தில் இறால் வளர்ப்புக்காக 94 ஏக்கர் சதுப்பு நிலத்தை அரசியல்வாதியொருவருக்கு குத்தகைக்கு வழங்கவேண்டாம் என்று கூறி பிரதேசவாசிகளினால் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணியொன்று முன்னெடுக்கப்பட்டது.

இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்படுவதனால், அங்குள்ள மக்கள் பாதிக்கப்படுவதாகவும் அதனை தடுத்து நிறுத்தவேண்டும் என்றும் ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டோர் கோரியுள்ளனர்.

குறித்த இறால் பண்ணையால் குடிநீர் உவர் நீராக மாற்றமடைந்து வருவதுடன், வேளாண்மை செய்கையாளர்களும் இதன் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

கால்நடை வளர்ப்பாளர்கள் இங்கு கால்நடைகளை வளர்க்கமுடியாத நிலையேற்பட்டுள்ளதுடன், தமது வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த இறால் பண்ணை ஆரம்பிக்கப்பட்ட காலம் தொடக்கம் பிரதேச மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்புத் தெரிவித்துவந்த நிலையில் அவற்றின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருந்ததாகவும் பின்னர், சிலர் தனிப்பட்ட முறையில் பணம் சம்பாதிப்பதற்காக இதனை பயன்படுத்திவருவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த இறால் பண்ணை செயற்படுவதன் காரணமாக மகிழடித்தீவு, முதலைக்குடா, தாழையடித்தெரு, பண்டாரியாவெளி, படையாண்டவெளி மக்கள் குடிபெயரும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் இங்கு குற்றஞ்சாட்டப்பட்டது.

மக்களின் இந்தக் கோரிக்கை நியாயமானது என தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா, இந்தப் பிரச்சினையை, தீர்க்க உரியவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இங்கு கோரிக்கை விடுத்தார்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் மகிழடித்தீவு, முதலைக்குடா, முனைக்காடு, தாளையடித்தெரு ஆகிய கிராம மக்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். மகிழடித்தீவு சந்தியிலிருந்து ஆரம்பமான பேரணி பட்டிப்பளை பிரதேச செயலகம்வரை சென்றது. பேரணியின் இறுதியில் பிரதேச செயலாளர் ந.சத்தியானந்துக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சுற்றாடல் அதிகார சபையினருக்கும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மனுக்களை கையளித்துள்ளனர். (ற)

## நெற்பயிர் அழிவு நட்டஈட்டை பெற முடியும்

கடந்த ஆண்டு இடம்பெற்ற நெற்பயிர் அழிவு தொடர்பாக நட்டஈடு கோரி விண்ணப்பித்த பயனாளிகள் தொடர்பான காசோலைகள் சில இதுவரை பயனாளிகளால் பெறப்படவில்லை என தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

இதுவரை இந்த நட்டஈட்டுக்கான காசோலைகளை பெறாதவர்கள் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் சரியான வங்கிக் கணக்கு இலக்கத்தைதரும்பட்சத்தில் அந்தக் காசோலைகளை அவர்களது வங்கிக் கணக்கில் வரவில் வைக்க ஏற்பாடு செய்யப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஒரு கிழமைக்குள் அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறும் தவறும் பட்சத்தில் அந்தக் காசோலைகள் தொடர்பான பணம் அரச வரு மானத்தில் கணக்குக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (ற–122)


**HOTEL ROOM BOY தேவை**

யாழ். நகரின் மத்தியில் அமைந்துள்ள தங்குமிட விடுதிக்கு றூம்போய் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தொடர்பு: 021 222 4605, 071 990 6565
077 269 9052

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணம்-கொழும்பு பேருந்து ஆசன பதிவகத்துக்கு பதிவாளர் தேவை. குறிப்பு:- ஆண்கள் மட்டும். வேலை செய்ய ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 573 6003

**மணமகள் தேவை**

இந்திய குருக்கள் வம்சாவளியைச் சேர்ந்த. 1969 இல் பிறந்த சித்திரை நட்சத்திரம், பாரத்வஜ கோத்திரத்தைச் சேர்ந்த இந்தியாவில் அரச ஊழியராகப் பணிபுரியும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்பட மாட்டாது. சம்பந்தப்பட்டவர்கள் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு : 077 423 4807
(61226) (3.11)

**தையல் பயிற்சி நடைபெறுகிறது**

யுவதிகளுக்கான இலவச தையல் பயிற்சி வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருப்பதால் இந்த வகுப்பில் கலந்து கொள்ள விரும்பும் பெண்கள் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: நிதா கோகுலம்
(பெண்கள் சிறுவர் நலன்புரி நிலையம்)
நந்தாவில் அம்மன் ரின் வீதி
கோண்டாவில்
தொ.இல. 077 888 6102,
077 815 4345
(61019) (3.11)

**காணவில்லை**



மீசாலையைப் பிறப்பிடமாகவும் குடமியனை வசிப்பிடமாகவும் கொண்ட
சிவராசா சிவயோகராசா
கடந்த 06.06.2015 சனிக்கிழமை வீட்டில் இருந்து புறப்பட்டு இதுவரை திரும்ப வில்லை. இவரைக் கண்டவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும் (தகுந்த சன்மானம் வழங்கப்படும்.)
தொடர்பு: 077 466 2736,
077 135 0441
(41187)(3.7.9)

**வீடு வாடகைக்கு உண்டு**

இல. 20 கிருஷ்ணபிள்ளை ஒழுங்கை,ஈச்சமோட்டை,கண்டுக்குளி யாழ்ப்பாணத்தில் 4 அறைகள் கொண்ட முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்டதும் இணைந்த குளியலறை வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு:
077 346 4736


# பாவனைக்கு உதவாத பழங்கள் காத்தான்குடியில் சிக்கின

## பொதுச் சுகாதார பரிசோதகர்களின் திடீர் சோதனையில்



காத்தான்குடி, ஜூன் 18
காத்தான்குடியில் மனித பாவனைக்கு உதவாத அழுகிய பெருந்தொகையான பழங்கள்

காத்தான்குடி பிரதான வீதியில் அமைந்துள்ள பழங்கள் விற்பனை நிலையங்கள் சுகாதார பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அதன்போது மனித பாவனைக்கு தவாத பெருந்தொகையதான பழங்கள் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் யு.எல்.நசிர்தீனின் ஆலோசனையின் பேரில் காத்தான் குடி மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.ஐ.றபீக் அவர்களின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் இந்தத் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது மனித பாவனைக்கு உதவாத அழுகிய பெருந்தொகையான மாம்பழங்கள், தோடம் பழங்கள் என 25 கிலோ பழங்கள் மற்றும் முறையாகக் களஞ்சியப்படுத்தப்படாத 40 குளிர்ப்பான போத்தல்கள் என்பவற்றையும் அதிகாரிகள் கைப்பற்றினர்.

இந்த நிலையில், இவற்றை அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இவற்றை விற்பனை செய்த வியாபாரிக்கு எதிராக நீதிமன்றத்தின் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் காத்தான்குடி மேற்பார்வை பொதுச் சகாதார பரிசோதகர் எம்.ஐ.றபீக் தெரிவித்தார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியாக பயணம் செய்ய உதவும் சாதனம்

தனி நபர் ஒருவர் பயணம் செய்யும் வகையிலான சாதனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இந்தச் சாதனத்துக்கு Tricopter என பெயரிடப்பட்டுள்ளது. ஹங்கேரியிலுள்ள Miskolc Airfield நிறுவனத்தில் பணிபுரியும் குழு ஒன்றினால் இந்தச் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தச்சாதனம் முதன் முறையாக ஒரு நிமிடம் 31 செக்கன்கள்வரை பறக்க வைக்கப்பட்டு வெற்றிகர மாக பரீட்சிக்கப்பட்டுள்ளது. அடுத்தகட்டமாக 15 தொடக்கம் 20 நிமிடங்கள்வரை பறக்கக்கூடியதாக வடிவமைக்கப் படவுள்ளதுடன், இதனைத் தொடர்ந்து 30 தொடக்கம் 40 நிமிடங்கள் வரை பறக்கும் அளவுக்கு மேம்படுத்தப்பட வுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இந்த முயற்சி வெற்றி பெற்றால் எதிர்காலத்தில் இது போக்குவரத்து நடவடிக் கைகளில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என எதிர் பார்ப்பதாக இதனை வடிவமைத்துள்ள குழு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.





# அதியுயர் துல்லியம் வாய்ந்த HD புகைப்பட பிரேம்கள்

Artkick எனும் நிறுவனம், அதியுயர் துல்லியம் வாய்ந்த (HD) புகைப்பட பிரேம்களை உருவாக் கியுள்ளது. Artkick LOOK எனும் பெயருடைய இந் தப் பிரேம்களில் facebook, Flicker, Dropbox, Insta gram போன்றவற்றிலிருந்து சுமார் 17 மில்லியன் வரையான புகைப்படங்களை பகிரக்கூடிய் வகை யில் வடிவமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். இந்தப் பிரேமானது நிதி திரட்டல் செயன்முறைக்காக தற்போது Kickstarter தளத்தில் விளம்பரப்படுத் தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# Samsung Galaxy S6 Edge Plus விரைவில்



சம்சுங் நிறுவனம் அண்மையில் Samsung Galaxy S6 மற்றும் Samsung Galaxy S6 Edge ஆகிய இரு ஸ்மார்ட் கைப்பேசிகளை அறிமுகம் செய்திருந்தது.

இந்தக் கைப்பேசிகள் மக்கள் மத்தியில் சிறந்த வரவேற்பைப் பெற்ற தைத் தொடர்ந்து சில மாற்றங்களை உள்ளடக்கியதாக Samsung Galaxy S6 Edge Plus எனும் புதிய கைப்பேசியை அறிமுகம் செய்யவுள்ளது. 5.7 அங்குல அளவு, 2560 x 1440 Pixel Resolution உடைய தொடுதிரையைக் கொண்டுள்ள இந்தக்கைப்பேசியானது Android 5.1.1 Lollipop இயங்கு தளத்தில் செயற்படக்கூடிய வகையில் உருவாக்கப் பட்டுள்ளது. மேலும் பிரதான நினைவகமாக 3GB RAM, 16 மெகாபிக்சல்களை உடைய பிரதான கமரா, 5 மெகாபிக்சல்களை உடைய வீடியோ அழைப்புக்களை ஏற்படுத்துவதற்கான கமரா என்பனவும் இதில் அடங்கியுள்ளன.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுஷ்மா சுவராஜை பதவி விலகக் கோரி காங்கிரஸ் கட்சி தீவிர போராட்டம்



புதுடில்லி, ஜூன் 18

இந்திய மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜை பதவி விலகக்கோரி காங்கிரஸ் தொண்டர்கள் டில்லியில் நேற்று தீவிர போராட்டத்தில் ஈடுபட்டனர். அதில் அவரது உருவப் பொம்மையும் எரிக்கப்பட்டது.

ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி தலைவராக இருந்த லலித்மோடி நிதிமுறைகேட்டில் ஈடுபட்டமை தெரியவந்துள்ளது. அதனால் அவருக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வாழ்நாள் தடை விதித்தது. ஊழல்முறைப்பாடுசுமத்தப் பட்டதும் லலித்மோடி தலைமறைவாகி லண்டனில் குடியேறினார்.

அவர் லண்டனில் இருந்து போர்த்துக்கல் செல்வதற்கு சுஷ்மா சுவராஜ் உதவியதாக தகவல் வெளியானது. அதற்காக இங்கிலாந்தின் நாடாளுமன்ற உறுப்பினருக்குசுஷ்மா சுவராஜ் கடிதம் எழுதிய தகவல் வெளியானதால் அவருக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அவர் பதவி விலக வேண்டும் என்று அனைத்து எதிர்க்கட்சிகளும் குரல் கொடுத்து வருகின்றன.

ஆனாலும், லலித்மோடி தனது மனைவிக்கு அறுவை சிகிச்சை நடைபெற இருப்பதாக கூறியதால் மனிதாபிமான அடிப்படையிலேயே தான் உதவி செய்ததாக சுஷ்மா சுவராஜ் கூறியுள்ளார். சுஷ்மா சுவராஜ் தனது மத்திய அமைச்சர் பதவியை விட்டு விலக வேண்டும் என்று காங்கிரஸ் குரல் கொடுத்து வருகிறது.

நேற்று காங்கிரஸ் தொண்டர்கள் தீவிர போராட்டத்தில் இறங்கினர். காங்கிரஸ் மாணவர் பிரிவான தேசிய மாணவர் சங்கத்தினர் நேற்று டில்லி சப்தர்ஜங் வீதியில் உள்ள சுஷ்மா சுவராஜ் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதனால் பொலிஸார் சுஷ்மா சுவராஜ் வீட்டை சுற்றிலும் தடுப்புகள் அமைத்து பலத்த பாதுகாப்புக்கு ஏற்பாடு செய்தனர்.

திடீரென காங்கிரஸ் தொண்டர்களில் ஒரு பகுதியினர் அந்தத் தடுப்புகளைத் தாண்டி சுஷ்மா சுவராஜ் வீட்டை நோக்கிச் செல்ல முயன்றனர். பொலிஸார் அவர்களைத் தடுக்க முயன்றபோது, பொலிஸாருக்கும் காங்கிரஸ் தொண்டர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. சுஷ்மா சுவராஜின் வீட்டை நோக்கி செல்ல முயன்ற 10 காங்கிரஸ் தொண்டர் களை பொலிஸார் கைது செய்தனர்.

சுஷ்மா சுவராஜ் உடனடியாக தனது பதவியை விட்டு விலக வேண்டும். அவர் மீது கூறப்படும் முறைப்பாடுகள் குறித்து சிறப்பு விசாரணை நடத்தப்பட்டு உண்மை வெளியே கொண்டுவரப்பட வேண்டும் என்று தேசிய மாணவர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ் மகளிர் பிரிவினர் டில்லி அசோகா சாலையில் உள்ள பா.ஜனதா தலைமை அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அதன் போது திடீரென ஒரு பிரிவினர் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் சுஷ்மா சுவராஜ் ஆகியோரின் உருவப்பொம்மைகளை தீவைத்து எரித்தனர்.

சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட சுஷ்மா சுவராஜ் இன்னமும் பதவியில் தொடர்வதை ஏற்றுக் கொள்ளவே முடியாது. இது முற்றிலும் சட்டவிரோதமானது. அவர் உடனடியாக பதவியை விட்டு விலக வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தியுள்ளனர். (ஐ)

## சீனாவில் முதல் யோகா கல்லூரி

பீஜிங், ஜூன் 18

இந்தியப் பிரதமர் நரேந் திர மோடி மேற்கொண்ட சீனப் பயணத்தின் போது, இரு நாட்டு அரசுகளுக்கிடையே கையெழுத்தான ஒப்பந்தங்களின் விளைவாக அங்கு முதலாவது யோகா கல்லூரி ஆரம்பிக்கப் படவுள்ளது.



சீனாவின் யுனான் மின்சு பல்கலைக் கழகத்தில் யோகா கல்லூரி ஒன்றை இந்தியா ஆரம்பித்துள்ளது.

இந்தியாவிலிருந்து சீனா சென்றுள்ள 20 யோகா ஆசிரியர்களைக் கொண்டு இன்றுமுதல் செங்டு நகரில் ஆயிரம் சீன மாணவர்களுக்கு 5 நாள் யோகா பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. ஏற்கனவே, சர்வதேச யோகா தினத்தன்று சீனாவின் அனைத்து நகரங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்த எந்தவித நிபந்தனையும் இன்றி அந்த நாட்டின் அரசு அனுமதி வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 402 விவசாயிகள் தற்கொலை

புதுடில்லி,ஜூன் 18

மராட்டிய மாநிலம் மரத்வாடா மண்டலத்தில் இந்த வருடம் 402 விவசாயிகள் தற்கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரத்வாடா மண்டலத்தில் நாளுக்கு நாள் விவசாயிகளின் தற்கொலைச் சம்பவங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்த நிலையில் கடந்த வாரங்களில் மட்டும் மேலும் 24 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டதாக தகவல் வெளியாகியுள்ளது. இதன்மூலம் மராத்வாடா மண்டலத்தில் உள்ள 8 மாவட்டங்களில் இந்த வருடத்தில் இதுவரை தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை 402 ஆக உயர்ந்துள்ளது. வறட்சி, தொடர் நஷ்டம், விவசாய நிலம் விளைச்சலை இழத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் விவசாயிகள் தற்கொலை செய்வது அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் அதிகபட்சமாக பீட் மாவட்டத்தில் 120 விவசாயிகளும், குறைந்த பட்சமாக ஹிங்கோலி மாவட்டத் தில் 17 விவசாயிகளும் தற்கொலை செய்து கொண்டதாகத் தகவல்கள் கூறுகின்றன. (ஐ)

## அணு ஆயுத ஏவுகணைகள் இராணுவத்தில் சேர்க்கப்படும்

### புடின் அறிவிப்பு

மொஸ்கோ, ஜூன்18



கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அதிநவீன அணு ஆயுத ஏவுகணைகள் இராணுவத்தில் சேர்க்கப்படும் என்ற விளாடிமிர் புடின் அறிவிப்பால் மீண்டும் பனிப்போர் ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளது.

கடந்த சில நாள்களுக்கு முன்பு ரஷ்யாவை எதிர்க்கொள்ளும் பொருட்டு ஐரோப்பாவில் உள்ள நேட்டோ நாடுகளில் பயங்கர ஆயுதங்களை குவிக்க அமெரிக்கா தயாராகிவருவதாகத் தகவல் வெளியானது. தற்போது அந்த அறிவிப்புக்குப் போட்டியாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஓர் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.


இந்த வருடம் புதிதாக 40 இற்கும் மேற்பட்ட அதிநவீன அணு ஆயுத ஏவுகணைகள் இராணுவத்தில் சேர்க்கப்படும். அந்த ஏவுகணைகள் அதிநவீன தொழில் நுட்பத்துடன் கூடிய நவீன ஏவுகணை எதிர்ப்புகளை சமாளிக்கும் திறனுடன் இருக்கும்' என தெரிவித்துள்ளார். இந்த அறிவிப்பு மூலம் அமெரிக்கா – ரஷ்யா இடையே மீண்டும் பனிப்போர் ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

## ஆப்கானிஸ்தானில் அதிரடி; 83 தீவிரவாதிகள் சாவு

காபூல், ஜூன் 18

ஆப்கானிஸ்தானில் இராணுவம் நடத்திய அதிரடித் தாக்குதலில் 83 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர். ஆப்கானிஸ்தானில் 9 மாகாணங்களில் தீவிரவாதிகளை குறிவைத்து, அந்த நாட்டின் இராணுவம் அதிரடித் தாக்குதல்களை நடத்தியுள்ளது. அந்தத் தாக்குதல்களில் 83 தீவிரவாதிகள் கொன்று குவிக்கப்பட்டனர். தீவிரவாதிகளின் 8 மறை விடங்கள் தகர்க்கப்பட்டன. ஏராளமான ஆயுதங்கள், வெடி பொருள்கள் கைப்பற்றப்பட்டன. 53 சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டன. இராணுவத்தினர் தரப்பில் 8 வீரர்கள் உயி ரிழந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இந்த வருடம் ஜனவரி மாதம், தீவிரவாதிகள் மீதான தாக்குதல் பொறுப்பை நேட்டோ படையினரிடம் இருந்து உள்நாட்டுப் படையினர் ஏற்றனர் என்பது நினைவு கூரத்தக்கது. (ஐ)



## அரசியல் தலைவருக்கு தூக்குத் தண்டனை

### பங்களாதேஷ் நீதிமன்றம் உத்தரவு

டாக்கா, ஜூன் 18



பங்களாதேஷின் ஜமாத் இ இஸ்லாமி கட்சியின் 2 ஆவது பெரிய தலைவர், அலி ஆசான் முகமது முஜாகித். சுதந்திரப் போரின் போது, அவர் பாகிஸ்தானுக்கு ஆதரவாகச் செயல்பட்டார்.

போரில் பாகிஸ்தான் தோல்வி அடைவது உறுதியான நிலையில், ஏராளமான விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், பத்திரிகையாளர்கள் அவர்களது வீடுகளில் இருந்து கடத்திவரப்பட்டு கொடூரமான வகையில் கொலை செய்யப்பட்டனர். இதுதொடர்பாக, அலி ஆசான் முகமது முஜாகித் மீது வழக்குத் தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த டாக்கா சர்வதேச குற்ற நீதிமன்றம் அவருக்கு சாவுத் தண்டனை விதித்து கடந்த 2013 ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கியது. அந்தத் தீர்ப்பை கண்டித்து அவரது ஆதரவாளர்கள் நாடு முழுவதும் போராட்டங்களை நடத்தினர். தீர்ப்பை எதிர்த்து அந்த நாட்டின் உயர் நீதிமன்றில் மேல் முறையீடு செய்தனர். அந்த வழக்கில் உயர் நீதிமன்றமும் சாவுத் தண்டனையை உறுதிப்படுத்தித் தீர்ப்பளித்தது. அந்த வழக்கில் மறு ஆய்வு மனுவோ, ஜனாதிபதியிடம் கருணை மனுவோ தாக்கல் செய்யாத பட்சத்தில் அவர் விரைவில் தூக்கில் போடப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஒரு சோகம்: 6 பேர் சாவு



வொஷிங்டன்,ஜூன் 18
அமெரிக்காவில் பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றின்போது கட்டடத்தின் மேல் மாடிக் கட்டடம் இடிந்து விழுந்ததில் 6 மாணவர்கள் உயிரிழந்துள்ளனர்.
அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக்கழகத் துக்கு அருகாமையில் உள்ள விடுதியின் நன்காவது மாடிக்கட்டடத்தில் மாணவர் ஒருவரின் பிறந்த நாள் கொண்டாட்டம் இடம்பெற்றது. 14 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் அந்தப் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் பங்கு பற்றியிருந்தனர். அதன் போது திடீரென மாடிக்கட்டடம் இடிந்து விழுந்துள்ளது. அந்தச் சம்பவத்தின் போது 6 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், மேலும் 7 மாணவர்கள் பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# எகிப்து முன்னாள் ஜனாதிபதிக்கு ஆயுள் மற்றும் சாவுத் தண்டனை



கெய்ரோ, ஜூன்18
எகிப்தின் முன்னாள் ஜனாதிபதி முகம்மது மொர்சி மீது சிறைக்கைதிகள் தப்பிச் செல்வதற்கு உதவியாக இருந்ததாக தொடரப்பட்ட வழக்கில், விதிக்கப்பட்ட சாவுத் தண்டனையை அந்த நாட்டின் நீதிமன்றம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.
எகிப்தில் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட முதலாவது ஜனாதிபதி முகமது மொர்சி ஆவார். முப்பதாண்டு களுக்கும் மேலாக பதவியில் இருந்த ஹோஸ்னி முபாரக்கை கடந்த 2012 ஆம் ஆண்டில் பதவி யிலிருந்து இறக்கிவிட்டு ஜனாதி பதிப் பதவியைப் பிடித்த மொர்சி யால் ஓராண்டுக்கு மேல் அந்தப் பதவியில் நீடிக்க முடியவில்லை.
எகிப்தின் இராணுவத் தலைவராக இருந்த அப்டெல் சிசி மொர்சியை பதவியிலிருந்து இறக்கி கைது செய்து சிறையிலும் அடைத்தார். அவர்மீது பல வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. அவருக்குத் துணை புரிந்த முஸ்லிம் சகோதரத்துவ இயக்கத்தின் முக்கிய தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு வழக்கு விசாரணையை எதிர்நோக்கி காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.
அவர்களில் சுமார் 100 பேருக்கு ஏற்கனவே தனித்தனியாக சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், மொர்சிக்கும் கடந்த மே மாதம் சாவுத் தண்டனை விதிக்கப் பட்டது.
இதையடுத்து, எகிப்து நாட்டின் சட்டத்தின்படி, அரசாணைகளை வெளியிடும் தலைமை முப்திக்கு இந்தத் தண்டனை விவரம் அனுப்பப்பட்டது. இந்தத் தண்டனை தொடர்பாக தலைமை முப்தி ஆய்வு செய்து, கருத்துத் தெரிவித்த பின்னர் கெய்ரோ நீதிமன்றம் தனது இறுதித் தீர்ப்பை அறிவிக்கும் என முன்னர் அறிவிக்கப் பட்டிருந்தது.
எனவே,மொர்சியின்சாவுத்தண்டனை ரத்து செய்யப்படும் என்று அவரது ஆதரவாளர்கள் ஆவலுடன் எதிர் பார்த்திருந்தனர். இந்த நிலையில் தலைமை முப்தியின் பரிந்துரை நீதிபதியிடம் வந்து சேர்ந்தது. இதையடுத்து, அந்தப் பரிந்துரையையும், முப்தியின் கருத்தையும் பரிசீலித்து முடிவெடுக்க அவகாசம் தேவைப் படுவதால் இறுதி தீர்ப்பு அறிவிக்கப் படும் என்று நீதிபதி –பான் எல் –மி தெரிவித்திருந்தார்.
இந்த நிலையில் நேற்று வழங்கப்பட்ட இறுதித் தீர்ப்பின்போது, ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த சாவுத் தண்டனையை தலைமை முப்தி ஏற்றுக் கொண்டுள்ளதால் அவரது சாவுத் தண்டனை உறுதிப்படுத்தப் படுவதாக நீதிபதி அறிவித்துள்ளார்.
இதுதவிர, பாலஸ்தீனத்தைச் சேர்ந்த ஹமாஸ் பிரிவினர் மற்றும் லெபனான் நாட்டைச் சேர்ந்த தீவிரவாத இயக்கங்களுடன் இணைந்து எகிப்து அரசைக் கவிழ்க்க சதி செய்ததாக மொர்சி மீது தொடரப்பட்டிருந்த மற்றொரு வழக்கிலும்,மொர்சி மற்றும் இஸ்லாமிய சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்த 15 தலைவர்களுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
நேற்று விதிக்கப்பட்டுள்ள சாவுத் தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை ஆகியவற்றை எதிர்த்து மேல் முறையீடு செய்யும் அனுமதியும் மொர்சிக்கு வழங்கப்பட்டுள்ளது. (ஐ)

# 12 பேருக்குச் சாவுத் தண்டனை

இஸ்லாமாபாத்,ஜூன் 18
ரமழான் மாதம் வருவதை முன்னிட்டு அவசரமாக பாகிஸ்தானில் நேற்றுமுன்தினம் ஒரே நாளில் 12 குற்றவாளிகளுக்கான சாவுத் தண்டனை நிறைவேற்றப் பட்டுள்ளது.
இஸ்லாமியர்களின் புனித காலமான ரமழான் மாதத்தின்போது, சாவுத் தண்டனை நிறைவேற்றங் களுக்குத் தடை விதிக்கப்படுவதாக பாகிஸ்தான் அரசு அண்மையில் அறிவித்திருந்தது. அந்தத் தடைக் காலம் ஆரம்பமாவதற்கு முன்பாக பாகிஸ்தானில் நாடு முழு வதிலும் உள்ள சிறைச்சாலைகளில் 12 கைதிகளுக்கு சாவுத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. (ஐ)

# பிரிட்டனில் பிரபல்யங்கள் சந்திப்பு



லண்டன்,ஜூன் 18
பிரிட்டனுக்குச் சென்ற அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா, பிரதமர் டேவிட் கமரூன், இளவரசர் ஹரி ஆகியோரைச் சந்தித்துப் பேசியுள்ளார்.
அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் மனைவி மிச்செல் ஒபாமா தனது மகள்மார் மற்றும் தாயாருடன் இரண்டு நாள் பயணமாக பிரிட்டனுக்குச் சென்றுள்ளார். அங்கு அவர்களை பிரதமர் டேவிட் கமரூன் மற்றும் அவரது மனைவி சமந்தா ஆகியோர் வரவேற்றனர். பின்னர் கமரூனுடனான பேச்சுக்களின்போது மிச்செல் வறுமையினால் கஷ்டப்படும் பெண்களுக்கு கல்வி கிடைக்க வேண்டும்,இதனை அவசர பொருளாதார பிரச்சினையாக கருத வேண்டும் என்பதையும் சுட்டிக் காட்டினார்.
முன்னதாக பிரிட்டனின் லண்டன் நகருக்குச் சென்ற அவர்கள் கென்சிங்டன் அரண்மனையில் இளவரசர் ஹரியைச் சந்தித்துள்ளார். அரண்மனைக்குச் சென்ற அவர்களை இளவரசர் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றதாகவும்அவர்களைச்சந்திப்பதற்கு மிகவும் ஆவலு டன் இருந்ததாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
மேலும் கிழக்கு லண்டன் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்குச் சென்ற மிச்செல் ஒபாமாவுக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. (ஐ)

# 138 வருடங்களுக்குப் பின்னர் கிடைத்த தபாலால் அதிர்ச்சி

பாரிஸ்,ஜூன் 18
பிரான்ஸ் நாட்டில் 138 வருடங்களுக்கு முன்னர் தமக்குத் தமது பாட்டனாரால் தபால் மூலம் அனுப்பப்பட்ட கடிதமொன்று சில தினங்களுக்கு முன்னர் கிடைக்கப்பெற்றதால் மூதாட்டி ஒருவர் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்துள்ளார்.
பிரான்ஸ் நாட்டின் தெற்கு பகுதியில் 80 வயது மூதாட்டி ஒருவருக்கு சில தினங்களுக்கு முன்னர் தபால் துறையினரிடமிருந்து கடிதம் ஒன்று வந்துள்ளது. அந்தக் கடிதத்தை பிரித்துப் பார்த்த மூதாட்டி அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்துள்ளார்.
மூதாட்டியின் பாட்டனாரால் எழுதப்பட்ட அந்தக் கடிதம் கடந்த 1877 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 27 ஆம் திகதி அனுப்பப்பட்டுள்ளது. அதாவது, சுமார் 138 வருடங்கள் அந்தக் கடிதம் தாமதமாக அந்த மூதாட்டிக்கு கிடைத்துள்ளது.
இதில் இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவென் றால், கடிதம் அனுப்பப்பட்ட பகுதியில் இருந்து மூதாட்டி குடியிருந்த பகுதிக்கு இடைப்பட்ட தூரம் வெறும் 10 கிலோ மீற்றர் என்பதாகும்.



10 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நபருக்கு 138 வருடங்கள் தாமதமாக வந்த கடிதத்தைப் பிரித்து படித்துப் பார்த்ததில், அவரது பாட்டனார் தனது நூற்பாலைக்கு நூல்கண்டுகள் தேவை என குறிப்பிட்டு எழுதியுள்ளார்.
அத்தனை வருடங்கள் தாமதமாகக் கிடைத்துள்ள அந்தக் கடிதம்தொடர்பாகதபால்துறை அதிகாரிகளிடம் அந்த மூதாட்டி விளக்கம் கேட்டுள் ளார்.
அதற்குப் பதிலளித்த அதிகாரிகள், சில நேரங்களில் கடிதங்கள் வைக்கப்படும் இரும்பு லொக்கர்கள் துருப்பிடித்து சேதம் அடை[illegible] அந்தக் கடிதங்கள் கவனிக்கப்படாமல் விடப்பட வாய்ப்புள்ளது [illegible] நேரங்களில் கடிதம் தவறுதலான இடத்தில் வைக்கப்பட்டால், அவற்றை கண்டுபிடிக்க வருடக்கணக்கில் ஆகலாம் என கூறிய அதிகாரிகள் [illegible] விவகாரம் குறித்து விசாரணை செய்ய உள்ளதாக மூதாட்டியிடம் கூறியுள்ளனர். இருப்பினும், இந்தத் தாமதத்துக்கு தபால் துறை [illegible] அல்லது காணாமற் போன கடிதத்தை மீண்டும் கண்டுபிடித்து தபாலில் அனுப்பியுள்ளனரா என்பது தெரியவரவில்லை.

# தீவிரவாதிகளை அழிக்க அமெரிக்கா நிதியுதவி



வொஷிங்டன்,ஜூன் 18
நைஜீரியாவில் ஆதிக்கம் செலுத்தும் போகோஹாரம் தீவிரவாதிகளை அழிக்க 5 மில்லியன் டொலர் நிதி உதவியை வழங்குவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
கடந்த வருடம் கிழக்கு நைஜீரியாவில் சுமார் 30 ஆயிரம் சதுர கிலோ மீற்றர் பகுதியை கைப்பற்றி போகோஹாரம் தீவிரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். மேலும் அந்த நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கொடூரத் தாக்குதல் களை நடத்தி அப்பாவி மக்களைக் கொன்று வருகிறார்கள்.
இந்தநிலையில்நைஜீரியா, சாட், நைஜர், கமரூன், பெனின் ஆகிய நாடுகள் இணைந்து போகோஹாரம் தீவிரவாதிகளை ஒடுக்கும்முயற்சியில் ஈடுபட்டு வருகின்றன. ஏற்கனவே இந்த நடவடிக்[illegible] ஆயுதம் உட்பட பல்வேறு வழிகளில் உதவி வரும் அமெரிக்கா, தற்போது [illegible] 5 மில்லியன் டொலர் நிதியுதவியை வழங்குவதாக அறிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கே.ரி.கணேசலிங்கம்
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசறிவியல் துறை
யாழ்.பல்கலைக்கழகம்.

# உயர்ந்த எண்ணமும் சிந்தனையும் கொண்ட

## பேராசிரியர் அழகையா துரைராஜா

பேராசிரியர் அழகையா துரைராஜாஅவர்களது நினைவு நாளாகிய இன்று அவரை நினைவு கொள்வது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு மட்டுமல்ல, தமிழ்ச் சமூகத்துக்கே பெருமையானது. ஓர் உயர்ந்த எண்ணமும், சிந்தனையும் அதற்கான மனமும் கொண்ட மனிதனின் பதிவுகள் உயர்வானவை. வானத்துக்கு நிகரானவை. அவரது வாழ்வும் பணியும் வேறு எவருடனும் ஒப்பிடக்கூடியதல்ல. இன்றைய தமிழ்ச் சமூகம் எப்போதும் நினைவு கொள்ள வேண்டிய ஓர் உள்ளத்தின் நினைவு என்றுமே மறக்க முடியாதது. பேராசிரியரது கல்விப் புலமும் அதன் மரபும் தனித்துவமானவை. உலகம் பின்பற்றும் மண்ணின் பொறிமுறை பற்றிய கோட்பாடு அவரது உச்சமான கல்வித்தகமை யாகும். அதனால் அவரது புகழ் பரவியது. கேம்பிறிட்ஜ் பல்கலைக்கழகத்தில் 1961 ஆம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்த துரைராஜா, 1962 இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் குடிசார் பொறியியல் துறை விரிவுரையாளரானார். வோட்டாலூ மற்றும் கொலம்பிய பல்கலைக்கழகங்களில் அவரது புலமையைக் கருத்தில்கொண்டு வருகை விரிவுரையாளராக பணிபுரிய வாய்ப்புக் கிடைத்தது. அவரது அறிவும் புலமையும் உலகமெங்கும் பரவியது. பேராசிரியர் அறிவையும் புலமையையும் மட்டும் கொண்டிராது அன்பும்,நேசிப்பும் கொண்ட நிர்வாகியாக 1988 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரானார்.

அவரது ஆளுமையின் உச்சமான வெளிப்பாடாக அடுத்து வந்த ஆறு ஆண்டுகள் நிலைத்து நின்று சேவை புரிந்தார். தான் வாழ்ந்த மண்ணை உண்மையாக நேசித்த பேராசிரியர் மாணவர்களுக்கான பல்கலைக்கழகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஆக்கித் தந்தார். அவரது சேவைக்காலம் முழுவதும் போர்ச் சூழலும், வன்முறையும், வடக்கு கிழக்கில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் காணப்பட்டன. அதனை எதிர்கொண்டு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை சரியான முறையில் வழிப்படுத்தியதுடன், சமூக நெருக்கடியையும் அரசியல் கெடுபிடியையும் சரிவரக் கையாண்டார். அக்காலத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது கிளைகளைப் பரப்பும் விதத்தில் இராமநாதன் நுண்கலைப் பிரிவையும், விவசாயபீடத்தையும் ஆரம்பித்ததுடன் தொழிலாளர் கற்கை நெறிகளையும், வெளிவாரிப் பட்டப் படிப்புகள் அலகையும் ஆரம்பிக்கத் துணைபுரிந்தார்.

இதில் வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகுக்கான முன்மொழிவுகள் பேரவையிலும், மேலவையிலும் முன்வைக்கப்பட்ட வேளை, பெருமளவிலான சர்ச்சைகளை எதிர்கொண்டது. முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை அப்போது கலைப்பீடத்தின் பீடாதிபதியாக விளங்கினார். கலை மற்றும் வர்த்தகபீட உள்வாரி மாணவர்கள், வெளிவாரிப் பட்டப்படிப்புகள் அலகை நிராகரித்து வகுப்புக்கள் புறக்கணிப்பைக் கூட நடத்தினார்கள். பெரிய எதிர்ப்புகள் கிளம்பியதுடன் ஊடகங்கள் இதனை முதன்மைப்படுத்தியன. அப்போது உள்வாரி மாணவர்களுக்கு அது தொடர்பான புரிதலை ஏற்படுத்த பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை மாணவர் இருக்கைகளில் அமர்ந்து விளக்கமளித்ததுடன் மாணவத் தலைவர்களை அழைத்து துணைவேந்தருடன் உரையாடியதன் மூலம் அதனை நிறைவேற்றினார். இதில் பேராசிரியர்களான துரைராஜாவும், பாலசுந்தரம்பிள்ளையும் அப்போதைய பதிவாளரும் பலம் வாய்ந்த நிர்வாகக் கூட்டணியாக திகழ்ந் தனர்.

பேராசிரியரது நிர்வாகத் திறமைகள் தனித்துவமானவை. அவர் தனக்குப் பொருத்தமானவர்களை பக்கத்தில் வைத்திருப்பதைவிட நிறுவனத்துக்குப் பொருத்தமானவர்களை இனங்காணவும் அவர்களைச் சரியாக வழிப்படுத்தவும் முயலுவார். ஒரு போதும் அவர் தனக்கான அணியென வைத்துக் கொண்டதில்லை. அணிகள் அவருக்காக உருவாவதை பல விடயங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நிர்வாகம் கண்டுள்ளது. அதனையும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கும் தமிழ் சமூகத்துக்காகவும் மேற்கொள்வார்.

பொறியியல் பேராசிரியரான துரைராஜா தமிழ்ச் சமூகத்தின் ஆளுமையின் வடிவமாகத் திகழ்ந்தார். அவரது இறுதிக்கால பல்கலைக்கழக நேரங்கள் அதனையே வெளிப்படுத்தின. அவருக்கான பிரிவுபசார நிகழ்வுகளில் அவரது கழுத்தில் போடப்பட்ட மாலைகள் அவருக்கானவை. அவரது சேவைக்கானவை அவரைக் கௌரவப்படுத்துவதற்கானவை. காரணம் அவர் தமிழ் சமூகத்துக்கும் தான் பணிபுரிந்த நிறுவனத்துக்குமே சேவையாற்றினாரே தவிர தனிப்பட்ட நலனுக்கோ, அபிலாசைக்கோ பணிபுரிந்த வரல்ல. அரசியல் கெடுபிடிக்குள்ளும் தனது தமிழ்ச் சமூக அபிலாஷையை வெளிப்படுத்தியவர். அதிலிருந்து ஒரு துளியேனும் விலகாத உயர்ந்த மனித நேயமிக்கவராக அவரது சேவைக்காலம் முழுவதும் அமைந்தது. எதனையும் எதிர்கொள்ளும் மனநிலை உள்ளவர். பல்கலைக்கழகத்தின் ஒவ்வொரு மாணவர்களையும் தனது பிள்ளையாகக் கருதியவர்.அவர்களைப்பாதுகாப்பதற்காக நேரம் காலம் பாராது பணிபுரிந்தவர். இதனை ஒரு சம்பவம் மூலம் வெளிப்படுத்த முயலுகிறேன். 1988 ஆம் ஆண்டு நான் முதலாம் வருட மாணவன். நானும் எனது ஒன்றுவிட்ட சகோதரன் சின்னத்துரை பிரபாகரனும் (இறுதி வருட வரலாற்றுத்துறை மாணவன்) இரவு உணவுக்காக ஒரு வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தபோது இந்திய இராணுவத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஒன்று ஏற்பட்டுவிட்டது. அதே இடத்தில் எனது சகோதரன் சுடப்பட்டுவிட்டார். என்னை இந்திய இராணுவம் கைதுசெய்தது. மறுநாள் காலை 8.00 மணியளவில் துணைவேந்தரும், மார்ஷனும்நான்சிறைப்பட்டிருந்தமுகாமின் வாசலில் அமர்ந்திருந்ததைக்கண்டு ஆச்சரியமானேன். அப்போதுதான் பேராசிரியர் குறிப்பிட்டார் உங்கள் சகோதரன் இறந்துவிட்டதாகவும், உங்களை அழைத்துப்போக வந்ததாகவும். குறைந்தது 9.00 மணிக்கு முன்பே பல்கலைக்கழகத்துக்கு அழைத்துவந்துவிட்டார் பேராசிரியர். எப்போதும் அவரது செயற்பாடு அப்படியானது தான். போக்குவரத்துச் சிக்கல், தொலைத் தொடர்பு வசதியின்மை, தனிமனிதர்களுக்கு பாதுகாப்போ, உத்தரவாதமோ இல்லாத காலத்தில் பேராசிரி யரின் பணியைக்கண்டு ஆச்சரி யப் படாதவர்கள் இல்லை என்றே கூறலாம்.



இவரைப்போன்ற பேராசிரியர்கள், நிர்வாகிகள், மனித நேயம் மிக்கவர்கள், தற்துணிவு உள்ளவர்கள், உண்மையான மனித உள்ளம் படைத்தவர்கள் இன்று அருகிக் கொண்டு போகின்றனர். பேராசிரியரின் நினைவுகளைச் சுமக்கும் மாணவர் கூட்டம் தமிழ் சமூகத்தின் எதிர்காலத்துக்கு அவசியமானது.

அவரது நினைவுகளைச் சுமந்து கொள்ளும் ஒவ்வொருவரும் அவருக்கானவராக மட்டுமல்ல தமிழ் சமூகத்தின் புலமைக்கும் அறிவுக்கும் செழிப்பூட்டுபவராகவே மதிக்கப்படுவார்கள். பேராசிரியரின் நினைவுகள் தொடரட்டும். அவரது எண்ணமும் சிந்தனையும் மலரட்டும்.

# பேச்சு மொழி செயற்றிறனுக்கான ஆளுமை விருத்தித் திட்டம்

பேச்சு மொழி செயற்றிறனுக்கான ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவக் கல்வியானது(Public speaking for personality development and leadership)தற்போது மக்கள் மத்தியில் விரைவான உயர்தர சாதக விளைவை ஏற்படுத்தியிருக்கின்றது.

கொழும்பைத் தளமாகக் கொண்ட தொடர்பாடல் மற்றும் ஆங்கிலம் கற்கைநிறுவனமான ரெயின்போ நிறுவனம் (The rainbow institute of communication and English) யாழ்ப்பாணத்தில் இந்தக் கற்கை நெறியை வழங்குகின்றது. மேலும் இந்த நிறுவனம் மொழி மூலமான தொடர்பாடல் மற்றும் திறன்விருத்தித் திட்டங்களை யாழ்ப்பாணம், குருநாகல், வவுனியா மற்றும் திருகோணமலை ஆகிய பகுதிகளில் ஐக்கிய அமெரிக்க தூதரகத்துடன் கூட்டுப் பங்காளராக இணைந்து நடத்துகின்றது.

பிரபலமான இந்தப் பேச்சு மொழி செயற்றிறனுக்கான ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவக் கற்கை நெறி 16 மணி நேரப் பயிற்சியைக் கொண்டுள்ளது. ஏற்பாடு செய்யப்பட்ட நான்கு நாள் கொண்ட இந்தப் பயிற்சியை ரெயின்போ நிறுவனம் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மாணவர் வெற்றி மையத்துடன் கூட்டிணைந்து (Student success centre) நடத்தும்.

சிறந்த கல்விமான்களின் அனுசரணையுடன் உருவாக்கப்பட்டு சர்வதேச தரமிக்க இந்தக் கல்வி வாய்ப் புக்களை வழங்குவதில் அனுபவம் கொண்ட ரெயின்போ நிறுவனம், அங்கீகரிக்கப்பட்ட அதியுயர் தகைமை கொண்ட நிறுவனமான சிட்டி அன்ட் கில்ட்ஸ், இன்டர் நேஷனல், யு.கேயின் (City and guilds, International UK). சலுகை பெற்ற நிறுவனமாகும்.

சிறந்த கல்வி அறிவு மற்றும் பாண்டித்தியம்பெற்ற தேசிய கல்வியியலாளர் குழுவினால் வலிமையான தொழில்முறை மற்றும் கல்விச் சான்றுகளைக் கொண்டு இந்த நிறுவனம், தங்களது ஆங்கில மொழி மூலமான தொடர்பாடல் திறமையை உறுதி செய்துகொள்ளவும் ஆளுமை வளர்ச்சியை மேம்படுத்துவதற்கும். அதே நேரத்தில் அவர்களின் மனோ பாவங்களை உருவாக்குவதற்கும் அபூர்வமான வாய்ப்பு வழங்கப் படுகிறது.

உள்ளூர் மற்றும் சர்வதேச அமைப்புக்களில் 25 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவமுள்ள பிரபல தொடர்பாடல் துறையில் விசேட திறமையைக் கொண்ட நிபுணரும், பிரபல ஊடகவியலாளருமான மெனிக் மெண்டிஸ் தலைமையில் இந்தக் கல்வி நிலையம் இயங்குகிறது.

இந்தக் கல்வி நிலையத்தின் தலைமைக் கல்வி ஆலோசகராக பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் நாடுகளில், உயர்கல்வி, உயர் கல்விஆய்வு அந்தஸ்துப் பெற்றவரும், நன்கு அறியப்பட்ட கல்விமானுமான கலாநிதி மஹிம் மெண்டிஸ் பணிபுரிகிறார்.

**கற்றல் முறை (விநோதத்துடன் கற்றல்)**

ரெயின்போவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கற்பித்தல்முறை, நவீன சர்வதேச நுட்பங்களை அனுசரித்த முறையை கொண்டு அமைந்துள்ளது. அத்துடன் சிட்டி அன்ட் கில்ட்ஸ், இன்டர் நஷனல், யு.கே சர்வதேச அளவுகோல் முறைகள், கடுமையான தரக் கட்டுப்பாட்டு செயல்முறைக்கு உட்பட்டவை. இவற்றை அடிப்படையாக கொண்டு ரெயின் போவின் அனைத்துக் கற்கை நெறிகளும் கடைப்பிடிக்கப்படுகின்றன. இந்தக் கற்கை முறைகள் விநோதமான முறையில் எவரையும் கவரும் வகையில் கற்றுக் கொடுக் கப்படுகின்றது.

எங்கள் நிறுவனத்தினர் நன்கு தகுதி மற்றும் அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்கள். அவர்கள் கல்வியை தொடர்பவர்களுக்கு ஆதரவாகவும் மற்றும் உறுதியாகவும் நின்று அவர்களின் படைப்பாற்றல், நம்பிக்கை மற்றும் தலைமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளவும், அதே நேரத்தில் அவர்களின் ஆங்கிலமொழித் தொடர்புத் திறன்கள் விருத்தியடையச் செய்யவும் பக்கபலமாக இருக்கின்றனர் என மெனிக் மெண்டிஸ் தெரிவித்தார்.

கற்கை நெறிக்கான அமர்வுகள் 4நாள்களுக்குத் திட்டமிடப்பட்டுள்ளன. இந்த மாதம் 20–21 மற்றும் 27–28 ஆம் திகதிகளில் சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கி ழமைகளில் யாழ்ப்பாணம் 128, டேவிட் வீதியில் அமைந்துள்ள அழகியல் கல்லூரியில் கற்கைநெறி அமர்வுகள் நடைபெறும். பங்கேற்பாளர்கள் காலை அல்லது பிற்பகல் அமர்வுகளைத் தேர்ந் தெடுக்க முடியும்.

காலை அமர்வுகள் காலை 9–1 மணி வரையும், பிற்பகல் அமர்வுகள் பிற்பகல் 2–6 மணி வரையும் நடைபெறும். கட்டணம் அறவிடப்படும். (த)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிறுத்த வேண்டும்

பாடசாலை நிர்வாமொன்றுக்கு ஒரு அன்பான வேண்டுகோள். யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக சமூகச் சீரழிவுகள் அதிகரித்துள்ள நிலையில் நாங்கள் எங்கள் பிள்ளைகளைப் பாடசாலைக்கோ அல்லது தனியார்கல்வி நிலையங்களுக்கோ கல்வி கற்க அனுப்பிவிட்டு அவர்கள் திரும்பி வரும்வரை எங்களுக்கு மனதில் ஏக்கம். ஆகவே பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங் களில் மேலதிக வகுப்புக்கள் நடத்துவதை பாடசாலை நிர்வாகங்கள் நிறுத்த வேண்டும். இந்த விடயம் இப்போதைய சூழலில் இயலாத ஒன்று. குறித்த பாடசாலைக்குச் செல்லும் இரு வீதிகளும் பிற்பகல் 2 மணிக்குப் பின் வெறிச் சோடிய வீதிகள். பொலிஸ் நிலையத்தையும், இராணுவ முகாமையும் மட்டுமே காண முடியும். இந்தப் பாடசாலை பருத்தித்துறை நகரின் ஒரு பகுதியில் உள்ள பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகும்.

இதில் கல்விகற்கும் மாணவிகளில் அனேகர் பஸ்ஸில் பயணிப்பவர்கள் காலை 7.15 முதல் மாலை 5.30 வரை வகுப்புக்கள் நடைபெறுவது மனித உரிமை, சிறுவர் உரிமை மீறலாகும். மாலை வேளையில் நகருக்குச் சென்று தான் பிரயாணம் செய்ய வேண்டும். சிலவேளை எங்கள் பிள்ளைகள் மணித்தியால கணக்கில் பஸ் நிலையத்தில் பஸ்ஸுக்காகக் காத்து நிற்க வேண்டும். இதனால் படும் கஷ்டங் கள் நிறைய உள்ளன. குறிப்பாக வடமராட்சி கிழக்கு பகுதியில் இருந்து இந்தப் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் நிலைமையைச் சற்றுச் சிந்தி யுங்கள். வெளியிடங்களில் நடப்பதை அவதானியுங்கள் வயது வந்த பெண்பிள்ளை கள் அல்லவா? இவர்களுக்கு இந்த நேரத்தில் வரும் பிரச்சினைக்கு பாட சாலை நிர்வாகமா அதிபர்.ஆசிரியர்களா? பொறுப்புக்கூறுவீர்கள். சற்றுச் சிந்தியுங்கள். பெற்றோரின் உணர்வுகளுக்கு மதிப்பளியுங்கள்.

யாழில் அடுத்தமணித்தியாலம் என்ன நடக்கும் ஏது நடக் கும் என எதிர்பார்த்து பதைபதைக்கிறோம். தயவுசெய்து பொறுப்பற்ற இந்தச் செயலை. உடனடியாகக் கைவிட்டு விடுங்கள். வரும் பழிகளுக்கு பொறுப் பாகாதீர்கள். பாடசாலையின் பெயரை கெடுக்காதீர்கள். மேலதிக வகுப்பு முடிந்தவுடன் மாணவிகள், பிள்ளைகள், வீடு வரும் வரை அதிபரே பொறுப்பு. எந்த ஒரு பாடசாலையிலும் மேலதிக வகுப்பு நடத்த கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இல்லை. பாதிக்கப்பட்ட பெற்றோராகவும், கல்வி சார்ந்த ஊழியராகவும் என் பிள்ளைகள், மற்ற பிள்ளைகள் என இல்லாமல் எல்லாப் பிள்ளைகளும் பிள்ளைகள் தான். இதனை ஏற்றுக் கொண்டு பாடசாலை கல்விச் செயற்பாடுகளை உரிய நேரத் துடன் நிறுத்துங் கள்.

*க.தமிழ்அழகன்,*
*வடமராட்சி கிழக்கு*

# வாசகர் திருமுகம்



## நடை பாதையில் மக்களுக்கு சிரமம்

**யாழ்** பஸ் நிலையத்திலிருந்து மருத்துவமனைக்குச் செல்வதற்கென அமைக்கப் பட்டுள்ள நடைபாதையில் வியாபார நடவடிக்கைகள் இடம்பெறுவதால் அத னைப் பயன்படுத்துவதில் மக்கள் பல சிரமங் களை எதிர்கொண்டுள்ளனர்.

பிரதான வீதிக்கும் இந்த நடைபாதைக்கும் இடையில் பாதுகாப்பு வேலி இடப்பட்டுள்ள நிலையில், நடை பாதை வியாபாரிகளால் நடைபாதை ஆக்கிரமிக் கப்பட்ட நிலையில் காணப்படுகின்றது. அத்துடன் பொருள்களை வாங்குவதற்கு மக்கள் முண்டியடித்து நிற்பதால் பாதசாரிகள் நடைபாதை யைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதன் காரணமாக நடைபாதையைவிட்டு வீதியில் நடந்து செல்ல வேண் டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மாநகரசபை அதிகாரிகள் இதில் தலையிட்டு பொது மக்களுக்கு ஏற்படுகின்ற சிரமங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென பலரும் வேண்டுகோள் விடுத் துள்ளனர்.

*ப.கனகராசா கச்சேரியடி*


## பிளாஸ்ரிக் உற்பத்தியாளர்கள் கவனிப்பார்களா?

கடந்த யுத்த காலத்தில் பெருந்தொகையான பனை மரங்கள் அழிக்கப்பட்டமை யாவரும் அறிந்ததே. யுத்தம் முடிவ டைந்த பின் எஞ்சிய பனை மரங்களும் அரச வீட்டுத் திட்ட வீடுகளுக்கும் ஏனைய புதிய கட்டடங்கள் அமைப்பதற்கும் பயன்படுத்தப்படு கின்றன. இந்தப் பயன்பாட்டுக்கு பனை மரங்கள் மட்டுமல்லாமல் பாலை, முதிரை, தேக்குப் போன்ற காட்டு மரங்களும் தினமும் அழிக்கப்படுகின்றன. இதனால் ஏற்படும் தீமைகளோ பல. சுருக்கமாகச் சொன்னால் எமது நாட்டை ஒரு பாலைவனமாக மாற்றும் முயற்சி என்றே கூறலாம்.

இந்த நிலையிலிருந்து நாம் மீள வேண்டுமாயின் பிளாஸ்ரிக் பொருள் உற்பத்தியாளர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். வீடுகள் அமைப்பதற்கான மரத் தேவைகள் யாவற்றையும் பிளாஸ்ரிக் கலவையினால் கனம் காத்திரமாக ஏன் உற்பத்தி செய்யக்கூடாது? இந்த உற்பத்திகளை காலதாமதமின்றி சந்தைப்படுத்துவார்களேயானால் மரங்களைப் பெருமளவில் அழிக்க வேண்டிய தேவை ஏற்படாதல்லவா?

*– கு.காசிப்பிள்ளை.*

## கேலிச் சித்திரம்




*நன்றி: மவபிம*

# இலங்கையை விடாது துரத்தும் ஐ.நா மனித உரிமைகள் சபை

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பில் கடந்த மார்ச் மாதம் சமர்ப் பிக்கப்படவிருந்த அறிக்கை, உள்ளக விசாரணைப் பொறிமுறை நம்பகமாக இடம்பெறும் என்று இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் வழங்கிய உறுதி மொழியை அடுத்து பிற்போடப்பட்டது. உள்ளக விசாரணைப் பொறிமுறை தொடர்பாக ஐ.நா. மனித உரி மைகள் சபையினதும் ஏனைய அமைப்புகளினதும் ஒத்து ழைப்புப் பெறப்படும் என்றும் இலங்கை தெரிவித்திருந்தது.

சமீபத்தில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் நாடாளு மன்றத்தில் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த வெளிவிவ கார அமைச்சர் மங்கள சமரவீர, ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் முன்வைக்கப்பட்ட நூறு நாள் வேலைத்திட்டத்தின் பிரகாரம், போர்க் குற்றச் சாட்டுகள் தொடர் பில் சர்வதேச தலையீடுகள் அற்ற உள்ளகப் பொறிமுறையொன்று உருவாக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார். எமது நாட்டுக்குப் பொருத்தமான அணுகுமுறை குறித்து நாம் பேச்சு நடத்தி வருகிறோம். இந்த உள்ளகப் பொறிமுறை குறித்த அறிக்கை செப்ரெம்பர் மாதத்துக்கு முன்னதாக அதாவது ஐ.நா. மனித உரி மைகள் சபையின் 30 ஆவது கூட்டத் தொடருக்கு முன்னதாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும் உறுதியளித்திருந்தார். அடுத்த கூட்டத் தொடருக்கு இன்னமும் மூன்று மாதங்க்ள்தான் உள்ளன. அதற்குள் சர்வதேச சமூகத்துக்கும் ஐ.நாவுக்கும், தான் அளித்த வாக்குறுதியை குறிப்பிட்ட காலத்துக்குள் இலங்கை நிறைவேற்ற வேண்டும். இந்தப் பொறிமுறை இலங்கைக்குப் பொருத் தமானதாகவும் இருக்கவேண்டும். வெளிப்படைத் தன்மை யுடையதாகவும் இருக்கவேண்டும். அதே சமயம் ஐ.நா. மனித உரிமைகள் சபையையும் சர்வதேச சமூகத்தையும் திருப்திப் படுத்தக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இது சாத் தியமா என்பதே இன்று எழும் கேள்வி.

இதுவரை உள்ளகப் பொறிமுறை உருவாக்கும் விடயத்தில் புதிய ஆட்சியாளர்கள் குறிப்பிடத்தக்க எந்த ஒரு முன்னேற்றத்தையும் அடையவில்லை. ஐ.நாவுடன் கலந்தாலோசிக்கவுமில்லை. நாடாளுமன்றம் கலைக்கப்படுமானால் இதில் மேலும் பின்ன டைவு ஏற்படலாம்.

அதனால்தான், கடந்த 13ஆம் திகதி ஆரம்பமான ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 29ஆவது கூட்டத் தொடரை ஆரம்பித் துவைத்து உரை நிகழ்த்திய ஐ.நா. மனித உரிமைகள் ஆணை யாளர் சையத் அல் ஹுசைன், உள்ளகப் பொறிமுறை குறித்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கும் விதத்தில் கருத்து வெளி யிட்டுள்ளார். உள்ளகப் பொறிமுறையை உரு வாக்கும் விடயத் தில் அனைத்து அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், பாதிக் கப்பட்டவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் கலந்தா லோசிக்குமாறு ஆணையாளர் வலியுறுத்தியுள்ளார். இதனை இலங்கையின் புதிய ஆட்சியாளர்கள் ஓர் எச்சரிக்கையாகக் கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இலங்கையில் ஆட்சி மாற்றத்துக்கு ஆதரவு வழங்கிய மேற்கு நாடுகள் இலங்கை தொடர்பான தமது கடும்போக்கைத் தற்பொழுது கைவிட்டுள்ளன அல்லது தளர்த்தியுள்ளன. கடந்த மார்ச் மாதம் சமர்ப்பிக்கப் படவிருந்த இலங்கை தொடர்பான ஐ.நா. விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டதற்கு இந்த நாடு கள் ஆதரவு அளித்ததை நாம் மறந்துவிட முடியாது. அறிக்கை பிற்போடப்பட்ட சமயம் இலங்கை அரசு அளித்த உறுதிமொழி யின்படி உள்ளகப் பொறிமுறை இதுவரை உருவாக்கப்பட்டி ருக்கவேண்டும். ஆனால், இந்த விடயத்தில் ஆமை வேகத்தி லேயே காரியங்கள் நடைபெறுகின்றன. பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நம்பகத்தன்மை மிகுந்த உள்ளகப் பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான வெளிப்படையான–அனைவரையும் உள்வாங்கும் செயற்பாடுகள் குறித்து ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கூடுதல் கவனம் செலுத்திவருவதை ஆணையாளரின் கருத்து பிரதிபலிக்கிறது.

போரின் இறுதியில் நடந்த குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு ஒரு நீதியான வெளிப்படைத் தன்மை கொண்ட விசாரணையை மேற்கொள்வதுடன் போர்க் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறுவதற்கும் கடமைப்பட்டுள்ளது என்பதை ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச நாடுகளும், மனித உரிமை அமைப்புக்களும் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரு கின்றன. இலங்கை தொடர்பான ஐ.நா.மனித உரிமைகள் சபையின் அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பரில் வெளியிடப் படவுள்ள நிலையில் இலங்கை அரசு, அனைத்து மட்டங்களிலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதான ஒரு உள் ளக விசாரணையை நடத்த வேண்டும். அந்த விசாரணை எவ்வளவு தூரம் நம்பிக்கைத்தன்மை கொண்டதாக அமையப் போகிறது என்ற கேள்வி தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வருகிறது. இது இலங்கை அரசுக்குப் பெரும் தர்மசங்கடமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஐக்கியநாடுகள்அறிக்கை இம்முறை வெளியிடப்படுவது நிச்சயம் என நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து உறுதிபட அறியமுடி கின்றது. இந்த நிலையில் வெறுமனே காலம் கடத்துவது நன்மை பயக்கக் கூடியதல்ல.

தற்போது உள்ளக விசாரணைப் பொறிமுறை உருவாக் கும் விடயத்திலும் இழு பறி காணப்படுவது நல்ல அறிகுறியல்ல

**பத்தி எழுத்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## அரசியல் கோணல் தனம் அப்பட்டமாக மேலெழுகிறதே....

கடந்த ஐந்து மாதங்களும் ஒன்பது நாள்களிலும், புதிய மைத்திரி அரசு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு கசந்து போய் விட்டது. அதன் மீது கூட்டமைப்புக்கு அதிருப்தி உண்டாகிவிட்டது.

அதனைத் தமது வாக்காளர்களுக்கும் "பச்சையாக"த் தெரிவித்துவிட வேண்டும் என்ற ஓர்மம் தமிழர் தரப்பினருக்கு மேலெழுந்துள்ளது.

ஜனாதிபதியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமிழ் மக்களின் விவகாரங்களில் கடந்த பல நாள்களாக, போதிய உரிய கரிசனை காட்டாது, ஏய்க்காட்டும் போக்கு உயர்ந்து வருகிறது என்பதை தமிழ் மக்கள் -- தமிழ் வாக்காளர்கள் -- மிகப் பல நாள்களுக்கு முன்னரே கண்டறிந்து விட்டனர்.

அதனை நீண்ட காலத்துக்கு மறைத்துவிட முடியாது என்பதைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர், உள்ளூர மிகப் பெரிய பரிமாணத்தில் உணர்ந்திருப்பர்.

தமிழ் மக்களின் தேவைகள் --அவர்களின் அத்தியாவசிய மற்றும் அவசர -- தேவைகளைக்கூட ஆளும் தரப்பினர் அரைக்கண்ணால் பார்க்கும் போக்கே மேல் எழுந்து நிற்பதையும் அவர்கள் மிகப் பெரிய அளவில் பட்டுணர்ந்து விட்டனர்.

அதனால் , மக்களின் நலன் பேண் விடயங்கள் கீழ்நோக்கிச் செல்வதும், அதன் விளைவாக தமது "அரசியல்" கீழிறங்கப் போகிறது என்பதை மனதிருத்தியே, அரசு மீதான கசப்புணர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போது அம்பலப்படுத்தி உள்ளது எனலாம்.

கொழும்பில் புதிய (மைத்திரி) அரசு பதவியில் அமர்ந்த பின்னர், கூட்டமைப்பினர் தமது ஏமாற்றத்தை -- ஏன் இயலாமை என்றும் ஒரு வகையில் கருதலாம் -- இப்போது வெளிப்படுத்தி உள்ளமை வேண்டத்தக்கது. அதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமில்லை.

•புதிய அரசு பதவி ஏற்று தற்போது ஆறு மாதங்களை எட்டியபோதிலும், தமிழ் மக்களிடமிருந்து கையகப்படுத்திய காணியில் 563 ஏக்கர் காணி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு, அரசு அடிப்படை வசதிகளைத் தானும் செய்யவில்லை. அவற்றைச் செய்வதற்கு போதிய நிதி இல்லை என்று கைவிரிக்கப்படுகிறது.

•கிழக்கில், சம்பூரில் விடுவிக்கப்படும் என்று உறுதி அளிக்கப்பட்ட 876 ஏக்கர் காணி இன்னமும் விடுவிக்கப்படவில்லை. அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை என்பது ஒரு புறம் இருக்க, ஏற்கனவே அங்கு குடியமர்ந்த மக்களுக்கு அடிப்படை வசதிகள் இன்னமும் செய்து கொடுக்கப்படவில்லை.

மேற்கண்டவகையில் புதிய அரசின் அசமந்தத்தை வெளிப்படுத்தி உள்ளார், தமிழரசுக் கட்சியின் தலைவரும், கூட்டமைப்பின் செயலாளருமான மாவை சேனாதிராசா.

முந்திய அரசு தமிழ் மக்களை மாற்றாந்தாய்ப் போக்கில் வாட்டி வதைத்தது என்றால் --

தமிழ் மக்களின் வாக்குகளால் அரியாசனம் ஏறிய இன்றைய அரசு, இனிப்புத் தருவதாகக் கூறி அவர்களைச் சேற்றில் புதைக்க நினைத்து, திட்டமிட்ட முறையில் கழுத்தறுக்கிறது.

புதிய அரசை அரியாசனம் ஏற்றி, மாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்ற தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு தவிடு பொடியாகி விட்டது என்பதற்கான முன்னோட்டமே இப்போது அரங்கேறி வருகிறது; வேறு எதுவும் இல்லை.

இவை, தமிழ்த் தலைவர்களின் அரசியல் கோணலானது என்பதை, உள்ளங்கை நெல்லிக்கனி போன்று காட்டுகின்றன. நம்பினார் கெடுவதில்லை என்ற வாக்கும் தென்னிலங்கைத் தலைவர்களால் நொறுக் கப்படுகிறது. மீண்டும் ஒரு பேரெழுச்சி தமிழர் தரப்பில் தேவை என்பதை இது சொல்லாமல் சொல்கிறதா......?

# வித்தியா கொலைக் குற்றவாளிகளுக்கு உடன் தீர்ப்புத் தண்டனை வேண்டும்



"ஒவ்வொரு நாளும் மக்கள் வித்தியாவின் கொலைக்கு எப்போது உச்சத் தண்டனை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடனேயே உள்ளனர்.

● கணபதிப்பிள்ளை செல்வராஜா

வன்னிப் போரில் உயிர் நீத்த தமிழ் மக்களின் ஆத்மா சாந்தி வேண்டி கடந்த மே மாதம் 18 ஆம் திகதி முல்லை – முள்ளி வாய்க்காலிலும் அதனை அண்டிய ஏனைய பிரதேசங்களிலும் உணர்வுபூர்வமாக மிக அமைதியாக நினைவேந்தல் நிகழ்வு நடந்தேறியதை யாவரும் அறிவர்.

இதன்போது முள்ளிவாய்க்காலில் பெருமளவிலான பொலிஸாரும் – புலனாய்வுப் படைப்பிரிவினரும் மக்களோடு மக்களாக நின்று நிகழ்வுக் குறித்த அனைத்துத் தகவல்களையும் சேகரித்துச் சென்றுள்ளனர்.

இந்த நிகழ்வு 6 ஆண்டுகளுக்குப் பின்னர் மிக அமைதியாக இடம் பெற்று நிறைவு பெற்றது. இதனை ஊடகங்கள் வெளிப்படுத்தியிருந்தன.

இதன்பின்னர் நடக்கக்கூடாத சம்பவமொன்று புங்குடுதீவில்இடம் பெற்றது. கூட்டு வன்புணர்வுக்கு ஆளாக்கி மாணவி சி.வித்தியாவை கோரமான – கொடூரமான முறையில் (கடத்தப்பட்டு) 9 பேருக்கு மேற்பட்டோர் திட்டமிட்டு கொலை செய்துள்ளனர்.

இதனால் வித்தியாவின் குடும்பம் கதிகலங்கி நிற்கிறது. வடக்கு தமிழ் மட்டுமன்றி சிங்கள – முஸ்லிம் சகோதர மக்களும் வித்தியாவின் கொலையைக் கண்டித்து கொலையாளிகளுக்கு வீதிகளில் வைத்து உயர்ந்த பட்ச சாவுத்தண்டனைகளை உடன் காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டுமென கோரி கடையடைப்புக்களையும் – எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் – ஹர்த்தால்களையும் முன்னெடுத்துள்ளனர்.

இதன் ஒரு கட்டமாக நீதிமன்றுக்கு முன் இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் – களோபரமாகி ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தவர்கள் வித்தியாவின் கொலைக்கு களங்கமேற்படுத்தும் விதத்திலும், இதனை நாம் இவ்வாறு செய்வதால் (பொலிஸாரைத் தாக்குதல், நீதிமன்ற வளாகக் கண்ணாடிகளை உடைத்தல், வாகனங்களின் கண்ணாடிகளை அடித்து நொறுக்குதல், கல்லெறிதல்) என்ன [illegible] மெய்யான உணர்வலைகளைக் கொண்டுவருமா என்பதைச் சிந்திக்காததால் 130 பேர் வவுனியாவிலும் – அநுராதபுரம் சிறையிலும் அடைக்கப்பட்டு தற்போது அவர்களில் பலர் பிணையில் வெளிவந்துள்ளனர்.

இந்தச் செயலை செய்ய யார் தூண்டி னார்கள் என்பது இன்று வரை வெளிவரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது இவ்வாறான போராட்டங்கள், பகிஷ்கரிப்புக்கள் மூலம் தான் படிப்படியாக விடுதலை இயக்கங்கள் தோற்றம் பெற்றன என்பதைக் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

இங்கு முக்கியமாகக் குறிப்பிடப்படும் விடயம் யாதெனில் வன்னியில் 40 ஆயிரம் மக்களின் இறப்புக்கு பின்னரான முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மே 18 இல் மிக அமைதியாக இடம்பெற்றது.

இதன் பின்னர் வித்தியாவின் கொலையும் கொடூரமாக இடம் பெற்று சோக அலைகளை நாடு தழுவிய ரீதியில் ஏற்படுத்தியுள்ள ஆறாத வடுவாக உள்ளது.

இந்தக் கொடூரமான வேலையை செய்தவர்கள் வித்தியாவின் உறவினர்கள், அயலவர்கள், வேலணை பிரதேச சபை அலுவலர் மற்றும் சகபாடிகள் என இதுவரை 9 பேர் கைதாகி நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டு கொழும்புக்கும் கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் சட்டப்பீட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறனும் ஏதோவொரு விடயத்தில் பங்காளியாகிவிட்டார் என்பதும் வெளிப்படையாகி தமிழ் மக்கள் கொதிப்படைந்துள்ளனர்.

எது எப்படியிருப்பினும், இவ்வாறான கோரமான நிகழ்ச்சிகளுக்குப் பின்னரான எதிர்ப்பலைகளை வெளிக்கொணர வேண்டுமாயின் எவ்வாறு, எப்படி, எந்த நேரத்தில், யாருக்கு எதிராக என்பதைச் சற்று சிந்தித்து – தெளிந்து – நிதானமாகச் செயற்படுத்த முன்வரவேண்டும்.

எமது வளங்களை, எமக்கு பாதுகாப்பு வழங்குபவர்களை எமது சொத்துக்களை எமது கட்டடங்களை பாதுகாத்து உண்மையான உணர்வுகளை வெளிக்கொண்டு வந்திருந்தால் அது மதிப்பளிக்கப் பட்டிருக்கும்.

இன்று வன்செயல் புரிந்த இளைஞர்கள் சிறையில் உள்ளனர்.

இவர்கள் வெளியில் வரவேண்டும் என்பதும் எல்லோரதும் பிரார்த்தனை.

எனவே மனித சமூகத்தில் பகுத்தறிவு படைத்த மனிதன் நல்ல சமுதாயத்தை உருவாக்கும் அதே நேரத்தில் இன்னொரு யுகத்தை இங்கு பரிணமித்து அழிவுப் பாதைக்கு செல்லாமல் இருக்க எதனையும் நிதானித்து செயற்படு வதன் ஊடாக நல்ல மனித சமுதாயம் இங்கு செயற்படுவதை வெளி உலகுக்கு கொண்டு வருவோம். நாமும் அமைதியாக வாழ்ந்து காட்டுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கை பொய்த்துப்போன நிலையில் வடக்கு மாகாண சபை

சேரலாதன்

வடக்கு மாகாண சபை அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்ற கேள்வி மாகாண சபைக்கு உறுப்பினர்களைத் தெரிவு செய்த மக்களின் மனங்களில் இன்று எழுந்து நிற்கின்றது.


பல்வேறு இழுபறிகளுக்கு மத்தியிலேயே வடக்கு மாகாண சபைக்கான தேர்தல் இடம்பெற்றது. இனவாதிகள் இந்தத் தேர்தல் இடம்பெறுவதை விரும்பவில்லை. அப்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷகூட வடக்கில் தேர்தல் இடம்பெறுவதை விரும்பாது காலத்தைக் கடத்தி வந்தார். இந்த நிலையில் சர்வதேச அழுத்தங்கள் காரணமாக இந்தத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயம் இலங்கை அரசுக்கு ஏற்பட்டது. இதன் காரணமாகவே தேர்தலும் இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெருவெற்றியைப் பெற்றுக் கொண்டது.

இந்திய மாநில அரசுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இலங்கையின் மாகாண அரசுகள் அதிகாரம் குறைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. காணி,பொலிஸ் அதிகாரம் உள்ளிட்ட முக்கிய துறைகள் மத்திய அரசின் கீழ் உள்ள நிலையில் பெயரளவுக்கு மட்டுமே இங்கு மாகாணசபைகள் இயங்கி வருகின்றன. இந்த நிலையில் வடக்கு மாகாண சபையும் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்ய முடியாத நிலையில் உள்ளது.

முன்னர் ஜி.ஏ.சந்திரசிறி மாகாண ஆளுநராக இருந்தபோது அவர் இட்டதே சட்டம் என்பது தான் மாகாண சபையின் வேதமாக இருந்தது. மாகாண சபையின் அதிகாரிகள் ஆளுநரை மதித்து அவருக்குத் துதிபாடுவதிலேயே தமது காலத்தைக் கடத்தி வந்தனர். மாகாண சபைக்கு ஒரு முதலமைச்சர் இருப்பது கூட அவர்களின் கண்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கு எல்லாமே ஆளுநர்தான். முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசரான க.வி.விக்னேஸ்வரன் முதலமைச்சர் பதவியில் அமர்ந்தமை அந்தப் பதவிக்கே பெருமை சேர்ப்பதாகும். ஆனால் வடக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதம செயலாளர் முதலமைச்சரின் உத்தரவுகளை உதாசீனப்படுத்தியதுடன் அவருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யுமளவுக்கு நிலைமை மோசமாக மாறி விட்டிருந்தது. இன்று சந்திரசிறியும் இல்லை, முன்னாள் பிரதம செயலாளரும் இல்லை. ஆனால் மாகாண சபையிலும் ஒன்றுமில்லை.

மக்கள் மாகாணசபை உறுப்பினர்களை ஏதோவொரு நம்பிக்கையுடன் தான் தெரிவு செய்தனர். மாகாண சபைக்கான தேர்தல் பரப்புரைக் கூட்டங்களிலும் மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும் விதத்தில் உரைகள் ஆற்றப்பட்டன. மூன்றிலொரு பெரும்பான்மை பலம் கிடைத்தால் தம்மால் நிறையவே சாதிக்க முடியுமென அங்கு வைத்து மக்களிடம் கூறப்பட்டது. மக்களும் இதை நம்பி அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் தமது வாக்குகளை அளித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வெற்றி உலக அளவில் விதந்துரைக்கப்பட்டது. ஆனால் மாகாண சபையால் மக்களின் ஏக்கங்களைத் தணிக்க முடியவில்லை.

புங்குடுதீவு மாணவியின் கொலைச் சம்பவத்தின்போது அவர் காணாமற்போனமை தொடர்பாக முறைப்பாடு தெரிவிக்கச் சென்றவர்கள் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளாததால் திரும்பி வந்ததாக நீதிமன்ற விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மனதுக்கு வேதனை தரும் கருத்துக்கள் சிலவற்றைப் பொலிஸார் அப்போது தெரிவித்ததாகவும் தெரிய வருகின்றது. மாகாண பொலிஸ் நிர்வாகம் இங்கு இருந்திருந்தால் இத்தகையதொரு நிலைமை இங்கு ஏற்பட்டிருக்க மாட்டாதெனக் கூறுவோரும் உண்டு. அத்துடன் மாகாண சபை நிர்வாகம் பொலிஸாருக்கு உரிய உத்தரவுகளைப் பிறப்பிப்பதன் மூலமாகக் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த முடியுமென்ற கருத்தும் இங்கு நிலவுகின்றது. மேலும் காணி அதிகாரமும் வழங்கப்படாததால் காணி தொடர்பான பிணக்குகள் ஏற்படும்போது மாகாண சபையால் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கவே முடிகின்றது. வலி.வடக்கில் படையினரால் ஆக்கிரமித்து வைக்கப்பட்டுள்ள காணிகளைப் பார்வையிடுவதற்குக்கூட முதலமைச்சர் இயலாத நிலையில் உள்ளார்.



“ முன்னரெல்லாம் மாகாண சபைகளை வெள்ளை யானைகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவார்கள். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்து வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது. ஆனால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத இனவாதிகள் தமது மாகாணங்களிலும் மாகாணசபைகளை அமைத்துக் கொண்டனர்.

மாகாண சபைக்குத் தெரிவானவர்கள் பதவிச் சுகத்தையும், தமக்கு வழங்கப்படும் வரப்பிரசாதங்களையும் அனுபவித்துக் கொண்டிருப்பதற்கு மக்கள் அவர்களைத் தெரிவு செய்யவில்லை. மேலும் வெறுமனே தீர்மானங்களை நிறைவேற்றிவிடுவதிலும் பயன் ஒன்றும் விளையப்போவதில்லை.

முன்னரெல்லாம் மாகாணசபைகளை வெள்ளை யானைகளுக்கு ஒப்பிட்டுப் பேசுவார்கள். இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் தமிழர்களுக்குத் தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வடக்குக் கிழக்கு மாகாணங்களை இணைத்து வடக்கு கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்டது. ஆனால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத இனவாதிகள் தமது மாகாணங்களிலும் மாகாணசபைகளை அமைத்துக் கொண்டனர். இந்தச் சின்னஞ்சிறிய தீவிலே இன்று ஒன்பது மாகாண சபைகள் இயங்கி வருகின்றன. உண்மையாகச் சொல்லப் போனால் பெரும் நிதிச்செலவை ஏற்படுத்தும் வகையிலேயே மாகாண சபைகள் இயங்கி வருகின்றன.

வடக்கு மாகாண சபையின் நிலைமையும் அதை ஒத்ததாகவே உள்ளது. முன்பொரு தடவை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ வட பகுதிக்கு வருகை தந்தபோது வடக்கு மாகாணசபை வைக்கோல் பட்டடை நாய்போன்று செயற்படுவதாக மிகக் கீழ்த்தரமான விமர்சனத்தை முன்வைத்திருந்தார். தற்போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முதலமைச்சர் விக்னேஸ்வரனைக் கீழ்த்தரமான வகையில் விமர்சித்ததாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்த நிலையில் மாகாணசபை மத்திய அரசின் ஒத்துழைப்பை எதிர்பார்த்திருப்பதில் அர்த்தமே இல்லை.

அதிகாரமில்லாத ஒன்றைக் கட்டிப்பிடித்துக் கொண்டு எம்மவர்கள் காத்திருப்பதில் பயனொன்றும் கிடைக்கப்போவதில்லை. இன்று மாகாணசபை உருவாக்கப்பட்டதன் நோக்கமே சிதைந்து போய்க் கிடக்கின்றது.

ஆகவே அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். வெறுமனே அறிக்கைகள் வெளியிடுவதும், ஆக்ரோஷமாகப் பேசுவதும் இனியும் மக்களிடம் எடுபடாது என்பதையும் மாகாணசபை உறுப்பினர்கள் உணர்ந்து கொள்ள வேண்டிய தருணம் வந்துவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இன்றைய மாணவர்களில் குறைபாடு கள் ஏற்படக் காரணம் யாது?

பெற்றோர்களும் ஆசிரியர்களும் மாணவர்களுக்கு நல்ல எடுத்துக் காட்டாக வாழ்ந்து காட்டாமையே இன்றைய மாணவர்கள் சரியான நடைமுறைகளி லிருந்து பிறழ்வதற்குக் காரணமாகும்.

**சாயி சிந்தனை**

## நாளை

**ஆனி-04**
**வெள்ளிக்கிழமை**
**19.06.2015**

**திதி:** திருதியை மு.இ. 08.44 வரை
**நட்சத்திரம்:** புனர்பூசம் மு.ப.08.16 வரை
**சுபநேரம்:** 05.54-07.24 வரை
**இராகுகாலம்:** 10.24-11.54 வரை

## முதுகு வலியிலிருந்து எப்படித் தப்பிக்கலாம்?

உடலுக்கு எந்த வேலையையுமே கொடுக் காத பெண்களுக்கு முதுகு வலி வரும் வாய்ப்பு அதிகமாம். உடல் எடை அதிகரிக்கும்போது முதுகு வலி வரலாம். கர்ப்பகாலத்தில் பல பெண்களுக்கு முதுகு வலி வருவதும் இத னால்தான். மெனோபாஸ் காலத்தில் பெண் களது உடலில் ஹர்மோன் சுரப்பு குறைய ஆரம்பிக்கும். அதனாலும் முதுகு வலி வர லாம். உடலமைப்புக்கும், முதுகுவலிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. முதுகு வலி என்பது குண்டான, ஒல்லியான, உயரமான, குட்டையான என எல்லாப் பெண்களுக்கும் வரலாம். ஒரே இடத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்திருப் போருக் கும் முதுகு வலி வரலாம். எனவே அப்படிப்பட்ட வேலை பார்ப்பவர்கள் அடிக்கடி எழுந்து நிற்கவோ, நடக்கவோ வேண் டும். படுக்கும் போது அடிக் கடி திரும்பிப்படுக்க வேண் டும். ஒரே மாதிரிப் படுத்துத் தூங்கக் கூடாது.

**சிகிச்சை முறைகள் :**

நிற்கும் போது உடலில் எடையை இரு கால்களும் சம அளவில் தாங்கியிருக்கும்படி நிற்க வேண்டும். பைசா கோபுரம் கணக்கில் சாய்ந்து நிற்கும் வேலை வேண்டாம். உட்காரும் போது முதுகுப் பகுதிக்கு சப்போர்ட் இருக்கும்படி பார்த் துக் கொள்ள வேண்டும். பின் னால் குஷன் வைத்த தலை யணை வைத்துக் கொள்ள லாம்.

கீழே விழுந்த எதையாவது எடுக்க வேண்டுமானால் அப் படியே வளைந்து குனியா மல், உட்கார்ந்து முதுகை வளைக்காமல் எடுக்கவும். ஏற்கனவே முதுகுவலியால் அவதிப்பட்டுக் கொண்டிருப் பவர்கள், நீண்ட நேரம் உட் கார்ந்திருப்பதைத் தவிர்க்கவும். அதிக எடையுள்ள பொருள் களை தூக்க வேண்டாம். கொஞ்சம் எடை அதிகமான பொருளைக்கூட வயிற்றுக்கு மேல் உயர்த்தித் தூக்க வேண் டாம்.

(தொடரும்)



## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....

### நமக்கு நாமே கடவுள்

அச்சம் எதனால் உண்டாகிறது? எமது சொந்த இயல்பை நாம் அறியாததால்தான். நாம் ஒவ்வொருவரும் அரசர்களுக் கெல்லாம் பேரரசரின் வாரிசுகள். நாம் கடவுளின் அம்சமே, வேதாந்தத்தின் படி நாம் கடவுளே. சிறிய மனிதர்களாக எம்மை நினைத்து, அதனால் சொந்த இயல்பை மறந்திருந்தாலும் நாம் கடவுளே. அந்த இயல்பு நிலையிலிருந்து நாம் வழுவி விட்டோம். அதனால் நான் உன்னைவிடச் சிறிது மேலானவன் அல்லது நீ என்னை விட மேலானவன் என்றெல்லாம் வேற்றுமைகளைக் காண்கிறோம். இந்த ஒருமைக் கருத்துத் தான் உலகுக்குத்தர வேண்டிய மகத்தான பாடம். நன்றாகக் கவனியுங்கள். இந்தக் கருத்தைப் புரிந்து கொண்டால் பொருள்களின் தன்மையையே இது மாற்றிவிடும். ஏனெனில் அப்போது நீங்கள் உலகத்தை இதுவரை பார்த்துவந்த கண்ணோட்டத்தில் இருந்து வேறான கண்ணோட்டத்தில் பார்ப்பீர்கள்.

## கடலுணவுகளின் நேற்றைய விலை நிலவரம்

| | யாழ்ப் பாணம் | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித் துறை | சாவகச்சேரி | மாதகல் |
|---|---|---|---|---|---|---|
| இறால் | 700 | 800 | 800 | 700 | 650 | 600 |
| நண்டு | 300 | 600 | 400 | 500 | 200 | 400 |
| கணவாய் | 650 | 600 | 600 | 700 | 600 | – |
| பாரை | 650 | 750 | – | 500 | 600 | 380 |
| சுறா | 600 | 500 | – | 600 | – | – |
| சீலா | 300 | 450 | 500 | 400 | 500 | – |
| விளை | 650 | 400 | 400 | 450 | 550 | 350 |
| முரல் | 300 | 500 | 400 | 400 | 400 | 300 |
| கும்பிளா | 400 | 350 | 400 | 350 | 450 | 250 |
| கிழாக்கன் | 650 | 700 | 400 | 500 | – | 550 |
| ஒரா | 400 | 350 | 300 | 450 | 400 | – |
| திரளி | 200 | 300 | 200 | 300 | 150 | 250 |
| நகரை | 200 | 300 | 200 | 350 | 300 | 300 |
| சூடை | 150 | 250 | 100 | 120 | 100 | 100 |
| ஒட்டி | 250 | 300 | – | 300 | 300 | 250 |
| திருக்கை | 150 | 350 | 100 | 250 | 300 | 150 |
| பாலை | 250 | 250 | 300 | 400 | 450 | – |
| வாளை | 100 | 200 | – | 250 | – | – |
| கொய் | 100 | 200 | 100 | 120 | 100 | – |
| மதனம் | 150 | 300 | 200 | 280 | 400 | 250 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 70 | – | 120 | 60 | 80 | 80 | 80 | 30 |
| கத்தரி | 70 | 60 | 60 | 60 | 60–70 | 60 | 80 | 45–60 |
| கரட் | 180 | 180 | 160–280 | 160 | 180–260 | 240 | 220 | 240 |
| மரவள்ளி | 30 | 60 | 50 | 50 | 60 | 80 | 80 | 40 |
| பயிற்றை | 160 | 120 | 160 | 120 | 180–200 | 160 | 140 | 130 |
| பாகல் | 180 | 160 | 160 | 160 | 260 | 120 | 160 | 130 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 100 | 120 | 100 | 80 | 160 | 65 |
| பெ.வெங்காயம் | 100 | 100 | 100 | 100 | 120 | 120 | 120 | 100 |
| சி.வெங்காயம் | 100 | 120–140 | 140 | 140 | 140 | 200 | 180 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 | 30 | 30 | 40 | 60 | 15 |
| தக்காளி | 80 | 80 | 70 | 70 | 80 | 70 | 80–100 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 50 | 50 | 40 | 80 | 30 |
| கீரை | 10 | 20 | 40 | 10 | 20 | 30 | 35–40 | 35 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 35 | 20 | 20 | 15 | 10 |
| பச்சை மிளகாய் | 120 | 120 | 100 | 120 | 120 | 200 | 200 | 160 |
| புடோல் | 60 | 100 | 60 | 100 | 80 | 60 | 80 | 70 |
| கோவா | 100 | 100 | 100 | 100 | 80 | 100 | 100–120 | – |
| வெண்டி | 120 | 100 | 100 | 120 | 120 | 120 | 120 | 60 |
| போஞ்சி | 160 | 140 | 300 | 180 | 240 | 300 | 260 | 180 |
| லீக்ஸ் | 180 | 160 | 160 | 140 | 160 | 240 | 160 | 180 |
| தேங்காய் | 50 | 30–40 | 60 | 50 | 40–50 | 40 | 35–45 | 35–40 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 120 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 140 | 120 | 160 | 140 | 140 | 100 | 160 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 15 | 40 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 120 | 160 | 120 | 140 | 220 | 240 | 180 | 180 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 140 | 120 | 120 | 180 | 80 |
| முருங்கைக்காய் | 450 | 400 | 500 | 250 | 200–300 | 200 | 200 | 170 |

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | 8 | 5 | | | |
| | | | | 6 | | 8 | | 4 |
| | | | 2 | | | 9 | 5 | 7 |
| | | | | | | 7 | 8 | 1 |
| | | | | | | | | |
| 4 | 9 | 1 | | | | | | |
| 5 | 2 | 3 | | | 7 | | | |
| 1 | | 6 | | 9 | | | | |
| | | | 1 | 5 | | | 2 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 7 | 1 | 2 | 8 | 9 | 6 | 3 | 4 |
| 2 | 8 | 3 | 5 | 6 | 4 | 7 | 1 | 9 |
| 6 | 9 | 4 | 3 | 1 | 7 | 8 | 2 | 5 |
| 1 | 4 | 8 | 7 | 9 | 2 | 5 | 6 | 3 |
| 7 | 6 | 5 | 8 | 4 | 3 | 2 | 9 | 1 |
| 3 | 2 | 9 | 6 | 5 | 1 | 4 | 8 | 7 |
| 9 | 1 | 6 | 4 | 2 | 5 | 3 | 7 | 8 |
| 4 | 3 | 2 | 9 | 7 | 8 | 1 | 5 | 6 |
| 8 | 5 | 7 | 1 | 3 | 6 | 9 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப் படை. 1-9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண் டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக் கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையி லும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப் பப்பட வேண்டும். அவ்வாறு நிரப் பப்படுகையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ் வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண் டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக் கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப் பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என் பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜூன் மாத எண் சோதிடப் பலன்கள்

7, 16, 25 ஆகிய திகதிகளில் பிறந்த உங்களுக்கு இந்த மாதம் நீங்கள் நினைத்த காரியம் நிறைவேறும். ஓரளவு பணவரவு உண்டு. குடும்பத்தில் திருமணம் ஏற்பாடாகும். குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. உறவினர்கள், நண்பர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். விருந்தினர் வருகை அதிகரிக்கும். சிலர் இருக்கும் வீட்டைச் சிறிது விரிவுபடுத்திக் கட்டுவீர்கள். முன்கோபம், வாகன விபத்து, மன உளைச்சல் ஏற்பட்டு நீங்கும். யாருக்கும் பிணைக் கையெழுத்துப் போடாதீர்கள். உடன்பிறந்தவர்களை அனுசரித்துப் போங்கள். வழக்கில் வழக்கறிஞரை மாற்றுவீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமுக தீர்வு காண்பது நல்லது. அக்கம் பக்கத்து வீட்டார் அன்பாக பேசுகிறார்கள் என்று குடும்ப விடயங்களைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்காதீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுய ரூபத்தைப் புரிந்து கொள்வீர்கள்.



8, 17, 26 ஆகிய திகதிகளில் பிறந்த உங்களுக்கு இந்த மாதத்தில் உங்களது நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். அனுபவ அறிவால் தடைப்பட்ட காரியங்களை முடிப் பீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் ஏற்படும். விலை உயர்ந்த மின்சார சாதனங்கள் வாங்குவீர்கள். பூர்வீகச் சொத்திலிருந்த வில்லங்கம் விலகும். தடைப்பட்டிருந்த வீடு கட்டும் பணி தொடரும். வராது என்றிருந்த பணம் கைக்கு வந்து சேரும். மனதுக்கு இதமான செய்திகள் வரும். கல்யாணம், காதுகுத்து என்று வீடுகளைகட்டும். சொந்த பந்தங்கள் மதிக்கும் அளவுக்கு நடந்து கொள்வீர்கள். எதிர் பார்த்த வகையில் உதவி கிடைக்கும். ஏளனமாகப் பார்த்த உறவினர்களுக்கு பதிலடி தருவீர்கள். அவ்வப்போது எதிலும் ஒருவித பயம், கவலை வந்து போகும். சகோதர வகையில் சங்கடங்கள் வரும். அரச காரியங்கள் தாமதமாக முடியும். அநாவசியச் செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள்.





# பெண்ணுக்குப் பெருமை

ஆணும், பெண்ணும் இணைந்ததுதான் மனிதம். ஆண் என்பவன் ஆண்மைத் தன்மையோடு பிறக்கிறான், பெண்ணானவள் பெண்மைத் தன்மையோடு பிறக்கிறாள். இது தான் உலக நியதி. இந்த நியதியிலிருந்து எவரும் மாறுபட்ட பாதையில் பயணிக்க இயலாது.

இறைவன் ஆணுக்கும், பெண்ணுக்கும் சமமான சக்தியைக் கொடுத்துத் தான் படைத்திருக்கிறார். ஆனால் பெண் என்பவள் தனக்குள்ளிருக்கும் சக்தியை உணர்ந்து கொள்ள முயலுவதில்லை. அவளும் ஆணுக்கு சமமாக சக்தியை சுதந்திரமாக பிரயோகிக்கக்கூடிய வல்லமையைப் பெற்றிருக்கிறாள். ஆனால் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள மறுக்கிறாள். அவள் தன்னைச் சுற்றி ஒரு வட்டத்தை வரைந்து கொள்கிறாள். அதற்குள்ளே அடக்கிக் கொண்டு வாழ முற்படுகிறாள். அவளுக்குக் கிடைக்கப் பெற்ற சக்தியைப் பயன்படுத்தாமல், பெண் என்றால் பலவீனமானவள் என்ற தவறான கருத்தைத் தெரிவிக்க முயலுகிறாள். தன்னிடமுள்ள சக்தியை.அறிந்து செயற்படும் ஒவ்வொரு பெண்ணையும் இந்த உலகம் போற்றிப் பெருமைப்படுகிறது.

இந்தச் சக்தியைப் பயன்படுத்தும் எந்தப் பெண்ணிடமிருந்தும் அன்பு, பாசம், தாய்மை, கருணை, இரக்கம், தன்னலமற்ற சேவை போன்ற பெண்ணிய குணங்களை அழித்து விடமுடியாது. சாதனைப் பெண்ணாக இருந்தாலும், சாதாரண பெண்ணாக இருந்தாலும் இருவரும் இத்தகைய பெண்ணியத் தன்மைகளை அவ்வளவு எளிதாகப் புறம் தள்ளிவிட இயலாது. எத்தகைய சூழ்நிலைக்கும் இந்தப் பெண்ணியத் தன்மைகள் ஒரு பெண்ணுக்கு மருந்தாக உதவுகிறது. ஒரு பெண் என்பவள், சந்தோஷம், துயரம் ஆகிய இரு நிலைகளையும் சரிசமமாக ஏற்றுக் கொண்டு வாழும் மனப்பக்குவத்தைப் பெறுகிறாள். இந்தப் பெண்ணியத் தன்மைகள் ஒரு பெண்ணுக்கு பொறுமையின் மகத்துவத்தை எடுத்துரைக்கிறது. பெண்ணின் பொறுமை எத்தகைய சூழ்நிலையையும் சமாளிக்கும் வல்லமையைப் பெற்றது. ஒரு பெண்ணுடைய முழுமையான தோற்றம் பெண் சக்தியோடும், பெண்ணியத் தன்மைகளோடும் நிறைவு பெறுகிறது.

பருவமடைந்த பெண் ஆணுடன் உறவு வைத்துக் கொள்வது இயற்கையின் நியதி. இதற்கு மாறாக செயற்படும் பெண்ணின் பெண்மை பெருமளவில் பாதிக்கப்படுகிறது. சொல்ல முடியாத நோயால் அவளுடைய உடல் வருந்துகிறது, மன அழுத்தம் அவளை வாட்டுகிறது. உடலாலும், உள்ளத்தாலும் வேதனையடைந்த பெண்ணின் பெண்மை சீரழிந்த நிலையைப் பெறுகிறது. இயற்கைக்கு முரண்பாடாக செயல்படும் பெண்ணின் பெண்மை வேதனையின் வலியை அனுபவிக்கிறது. நதியானது மலைகள், பள்ளங்கள், கரடு முரடான பாதைகளைக் கடந்து எவ்வாறு ஓடுகிறதோ அது போலப் பெண் என்பவள் பெண்மையின் இலக்கணத்தோடு தான் வாழ்க்கைப் பாதையில் பயணிக்க வேண்டும். இது தான் இயற்கை, இதுதான் பெண்ணுக்கும் பெருமை.

# பெண்களின் தாய்மைப் பருவம்

தாய்மைப் பருவம் பெண்களின் மிக முக்கிய பருவம். ஆனால் பெரும்பாலான பெண்கள் கர்ப்பகாலத்தையும், பிரசவத்தையும் அதிக அச்சத்துடனே எதிர் கொள்கின்றனர். வயிற்றில் இருக்கும் கருக்குழந்தைக்கு சேர்த்து சத்தான உணவு உட்கொள்வதால் உடல் நிலையில் மாற்றம் ஏற்படுவது இயற்கை. பிரசவத்துக்குப் பின்னர் குழந்தை வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தும் பெண்கள் தங்களைப் பற்றியும், உடலமைப்புப் பற்றியும் கவலைப்படுவதில்லை.

ஹார்மோன் சுரப்பில் ஏற்படும் மாற்றங்களினால் உடற்பருமன் ஏற்படுகிறது. இதனாலும், பிரசவ கால தழும்புகளாலும் பெண்களுக்கு அதீத கவலையும் மன அழுத்தமும் ஏற்படுகின்றன. குழந்தையைப் பாதிக்காத வகையில் தாய்மார்கள் தங்களது உடல் நலனில் அக்கறை செலுத்தவேண்டும் என்கின்றனர் மகப்பேற்று மருத்துவர்கள்.

**தழும்புகள் மறைய**

கர்ப்பமாக இருக்கும்போது விரிவடையும் தசைகள் பிரசவத்துக்குப் பின்னர் சுருங்குகின்றன. ஒரு பெண்ணின் தாய்மையை உணர்த்துவதே இந்தத் தழும்புகள் தான். பெண்களுக்கு வயிற்றுப் பகுதியிலும், தோல், தொடைப் பகுதிகளிலும் தழும்புகள் ஏற்படுகின்றன. கர்பமாக இருக்கும்போதே அரிக்கத் தொடங்கும். அந்த இடத்தில் உடனே கைகளால் சொறிவதை மென்மையான துணிகளைக் கொண்டு அந்த இடத்தை ஒத்தடம் கொடுக்கலாம். மேலும் பாதாம் எண்ணெய், கிரீம் போன்றவைகளை அரிக்கும் இடத்தில் தடவினால் தழும்புகள் ஏற்படாது.

**கருவளையக் கண்கள்**

பச்சிளம் குழந்தையைப் பாதுகாக்க வேண்டும் என்ற கவனத்தில் தாயின் தூக்கம் பறிபோகிறது. இதனால் கண்களைச் சுற்றி கரு வளையம் போன்றவை ஏற்படுகின்றன. இவை அதிக சோர்வை ஏற்படுத்துகின்றன. விற்றமின் 'கே' பற்றாக்குறையினாலேயே கண்களைச் சுற்றி கருவளையம் ஏற்படுகிறது. எனவே சத்தான உணவுகளையும், சீரான உறக்கத்தையும் மேற்கொள்ளவேண்டும்.

**கூந்தல் உதிர்வு**

கர்ப்பகாலத்தில் சத்தான உணவுகளை உண்ணும் பெண்கள் குழந்தை பிறந்த பின்னர் உணவுகளில் அதிக கவனம் செலுத்துவதில்லை. பெரும்பாலான சத்துக்கள் பிரசவத்தின் போது இழக்கப்பட்டு விடுவதால் சரியான போஷாக்குக் கிடைப்பதில்லை. இதனால் பிரசவித்த பெண்களுக்கு கூந்தல் உதிர்கிறது. எனவே இரும்புச் சத்துள்ள காய் கறிகள், கீரைகள் போன்ற உணவுகளை உண்பதன் மூலம் இழந்த சத்துக்களை பெறமுடியும். கூந்தலுக்கு வாரம் ஒரு முறை எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம். இதனால் கூந்தல் உதிர்வது தடுக்கப்படும். உதிர்ந்த கூந் தல் வளர்ச்சியடையும். கர்ப்ப காலத்தில் கூந்தல் உதிர்வது அனேகப் பெண்களுக்கு பிரச்சினை. இந்தக் காலத்தில் எனனதான் போஷக்கான உணவைச் சாப்பிட்டாலும் பிரச்சினை தீராது. வருமுன் காப் பதே இதற்குச் சரியான தீர்வு. குழந்தை பெற்றுக் கொள்ள முடிவெ டுக்கும் முன்பே இரும்புச் சத்துள்ள உணவை அதிகம் சாப்பிட்டு வரவேண்டும்.

**வறண்ட சருமம்**

கர்ப்பகாலத்தில் ஹார்மோன்களின் சுரப்பு அதிகரிப்பதால் உடல் வறட்சித் தன்மையடைகிறது. இதனால் சருமம், செதில்செதிலாக மாறும். மென்மையான மாய்ஸரைசர் பூசிவர சருமம் மென்மையடையும். பிரசவித்த பெண்களுக்கு கரும்புள்ளிகள் ஏற்படுவது இயற்கை. வெளியில் செல்லும் போது வெயிலில் இருந்து பாதுகாப்பதற்கான கிரீம் உபயோகிக்கலாம். போலிக் அமிலம் உள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். பச்சைக் காய்கறிகள், முட்டை போன்றவைகளை உணவில் சேர்த்துக்கொள்ள வேண்டும். முகத்தில் கருவளையம் உள்ள இடங்களில் ஸ்க்ரப் வைத்துத் தேய்த்தால் இறந்த செல்கள் உதிர்ந்து விடும்.

**பித்த வெடிப்பு**

நீர்ச்சத்துக் குறைவினால் பெண்களுக்குக் கால்களில் பித்த வெடிப்பு ஏற்படுகிறது. தினசரி காலை, மாலை நேரங்களில் பித்தவெடிப்பை போக்கும் கற்களைக் கொண்டு தேய்க்க இறந்த செல்கள் உதிர்ந்து விடும். வாஸலின் பூசி வர பித்தவெடிப்புக் குணமடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லாவின் அறிவாற்றல்



முல்லா நல்ல அறிவாளி என்றும் எவ்வளவு பெரிய ஆபத்து ஏற்பட்டாலும் தமது அறிவாற்றலினாலேயே அந்த ஆபத்திலிருந்து தப்பி விடுவார் என்றும் ஊரில் உள்ளவர்களில் பலர் கூறுவது மன்னரின் காதில் விழுந்தது. முல்லாவின் அறிவாற்றலைப் பரிசோதிப்பதற்காக மன்னர் ஒரு நாள் முல்லாவைத் தமது சபைக்கு வரவழைத்தார். முல்லா வந்து வணங்கி நின்றார். முல்லா உமது அறிவைப் பரிசோதனை செய்ய நினைக்கிறேன், நீர் ஏதேனும் ஒன்றைக் கூறும், நீர் சொல்வது உண்மையாக இருந்தால் உமது தலை வெட்டப்படும், நீர் சொல்வது பொய்யாக இருந்தால் நீர் தூக்கில் ஏற்றப்படுவீர் என்றார் மன்னன். முல்லா உண்மையைச் சொன்னாலும் அல்லது பொய்யைச் சொன்னாலும் அவர் உயிருக்கு ஆபத்து தயாராக இருக்கிறது. முல்லா நிலமையை எவ்வாறு சமாளிக்கபோகிறார் என்று சபையோர் அவரையே கவனித்தனர். முல்லா மன்னனை நோக்கி மன்னன் அவர்களே தாங்கள் என்னை தூக்கில் போட போகிறீர்கள் என்று பதற்றம் ஏதுமின்றிக் கூறினார். அதைக் கேட்ட மன்னர் திகைப்படைந்தார். முல்லா சொன்னது உண்மையானால் அவருடைய தலை வெட்டப்பட வேண்டும். அவ்வாறு வெட்டப்பட்டால் அவர் கூறியது பொய்யாகிவிடும். முல்லா கூறியது பொய் என்று வைத்துக் கொண்டால் முல்லாவைத் தூக்கில் போடவேண்டும். தூக்கில் போட்டால் அவர் கூறியது உண்மை என்று ஆகிவிடும். உண்மை எனக் கருதினால் அவரைத் தூக்கில் போடாமல் கழுத்தை வெட்ட வேண்டும். இப்படி ஒரு குழப்பத்தை தமது அறிவாற்றலால் தோற்றுவித்து முல்லா மன்னனைத் திக்குமுக்காடச் செய்து விட்டார். அவரது அறிவாற்றலைக் கண்ட மன்னர் மிகவும் மகிழ்ச்சியடைந்து பொன்னையும் பொருளையும் பரிசாகக் கொடுத்து அனுப்பினான்.




# புதிய ஆத்திச்சூடி!

அன்பாக இருக்கனும்...
ஆசைகளை அடக்கனும்...
இனிமையாகப் பழகனும்...
ஈகை குணம் வளர்க்கனும்...
உண்மையையே
பேசனும்...
ஊக்கத்தோடு படிக்கனும்...
எளிமையாக இருக்கனும்...
ஏற்றம் பெற உழைக்கனும்...
ஐயங்களைப் போக்கனும்...
ஒற்றுமையாய் வாழனும்...
ஓடி விளையாடனும்...
ஔவை வழி நடக்கனும்...
இஃதே வாழ்வின்
இலக்கணம்..!

# வர்ணம் தீட்டலாம் வாங்க







# நட்பு

## முறியப் போவதற்கான சில அறிகுறிகள்!!!

உறவுகளிலேயே மிகவும் புனிதமானது நட்புத் தான். அத்தகைய நட்பு இல்லாமல் எவராலும், இந்த உலகில் நிம்மதியாக வாழ முடியாது. நட்பு இல்லாவிட்டால், உலகமே வெறிச்சோடிக் காணப்படும். ஏனெனில் ஒருவர் தனது உணர்ச்சியை, கஷ்டத்தை எவரிடம் பகிராமல் இருந்தாலும், நிச்சயம் நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ளாமல் இருக்க முடியாது. 'தோள் கொடுப்பான் நண்பன்' என்று சும்மாவா சொன்னார்கள். ஏனெனில் எந்த ஒரு கஷ்டமான நிலையிலும், எவர் விட்டுச் சென்றாலும், நண்பர்கள் மட்டும் பிரிந்து செல்லமாட்டார்கள். அந்தக் கஷ்ட காலத்தில், அதனைப் போக்குவதற்கு முயல்வதோடு, சந்தோஷமாகவும் வைத்துக் கொள்வார்கள். இந்த உலகில் அனைவருக்கும் மிகவும் நெருங்கிய நண்பர் என்ற ஒருவர் இருப்பார். அத்தகையவர்களின் மீது நிச்சயம் 'தனக்கு மட்டுமே சொந்தம்' என்ற எண்ணம் இருக்கும். அத்தகைய எண்ணத்தால், யாரிடமும் அவர்களை விட்டுத் தர மாட்டோம்.

உறவுகளில் பிரிவு இருப்பது என்பது சாதாரணமான விடயம். ஆனால் எந்த ஒரு உறவுக்கும் இவ்வுலகில் பிரிவு இருந்தாலும், நட்புக்கு பிரிவு இருக்காது என்று நினைக்கிறோம். உண்மையில் அத்தகைய உறவிலும் பிரிவு என்ற ஒன்று இருக் கிறது. அத்தகைய பிரிவு வெளிப்படையாகத் தெரியாது. ஒருசில அறிகுறிகள் மூலமே தெரியும். மேலும் நண்பர்கள் வேண்டுமென்றே பிரிய நினைப்பதில்லை. இதற்குப் பின் னால் நிச்சயம் ஏதேனும் ஒரு காரணம் இருக்க வேண்டும். அவ்வாறு நெருங்கிய நண்பர்கள் எம்மை விட்டு விலக நினைக்கிறார்கள் என்பதை அறிய சில அறிகுறிகள் உள்ளன. அது என்ன அறிகுறிகள் என்னவென்று படித்து தெரிந்து கொள்ளுங்கள். எந்த நேரத்திலும் தம்முடன் இருந்து, சந்தோஷமாகப் பேசிக் கொண்டு இருப்பதை விரும்பிய நண்பன், திடீரென்று வேலை இருக்கிறது என்று அடிக்கடி சொல்லிக் கொண்டு சென்றால், அவர் எம்மை விட்டுப் பிரிய நினைக்கிறார் என்று புரிந்து கொள்ளலாம். சில நேரங்களில் உண்மையில் வேலை இருக்கலாம். ஆனால் சில நேரங்களில் வேண்டுமென்றே அவ்வாறு பொய் சொல்வதை எளிதில் புரிந்து கொள்ளலாம்.



இதுவரை நண்பனாக இருந்து, எப்போதும், எந்த ஒரு சூழ்நிலையிலும் தனக்கே முக்கியத்துவம் கொடுத்துப் பேசியவர்கள், திடீரென்று அதனைத் தவிர்த்து, வேறு ஏதாவதொன்றுக்குச் சம்பந்தமே இல்லாமல், தம்மை தவிர்த்து முக்கியத்துவம் கொடுத்தால், அதனைக் கொண்டும் அவர்கள் பிரிய நினைக்கிறார்கள் என்ற எண்ணத்தைப் புரிந்து கொள்ளலாம்.

ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வயதில் தினம் தினம் ஒரு நண்பர்கள் கிடைப் பார்கள். அவ்வாறு கிடைத்துவிட்டால், இதுவரை எங்கு சென்றாலும், அழைக் காமல் செல்லாத நண்பன், சிறிதும் அழைக்க வேண்டும் என்று எண்ணாமல், அடிக்கடி புது நண்பர்களுடன் தனியாகச் செல்வதைக் கொண்டும், பிரிய நினைக்கி றார்கள் என்று புரிந்து கொள்ளலாம். இந்த நேரத்தில் அவசரப்பட்டு நண்பர்களை தவறாக நினைத்து பிரியாமல், அவர்களு டன்மனம்விட்டுபேசி கலந்து ஆலோ சித்து, அதற்கான காரணத்தைத் தெரிந்து கொண்டு, பின் எந்த முடிவையும் எடுக்க வேண்டும்.

உறவுகளுக்குள் பெரும்பாலும் பிரச்சினை ஏற்படுவதற்கு பொறாமையும் ஒரு காரணம். அத்தகைய பொறாமையானது புனிதமான நட்புறவைக் கூடப் பிரித்து விடும். அதிலும் பொறாமை, ஒரு பெண்ணால் கூட பிரிந்துவிடும். ஆம், தாம் காதலிக்கும் பெண்ணையே, தனது நண் பனும் காதலித்து, அது அந்த பெண்ணுக் குப் பிடிக்க, இதுவரை நெருக்கிய நண்பர் களாக இருந்தவர்கள், ஒரு பெண் மீது கொண்ட அன்பால் ஒருவரை ஒருவர் வெறுத்துப், பிரிந்து விடுகின்றனர். அடுமட்டுமின்றி வேறு ஏதா வது புதிய நண்பர்கள் கிடைத்து விட்டாலும் பொறாமை ஏற்படும். இத்தகைய பொறாமை வெளிப்படையாகத் தெரியாது. ஆனால் அவர்களது நடவடிக்கைகள் மற்றும் செயல் களில் நன்கு புலப்படும். இதை வைத்தும் நட்புறவு முறியப் போகிறது என்று தெரிந்து கொள்ளலாம். இவையே சில நட்பு பிரிவ தற்கு காரணங்கள் மற்றும் அறி குறிகள் ஆகும். வேறு ஏதாவது நட்பை முறிக்கும் காரணங்கள் உங்களுக்குத் தெரிந்தால், அதை எங்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை எம்மிடம் ஒப்படையுங்கள்

*கேட்கிறார் நிமல் சிறிபாலடி சில்வா*

கொழும்பு, ஜூன் 18

புதிய தேர்தல் முறைமையான 20 ஆவது திருத்தத்தை நிறைவேற்றிகொள்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு முடியாவிட்டால், அரச அதிகாரங்களை விட்டு விட்டு சிறி லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிடம் அரசை ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் நிமல் சிறிபாலடி சில்வா கோரியுள்ளார்.

சிறி லங்கா சுதந்திரக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்ற விடாது கூட்டணிக் கட்சிகளுடன் ஐக்கிய தேசியக் கட்சி இணைந்து இரட்டைவேடம் பூண்டு இழுத்தடித்து வருகின்றது.

அவற்றை நிறைவேற்றிகொள்வதற்கு சிறி லங்கா சுதந்திரக் கட்சி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முறையான நடவடிக்கைகளை எடுத்துகொண்டிருக்கின்றன என்று அவர் கூறினார். (த)

# போர் வீரர் வெற்றி நாள் பலாலியில் அனுஷ்டிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 18

ரணவிருசேவா மற்றும் வடமாகாண ஆளுநர் செயலகம் என்பன இணைந்து போர் வீரர்கள் வெற்றி நாள் நிகழ்வை பலாலி இராணுவத் தலைமையகத்தில் நேற்று அனுஷ்டித்தனர். இதன்போது சர்வமதத் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தபோதும், கத்தோலிக்க மத குருமார்கள் நேற்றைய போர் வீரர்கள் நினைவு நாளில் பங்கெடுக்கவில்லை.

ரணவிருசேவா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தினால், போர் வீரர்கள் வெற்றி நாள் நிகழ்வு வருடாந்தம் பலாலி இராணுவத் தலைமையகத்தினால் கொண்டாடப்பட்டு வருகின்றது. நேற்று இடம்பெற்ற இந்த நிகழ்வில், முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகாவின் பாரியார் அனோமா பொன்சேகா பங்கெடுத்திருந்தார்.

வழமை போன்று வடக்கு மாகாணத் திணைக்கள அதிகாரிகள், அரச அதிபர், பிரதேச செயலாளர்கள் ஆகியோருடன், யாழிலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் தூதுவர் நடராஜனும் நிகழ்வில் பங்கெடுத்தனர். (த-5-101)

# சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவை அமைக்கவேண்டும்

*கபே அமைப்பு கோரிக்கை*

கொழும்பு, ஜூன் 18

எதிர்வரும் பொதுதேர்தலுக்கு முன்னர் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவொன்றை அமைக்குமாறு கபே அமைப்பு கோரியுள்ளது.

இவ்வாறு ஆணைக்குழுவொன்றை அமைப்பது தொடர்பிலான அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுத்துகின்றமை நாட்டுக்குச் சாதகமான நிலைமையை தோற்றுவிக்காது என அதன் நிறைவேற்று பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் சுட்டிக்காட்டியுள்ளார்.

20 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை விரைவில் நிறைவேற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

19ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் பெற்ற வெற்றியை இனியும் கொண்டு செல்ல வேண்டும் என அவர் சுட்டிககாட்டினார். (த)

# மைசூர் பருப்புக்கு வரி குறைப்பு

ஒரு கிலோ கிராம் மைசூர் பருப்புக்கு இதுவரையிலும் அறவிடப்பட்ட விசேட பண்டவரி, நேற்று நள்ளிரவு முதல் 4 ரூபா 75 சதத்தால் குறைக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது.

பருப்புக்கான விசேட பண்டவரி இதுவரை காலம் கிலோவுக்கு 5 ரூபாவாக இருந்தது.

இதேவேளை, சோயா மற்றும் எண்ணெய்களுக்கான வரி 20 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று நிதியமைச்சு அறிவித்துள்ளது. (த)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் ஆசிரியராகிய திருமதி சுதர்சினி கணேசதாஸ் அவர்களின் மாமியார்

**திருமதி சிவகாமி சிவராசா (ஓய்வுபெற்ற மருத்துவ மாது)**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

(61062) (19.6.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் சமுத்திரராஜ் இன் அன்புத் தாயார்

**திருமதி ஞானேஸ்வரி மனோகரன்**

நேற்று (17.06.2015) புதன்கிழமை காலமானார். அன்னாரின் திடீர் மறைவால் நாமும் மிகுந்த துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சமுத்திரராஜ் இன்
அன்பு நண்பர்கள்(மானிப்பாய்)

(61066) (19.6.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது நண்பன் சமுத்திரராஜ் இன் அன்புத் தாயார்

**திருமதி ஞானேஸ்வரி மனோகரன்**

நேற்று (17.06.2015) புதன்கிழமை காலமானார். அன்னாரின் திடீர் மறைவால் நாமும் மிகுந்த துயர் அடைவதுடன் அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மருத்துவ பிரதிநிதி, மருத்துவ விற்பனை பிரதிநிதி நண்பர்கள்,
யாழ்ப்பாணம் மருத்துவப் பிரதிநிதிகள் சங்கம் (JMDA)

(61067) (19.6.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் முன்னாள் அதிபர் பொ.சுந்தரலிங்கம் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி அன்னப்பிள்ளை பொன்னையா (பொன்னுத்துரை)**

16.06.2015 செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கல்லூரி சமூகம்
யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை.

(C/16305) (10.6.1)

## கண்ணீர் அஞ்சலி



எமது மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன் அவர்களின் மாமனார்

**பரமக்குட்டி கனகரட்ணம்**

அவர்கள் காலமானதையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

மாவட்ட அலுவலக ஊழியர்கள்,
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.

(61046) (18.6.3)

## மரண அறிவித்தல்



**கட்டையன் சின்னத்தம்பி**

புதிய செம்மணி வீதி, கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கட்டையன் சின்னத்தம்பி நேற்று (17.06.2015) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சின்னத்தம்பி அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், தவராசா (ரக்ரர் தம்பியன்), தங்கராசா (ரக்ரர் பட்டு), லீலவதி (வாகன உரிமையாளர்), சிவலிங்கம் (ரக்ரர் கண்டு), ஜெயகுமார் (ரக்ரர் ரவி), ரவிச்சந்திரன் (ரக்ரர் சாந்தி) யோகராசா (செல்வா-சுவிஸ்) ஆகியோரின் தகப்பனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கல்வியங்காட்டிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புதிய செம்மணி வீதி,
கல்வியங்காடு.

தகவல்:
குடும்பத்தினர் (ரக்ரர் தம்பியன்)
077 2351 211

(61053)(18.6.3)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் ★ 31 . 08 . 1979

மறைவு ★ 29 . 06 . 2014

**ஜனார்த்தனன் கௌசல்யாமதி (கௌசி)**

ஓராண்டு முடிந்துவிட்டது ஆனால்
உங்கள் பசுமையான நினைவுகள்
நம்நெஞ்சைவிட்டு அகலவில்லை
பாசமான உறவுகளை பாதியில் விட்டுவிட்டு
ஏன் இறைவன் அடி சேர்ந்தீரோ
ஆறுதல் அற்ற எம் உறவிற்கு யார்
ஆறுதல் கூறுவர் எதுவும் நிகரில்லை
உங்கள் அன்பிற்கு முன்னால்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

இன்று (18.06.2015) வியாழக்கிழமை நடைபெறும் ஓராண்டு நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காக பிரார்த்தித்தும், தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளவும்.

(61060)(10.6.1)

3ம் கட்டை, ஆனைக்கோட்டை. குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

**முத்துக்குமாரு தங்கராசா**



(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)

பருத்தித்துறை புலோலி தெற்கு (சிலையடியை) நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட முத்துக்குமாரு தங்கராசா நேற்று (17.06.2015) புதன்கிழமை காலை சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு-காஞ்சனமாலை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற பார்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நடராசா, சிவராசா, மங்கையர்க்கரசி ஆகியோரின் இளைய சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் ஆனைவிழுந்தான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிலையடி,
புலோலி தெற்கு, புலோலி.
T.P: 021 2263684,

தகவல்:
குடும்பத்தினர்.

(59747)(18.6.1)

## திருமதி தனேஸ்வரி நாகமுத்து

தோற்றம் 06.10.1948

மறைவு 16.06.2015



கதிரிப்பாய் அச்சுவேலியைப்பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனேஸ்வரி நாகமுத்து 16.06.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தன்-அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் நாகமுத்துவின் அன்புத்துணைவியாரும் நாகபூசணி கௌசிப்பிரியா (தொழிநுட்பக்கல்லூரி -யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும் செல்வக்குமார், கோடீஸ்வரன்(டோகா) ஆகியோரின் அன்பு மாமியும், டினேஸ்குமார், கிரிகாந்த் (மாணவர்கள் யாழ்.மத்திய கல்லூரி), பார்த்தீபா (மாணவி- யா/அச்சுவேலி புனித தெரேசான் மகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புப்பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், ஆசையம்மா, கிருஸ்ணபிள்ளை மற்றும் சின்னத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அன்பழகன்(பிரான்ஸ்), அனுராஜ் (லண்டன்), திருமதி அனுஷா நவநீதராசா(ஆசிரியை கிளி/ஜெயபுரம் ம.வி) திருமதி சஜீதா மதியரசன் (ஆசிரியை யா/அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி) சுவிதா, ஜீவநாதன், ரமணன், வசந்தகுமார், வசந்தன், ரஜனி ஆகியோரின் அன்புப்பெரியதாயாரும் வரதராசா சந்தனம் அவர்களின் மைத்துனியும் இராசேந்திரன்-கமலாதேவியின் ஒன்றுவிட்ட சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பத்தமேனி தீர்த்தாங்கரை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கதிரிப்பாய்
அச்சுவேலி.

தகவல் :
குடும்பத்தினர்.

(c 16306)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு செல்லும் பெண்களின் குடும்பப் பின்னணி பரிசீலனைக்கு

## ஐந்து வயதுக்குக் குறைந்த பிள்ளைகளை பாதுகாப்பின்றி விட்டுச் செல்ல முடியாது

கொழும்பு, ஜூன் 18

தொழில் வாய்ப்புகளுக்காக வெளிநாடு செல்லும் சகல இலங்கைப் பெண் களும் தத்தமது குடும் பப் பின்னணி பற்றிய விவரங்களை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் கட்டாயமாகச் சமர்ப்பிக்கவேண்டுமென இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் அறிவித்துள்ளது.

அதன் பிரகாரம் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதியிலிருந்து வெளி நாட்டு வேலைவாய்ப்புகளுக்குச் செல்லும் பெண்கள் இந்தப் பணியகத் தில் பதிவுசெய்யும் போது தத்தமது குடும்பப் பின்னணி பற்றிய விவரங்க ளைச் சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட் டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பணிப்பெண்களாகவோ அல்லது வேறு தொழில்களுக்காகவோ செல்பவர்களுக்கு ஐந்து வயதுக்குக் குறை வான பிள்ளைகள் இருந்தால்அப் பெண்களுக்கு வெளிநாடு செல்ல அனுமதி வழங்கப்படாது. 2012இலிருந்து இந்த நிபந்தனை பணிப் பெண்க ளாகச் செல்பவர்களுக்கு மட்டுமே விதிக்கப்பட்டு வந்தது. எனினும், எதிர்வரும் ஓகஸ்ட் முதல் அந்த நிபந்தனை பணிப்பெண்கள் அல் லாத வேறு தொழில்களுக்குச் செல் லும் பெண்களுக்கும் விதிக்கப் படும். ஐந்து வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளைக் கொண்ட பெண் கள் தாங்கள் வெளிநாடுகளில் இருக்கும் போது அவர்களது பிள்ளைகளை உள்நாட்டில் சரியான பாதுகாப்புடன் விட்டுச் செல்வதையும் உறுதிப் படுத்தவேண்டும்.

சிறு குழந்தைகள் தாய்மாரின் கவனிப்பின்றி பல்வேறு அவல நிலைகளுக்குத் தள்ளப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே இந்த நிபந் தனை கட்டாயப்படுத்தப்பட்டுள்ள தாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (த)

# வன்புணர்வு செய்ய முயன்றவரின் நாக்கைக் கடித்து துப்பிய மாணவி

பாடசாலை முடிந்து தனியாக வீடு திரும்பிக்கொண்டிருந்த 18 வயது மாணவியொருவரை வன்புணர்வுக்கு உட்படுத்த முயன்ற பஸ் சாரதியொருவருக்கு, வாழ்க்கையில் மறக்க முடியாத தண்டனையொன்றை குறித்த மாணவி வழங்கிய சம்பவமொன்று அக்குரஸ்ஸ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இம்முறை உயர்தரப் பரீட்சைக் குத் தயாராகிக் கொண்டிருக்கும் மேற்படி மாணவி, பாடசாலை முடிந்து தனிமையில் வந்துகொண் டிருந்த போது, மேற்படி சாரதியும் மோட்டார் சைக்கிளொன்றில் வந்து குறுக்கு வீதியொன்றுக்கு அருகில் வைத்து மாணவியை வன்புணர் வுக்கு உட்படுத்த முயற்சித்துள்ளார்.

இதன்போது, குறித்த மாணவி அந்த நபர் மீது குடையால் சரமாரியா கத் தாக்கியுள்ளார். இருப்பினும், அந்த நபர் தனது முயற்சியைக் கைவிடாது, மாணவியை வன்புணர் வுக்கு உட்படுத்த முயன்றுள்ளார். அவரிடமிருந்த தப்பிக்க முயன்ற மாணவி, சாரதியின் நாக்கைக் கடித்து துப்பிவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்று பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

இதன்போது, சந்தேகநபர் பயணித்த மோட்டார் சைக்கிளின் இலக்கத்தையும்குறித்தமாணவி,பொலிஸாருக்கு வழங்கியதை அடுத்து சந்தேக நபர் கைது செய்யப்பட் டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர், அக்குரஸ்ஸ, ஹேனகம பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அக்குரஸ்ஸ பொலி ஸார் கூறினர். (த)

# சஜின்வாஸ்க்கு பிணை மறுப்பு

கொழும்பு, ஜூன் 18

பொதுச் சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸை எதிர்வரும் 24 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் சஜின்வாஸ் குணவர்த்தனவின் பிணை மனுவும் நிராகரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான 22 வாகனங்களை முறைகேடாகப் பயன் படுத்தியதாக சஜின்வாஸ் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (த)

## மரண அறிவித்தல்

### திருமதி சித்திரா துஷாகரன்



கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திரா துஷாகரன் 16.06.2015 செவ்வாய்க் கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் தேவசுந்தரலிங்கம்-பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் திருநெல்வேலி கிழக்கு பதிவாளர் வீதியைச் சேர்ந்த இரத்தினலிங்கம்-விமலா தேவி தம்பதியின் அன்பு மருமகளும் துஷாகரனின் (லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும் வினுஷன் (லண்டன்) அவர்களின் அன்புத்தாயாரும் செந்தில்நாதன் (சுவிஸ்), சுபத்திரா (அவுஸ்திரேலியா), நிரஞ்சலா, சிவநாதன்(கமநல அபிவிருத்தி திணைக்களம், கிளிநொச்சி), ரகுநாதன் (Seierra) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவமேகலை(சுவிஸ்), சுபாகரன் (அவுஸ்திரேலியா), கோபிகிருஸ்ணண் (C.T.B வவுனியா), அபிராமி, சிந்துஜா, கோபிதரன் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும் மதுமிதா (சுவிஸ்), நித்திலன்(சுவிஸ்), பதுசன் ஆகியோரின் மாமியாரும் லதுக்சன் (அவுஸ்திரேலியா), கிருஷன் (அவுஸ்தி ரேலியா), பவேதினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் சிறியதாயாரும், வேணுதர்சன், டினோஜன், பிரவீனா ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் கொக்குவிலிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தொடர்பு :- 021 205 2024
077 612 8424
077 922 8739

தகவல் :-
சி.தேவசுந்தரலிங்கம்
(தந்தை)

(61068)

### வீடு வாடகைக்கு

பெருமாள் கோயிலின் முன்பக்கமாக யாழ்பாடி வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.

தொடர்பு: 021 222 5666, 077 893 3570

(61065)

### வேலையாள்கள் தேவை

சிமெந்து மூடை பறிப்பதற்கு வேலையாள்கள் தேவை.

மாதாந்த வேதனமாக ரூபா 30 000/= வழங்கப்படும்.

தொடர்பு :- [illegible] இல.55, 57 [illegible] வீதி யாழ்ப்பாணம்.

(c 16302)

### காணி குத்தகைக்குத் தேவை

யாழ் நகரை அண்டிய பிரதான வீதிகளில் முகப்பைக் கொண்டமைந்த வெற்றுக்காணி நீண்ட கால குத்தகைக்குத் தேவை.

தொடர்பு : 077 662 3824

### நாஹா மருத்துவ நிலையம்

* எலும்புகளில் [illegible] வேதனையான வாதம், கொடிய புண்கள், அல்சர், ஆஸ்மா, உயர் குருதி அழுக்கம், பாரிசவாதம் குணப்படல்
* குழந்தையின்மை, விசேட சிறப்பு சிகிச்சை

வங்கி முன்கேன்
சாத்தாவத்தை வைரவர் கோயிலடி (ஜெகபதிவிடு)
மானிப்பாய்

T.P. 077 321 2740

### தேவை

நிறுவனம் ஒன்றுக்கு யாழ்.நகர எல்லைக்குள் வாகன தரிப்பிட வசதி கொண்ட வீடும், 20-30 வயதுக்குட்பட்ட O/L படித்த கணினி அறிவுள்ள பெண் Clerk உம் தேவை.

தொடர்பு: 077 727 6519

### Declaration of Alteration of Name

I Mr T. Ganesh of No 42/9 Moonru murippu Vavuniya and do here by declare that my name has been altered to T.Kanesh from today.

T.Kanesh

### Chundikuli Girls' College, Old Girls' Association, Jaffna.

**Annual General Meeting and Fellowship Lunch**

Date : Saturday, 20th June 2015
Venue : College Hall

- 9.00 a.m : Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli
- 10.45 a.m : Principal's Tea
- 11.15 a.m : Talk by Dr. Chrishanthi Rajasooriyar
- 12.00 noon A.G.M
- 12.45 p.m : Talk by Dr. Kamala Sabaratnam
- 1.00 pm : Lunch

**Lunch Tickets - Rs. 300/=**

*All Old Girls are cordially invited*

Secretary.

(61060)(10.6.1)

வடமாகாணத்தில் முன்னணியில் இயங்கிவரும் எமது நிறுவனத்துக்கு பின்வரும் பதவி வெற்றிடம் காணப்படுகின்றது

தரவு உள்ளீட்டாளர் - (ஆண்)
DATA ENTRY OPERATORS - (Male)

கல்வித் தகைமை - க.பொ.த உயர்தரம் சித்தி
முகவரி, தொலைபேசி இலக்கம், அனுபவம் ஆகியன உள்ளடங்கலாக சுயவிவரக் கோவையை (Bio Data) 24.06.2015 புதன்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.
முக்கிய குறிப்பு: சிங்கள மொழியில் சரளமாக உரையாடக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
* ஒரு வருட அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

Lukshme Agency
No: 23/1, 4th Lane Brown Road, Jaffna.
Tel: 021 222 7167
Email add : agencylukshmee@gmail.com

(C/16304)(10.6.1)

Microsoft Certifications
MCP
MTA
MCSA
MCSE
Cisco Certifications
CCNA
CCNP
SUN Certifications
Java
Oracle
Sri Lanka UGC
அங்கீகாரமுடைய பட்டதாரியாகும் வாய்ப்பு ...........
Top up Program
HND or 2 வருட டிப்ளோமா தகைமையுடன் ......
விண்ணப்பிக்கலாம்
B.Sc. in Comp.Sc.
B.Com. with Comp. App
B.Sc. in Civil Eng.
B.Sc.in Q.S

உங்கள் நம்பிக்கையின் சிகரமாக விளங்கும்
NORTH LANKA IIT இன்
ஆலோசனை சபையினர்

பேராசிரியர் பு.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர்
யாழ் பல்கலைக்கழகம்

பேராசிரியர் டாக்ரர் T.வேல்நம்பி
பீடாதிபதி வணிகத்துறை
யாழ் பல்கலைக்கழகம்

திரு.S.அமிர்தலிங்கம்
தலைவர்.யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி

திரு.P.விக்நேஸ்வரன்
முன்னாள் கல்விப்பணிப்பாளர்
வடமாகாணம்

திரு.குமரன்
யாழ் பிரபல பௌதீகவியல் ஆசான்

ஆலோசனை சபையினர் வழிகாட்டலுடன் பின்வரும் கற்கை நெறிகளுக்கு விண்ணப்பிக்கவும்

O/L அல்லது A/L தகமையுடன்
B.Sc. in Computer Science
B.Com with Computer App.
Any Degree தகைமையுடன்
P.G.Dip.in Comp.Sc.>>M.Sc. MBA >> DBA
P.G.D in Ed. >> M.Ed.

மேலதிக விபரங்களுக்கு,
NORTH LANKA IIT
Top Floor People's Bank Building,
Stanley Road, Jaffna.
Phone :- 0214927156, 0214545123
0777592666

LANKA CITY CAMPUS
Kodikamam Road
Near NSB , Nelliyadi
0214927087, 0771016524

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20' ஐ.தே.க. இழுத்தடித்தால் புதிய அரசை உருவாக்குங்கள்

## ஜனாதிபதியிடம் ஹெல உறுமய கோரிக்கை

கொழும்பு, ஜூன் 18

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்திவருமானால், புதிய அரசொன்றை அமைத்து அதனூடாக 20 ஐ நிறைவேற்ற ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரெலிய ரத்ன தேரர் நேற்றுமுன்தினம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளு மன்றத்தைக் கலைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்து வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சி தொடர்ந்தும் அரசாக செயற்பட விரும்பவில்லை. 20 ஆவது திருத் தத்தை நிறைவேற்ற விரும்பவில்லைபோல தோன்றுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டுமென விரும்புகின்றது. அதன் காரணமாக அவர்கள் தொடர்ந்தும் ஆட்சியிலிருக்க முடியாது.

புதிய அரசு 20ஆவது திருத்தம் உட்பட பல வாக்குறுதிகளை நிறைவேற்றவே ஏற்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது ஐக்கிய தேசியக் கட்சி சபையைக் கலைப்பதிலேயே ஆர்வமாகவுள்ளது.

இதன் காரணமாக நாடாளு மன்றத் தேர்தலுக்கு முன்னர் 20ஆவது திருத்தத்தை நிறைவேற்றுவதற்காக புதிய அரசை ஜனாதிபதி அமைக்கவேண்டும்–என்றார். (த)

## ஜனாதிபதி மைத்திரிக்கு ஆதரவாக புதிய அமைப்பு

கொழும்பு, ஜூன் 18

மைத்திரிக்கு இடமளிப்போம் என்ற பெயரில் புதிய அமைப்பொன்றை உருவாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக அவருக்கு ஆதரவு வழங்குமாறு வலியுறுத்தி, இந்த அமைப்பு செயற்படவுள்ளது.

ஜனாதிபதி ஆலோசகர் ஶ்ரீலால் லக்திலக்க உட்பட சிலரினால் இந்த அமைப்பு உருவாக்கப்படவுள்ளது.

20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுதல், சுயாதீன ஆணைக்குழு நிறுவுதல் போன்ற முக்கிய காரியங்களை நிறைவேற்றிக்கொள்வதற்குப் பரப்புரை வேலைத் திட்டத்தை மேற்கொள்வதும், மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்வதும் அமைப்பின் நோக்கமாகும்.

20ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றுதல், சுயாதீன ஆணைக்குழு நிறுவுதல் போன்ற முக்கிய காரியங்களுக்குத் தடை செய்யும் நபர்களைக் குறித்த ஆணைக்குழு ஊடாக வெளிகாட்டவுள்ளதாகவும் ஜனாதிபதி ஆலோசகர் குறிப்பிட்டுள்ளார். (த)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை



வல்வெட்டி, பாவந்தோட்டத்தை பிறப்பிடமாகவும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை 16.06.2015 செவ்வாய்க்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-வைமிராத்தை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும், காலஞ்சென்றவர்களான வல்லிபுரம்-குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவகலா, சிவகுருநாதன், ரவிநாதன், செல்வகலா, யோகேஸ்வரி(ஜெயந்தி), வைகுந்தநாதன், சூரியகலா ஆகியோரின் தந்தையும், விக்னேஸ்வரன் , அருள்மணி, துஷ்யந்தினி, தவேந்திராஜா, சிறீநிவாசன் (சூரி), தர்சினி, சுகுமார் ஆகியோரின் அன்புமாமனாரும் அபிரா, அஞ்சுதன், நிதுஷா, வினுஷ், சபறினா, ரொபன், ஜஸ்மினி, தர்சிகன், தர்சிகா, சோபிகா, விதுரன், விகாசன், வைஸ்ணவி, ராகவி, தரணியா ஆகியோரின் அன்புப்பேரனும், சோமு, சண்முகம், தங்கச்சி, சுந்தரம், சுப்பிரமணியம், கிட்ணசாமி, சரஸ்வதி ஆகியோரின் அன்புச்சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 17.06.2015 (நேற்று) இடைக்காடு இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகள் இடைக்காடு இந்து மயானத்தில் நடைபெற்றன என்பதனை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
55/4 வைமன் வீதி ,நல்லூர், யாழ்ப்பாணம்.

(61063)

### சுப்பையா இராமையா



சிவன் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு சங்கமித்தை மாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா இராமையா (பத்தர்) நேற்று (17.06.2015) புதன் கிழமை காலமாகி விட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 87,
சிவன் வடக்கு விதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
தர்மையா (கந்தையா பத்தர்)
0777 113 091

(61058)(10.6.1)

## மரண அறிவித்தல்



தோற்றம் ★ 04 . 04 . 1932

மறைவு ★ 16 . 06 . 2015

### திருமதி செல்லம்மா நாகமணி

யாழ். நயினாதீவைப் பிறப்பிடமாகவும், கனடா, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா நாகமணி 16.06.2015 செவ்வாய்க் கிழமை கொழும்பில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் முத்துபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி நல்லமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நாகமணி அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ் சென்றவர்களான கனகம்மா, சவுந்தரம், கந்தையா, சிவபாக்கியம், தம்பிமுத்து, மற்றும் பரமலிங்கம், பேரம்பலம், சண்முகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தவலிங்கம்(கனடா), தவஈஸ்வரி தேவி(சுவிஸ்), சிவலிங்கம்(கனடா), ரஞ்சனாதேவி (கொழும்பு), நற்குணலிங்கம் (ஜேர்மனி), சுந்தரலிங்கம் (கனடா), ஓங்காரலிங்கம் (கனடா), சடட்சரலிங்கம்(கனடா), காலஞ்சென்ற வபா ஆகியோரின் பாசமிகு தாயாரும், வனிதா, நடராசா, உதயரஞ்சிதம், பரமானந்தம், கலைமதி, லக்சகா, பிரேமலா, பிரேமா ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து, மயில்வாகனம், ராமலிங்கம், தனலட்சுமி மற்றும் மாணிக்கம், நல்லம்மா, தனலட்சுமி, சுலோசனாதேவி, காலஞ்சென்றவர்களான நாகம்மா, விசாலாட்சி, மற்றும் செல்லம்மா, கனகரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், துர்ஜா(கனடா), துஷ்ஷாந்(கனடா), நர்மதன்(கனடா), கவினா(கனடா), சிந்துஜன்(கனடா), ஜனந்தி(கனடா), மிதுனா (கனடா), அமுதீசன்(கனடா), அபிராமி(கனடா), ஆதிசன்(கனடா), சஜே(கனடா), அன்பழகன் (சுவிஸ்), திருவழகன்(சுவிஸ்), உஷாந்தினி(சுவிஸ்), அபர்ன்னா (சுவிஸ்), ஜீவகாந்(சுவிஸ்), மாரியோ(ஜேர்மனி), ரன்ஜா, தர்ஜினி(கொழும்பு), தாரணி (கொழும்பு) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சாரா, நகுஷான், அபிரா, தனுஸ்சன், அபிரன், திபி, ஈத்தன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (18.06.2015) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பின்னர் நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அன்பு - +94779604089,
+94768716341.

(61054)(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஏரம்பு நல்லதம்பி



சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட ஏரம்பு நல்லதம்பி நேற்று (17.06.2015) புதன்கிழமை அகால மரணமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஏரம்பு-தெய்வானை தம்பதியரின் அன்பு மகனும், சந்திரவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் காந்திமதி நாகேந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வரட்ணம் (சின்னத்தம்பி) குமுதினி ஆகியோரின் அன்பு மாமனும், கிருஷிகன் தேனுஜா மிதுஷா றோகிதா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக் கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரசாலை கொம்பிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

(C/16307)(10.6.1)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சித்திரா துஷாகரன்



கொக்குவில் மேற்கு நாகலிங்கம் வீதியை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சித்திரா துஷாகரன் 16.06.2015 செவ்வாய்க் கிழமை கொக்குவிலில் காலமானார்.

அன்னார் இரத்தினலிங்கம் -விமலாதேவி தம்பதியரின் அன்பு மருமகளும் துஷாகரனின் (லண்டன்) அன்பு மனைவியும் வினுஷனின் அன்புத்தாயாரும் கோபி கரனின் (லண்டன்) மைத்துனியும் மீராஜினியின் (லண்டன்) சகோதரியும் ஹஸ்னியின் பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (61063)


பதிவுகாரர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

தொடர்பு :- 077 617 6607

தகவல் :-
செ. இரத்தினலிங்கம்
குடும்பத்தினர்.

### பரமக்குட்டி கனகரட்ணம்

(ஓய்வுபெற்ற அதிபர்,
அளவெட்டி ப.நோ.கூ.சங்க முன்னாள் தலைவர்)



மட்டக்களப்பு துறைநீலாவணையைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி தெற்கு, பெருமாக்கடவையை வசிப்பிடமாகவும், தற் போது மானிப்பாய் வீதி, உடுவிலில் வசித்தவரும், அளவெட்டி அருணாசலம் வித்தியாலயத்தின் ஓய்வு பெற்ற அதிபரும், அளவெட்டி ப.நோ.கூ. சங்க முன்னாள் தலைவருமாகிய பரமக்குட்டி கனகரட்ணம் நேற்று (17.06. 2015) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமக் குட்டி-கண்ணகை தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம்-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ் சென்ற வாலாம்பிகையின் (ஆசிரியை) அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, சின்னத்தங்கம் மற்றும் சந்தனப் பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும், வசந்தி (Australia), வாசுகி (நிதியமைச்சு -கொழும்பு), சாந்தினி (யா/மயிலிட்டி றோ.க.த.க. வித்தியாலயம்), ரஞ்சினி (தி/உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரகலாதன் (Engineer Australia), ஶ்ரீஸ்கந்தா (C.I.P.W புகையிரதத் திணைக்களம்-கொழும்பு), ஶ்ரீபவன் (முன்னாள் Unicf), ரவீந்திரன் (மாவட்ட முகாமையாளர், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனும், Dr. ஜானு றுபேஸ் (Australia), Dr.பிரவீன் (Australia), லக் ஷகன் (Software Engineer, John Keals-Colombo), துலக்சிகா (Colombo), யாதவன் (Engineer-Singapoor), யதுகுலன் (விவசாய பீடம்-யாழ்.பல்கலைக்கழகம்), யசஸ்கரன் (Dubai), யதுசன் (மாணவன்-யா/இந்துக் கல்லூரி), நிதிபன் (பொறியியல் பீடம், மொரட்டுவ பல்கலைக்கழகம்), சாருகன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரியனின் (Australia) அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் தற்போதைய வசிப்பிடமாகிய உடுவிலில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இணுவில் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

145, கைதடி-மானிப்பாய் வீதி,
உடுவில்.
021 224 1329

(61046)(10.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொஹான் பீரிஸுக்கு எதிராகவும் விசாரணை

கொழும்பு, ஜூன் 18

ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பாகப் பதவிநீக்கம் செய்யப்பட்ட முன்னாள் பிரதம நீதியரசர் மோஹான் பீரிஸுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படுமென்று நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு உத்தரவின் மூலம் அரசுக்கு 619 மில்லியன் ரூபா இழப்பு ஏற்படுத்தியதாக மொஹான் பீரிஸ் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் சட்ட மா அதிபராகச் செயல்பட்டபோது, அவர் இலங்கைச் சுங்கத் திணைக்களத்துக்கு விடுத்த உத்தரவொன்றின் மூலம் அரசுக்கு சுமார் 619 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும், இது சம்பந்தமாக விசாரணையொன்றை மேற் கொள்ளுமாறு ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு உத்தரவிடுமாறு கோரி வழக்கறிஞர் நாகஹனந்த கொடிதுவக்கு மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனு நேற்று விசாரணைக்கு வந்தபோது கருத்துக்களைத் தெரிவித்த வழக்கறிஞர் கொடிதுவக்கு, முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதாக ஊழல் விசாரணை ஆணைக் குழு தனக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளதாக தெரிவித்தார்.

எனவே, இந்த மனுவை மேற்கொண்டு விசாரணை செய்வது அவசியமில்லை என்று கூறிய கொடிதுவக்கு, ஊழல் விசாரனை ஆணைக்குழு முறையாக இந்த விசாரணைகளை மேற்கொள்ளாவிட்டால் மீண்டும் தான் வழக்கைத் தாக்கல் செய்வதாகவும் அறிவித்தார்.

இதன் படி இந்த மனுவை ஜூலை மாதம் 27 திகதிக்கு ஒத்திவைத்த நீதிமன்றம், அன்று இந்த வேண்டுகோள் ஆராயப்படுமென உத்தரவிட்டது. (த)

# கல்வி விசா வழங்குவதாக தெரிவித்து ஆள் கடத்தல்

## வேலைவாய்ப்பு அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

கல்வி விசா பெற்றுத் தருவதாகக் கூறி சட்டவிரோத ஆட்கடத்தல்கள் இடம்பெறுவதாகவும் இவ்வாறான நபர்களிடம் ஏமாற வேண்டாம் என வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலதா அத்துக் கோரள தெரிவித்துள்ளார்.

வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கல்வி விசாவின் மூலம் சென்று அங்கு பகுதிநேர தொழிலில் ஈடுபடலாம் என தெரிவித்து இளைஞர், யுவதிகளிடம் அதிக பணம் பெற்றுக் கொண்டு மோசடி செய்யப்படுவதாகத் தகவல் கிடைத்துள்ளதென அமைச்சர் குறிப்பிட்டார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் எழுத்துமூல அனுமதி இன்றி வெளிநாட்டு வேலைக்கு அனுப்புவது சட்டவிரோதச் செயல் என அவர் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறு மோசடியில் ஈடுபடும் 15 நிறுவனங்கள் குறித்து தகவல் கிடைத்துள்ளதாகவும், அதில் 7 நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (த)

## படைகளின்

யாழ்ப்பாணத்தில் 6 வீடுகளும், சண்டிலிப்பாயில் 16 வீடுகளும், சங்கானை, உடுவில் பிரதேச செயலாளர் பிரிவுகளில் தலா ஒரு வீடும், தெல்லிப்பழையில் 2 வீடுகளும், கோப்பாய் – சாவகச்சேரியில் தலா 11 வீடுகளும், கரவவெட்டியில் 5 வீடுகளும், பருத்தித்துறையில் 22 வீடுகளுமாகவே, இந்த 88 வீடுகள் பொலிஸாரிடம் உள்ளன.

கடற்படையினரின் கட்டுப்பாட்டில், 57 வீடுகள் – கட்டடங்கள் 29.53 ஏக்கரில் உள்ளன. நெடுந்தீவில் 6 வீடுகளும், வேலணையில் 18 வீடுகளும், ஊர்காவற்றுறையில் 19 வீடுகளும், யாழ்ப்பாணத்தில் 13 வீடுகளும், நல்லூர் – சங்கானை – உடுவிலில்தலா ஒரு வீடும்,சண்டிலிப்பாயில் 26 வீடுகளும், தெல்லிப்பழையில் 21 வீடுகளும், சாவகச்சேரி–கோப்பாயில்தலா 11வீடுகளும், கர வெட்டியில் 5 வீடுகளும், பருத்தித்துறையில் 29 வீடுகளும், மருதங்கேணியில் 6 வீடுகளுமாகவே, இந்த 57 வீடுகள் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

இவையாவும் உயர் பாதுகாப்பு வலயத்திற்கு வெளியே, பிரதேச செயலர் பிரிவு ரீதியாக, புதிய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ–5, 101)

## காவல்

பின்னர் 59 சிறிய முகாம்கள் மூடப்பட்டுள்ளன. 2009 ஆம் ஆண்டு, 7 புறக்காவல் நிலைகள் அகற்றப்பட்டன. 2010ஆம் ஆண்டு 9 புறக்காவல் நிலைகளும், 2011 ஆம் ஆண்டு 4 புறக்காவல் நிலைகளும், 2013 ஆம் ஆண்டு 15 புறக்காவல் நிலைகளும், 2014ஆம் ஆண்டு 24 புறக்காவல் நிலைகளுமாக, மொத்தம் 59 புறக்காவல் நிலைகள் மூடப்பட்டுள்ளன.

2015ஆம் ஆண்டு எந்தவொரு புறக்காவல் நிலையும் மூடப்படவில்லை. புதிய அரசு பதவிக்கு வருவதற்கு முன்னரே இந்த 59 புறக்காவல் நிலைகளும் அகற்றப்பட்டுள்ளன. இராணுவத் தலைமையகம், வடக்கில் தொடர்ந்து பாதுகாப்பு நிலைமைகளைக் கண்காணித்தும், ஆய்வு செய்தும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும்.

தேசிய பாதுகாப்பு விடயத்தில் எந்த விட்டுக் கொடுப்புக்கும் இடமிருக்காது – என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (உ–5)

## செப்ரெம்பர்

உருவாக்கும் உள்நாட்டுப் பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் மற்றும் சட்டவாளர்களை பெரும்பான்மையாக உள்ளடக்க வேண்டும் என்று, ஜெனிவாவில் இடம்பெற்றுவரும் 29ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியிருந்தது.

இது குறித்துக் கருத்து தெரிவிக்கும் போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

"சர்வதேச சமூகம் இலங்கை மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டும். எமது உள்நாட்டு விசாரணை நிச்சயமாக சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கும். இந்த நம்பகமான விசாரணையை ஆரம்பிப்பது தொடர்பாக நாம் சர்வதேச அமைப்புகள், முகவரகங்களுடன் ஆலோசித்து வருகிறோம். சர்வதேச மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான நிபுணரான பிரித்தானியாவைச் சேர்ந்த சேர் டெஸ்மன் டி சில்வா வின் ஆலோசனையையும் இலங்கை கோரியுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பரில் ஐ.நா. விசாரணை அறிக்கை வெளியிடப்படுவதற்கு முன்னர், இந்த விசாரணைப் பொறிமுறையின் உருவாக்கம், உள்ளடக்கம், விசாரணை முறை தொடர்பான விவரங்கள் வெளியிடப்படும்.

நாம் உருவாக்கும் உள்நாட்டு விசாரணை சர்வதேச சமூகத்தினாலும், உள்நாட்டு மக்களாலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் நம்பகமானதாக இருக்கும்" என்றார் அவர். (உ–5)

## உள்ளக

சையிட் அல் ஹுஸைன் இலங்கை தொடர்பில் வெளியிட்டிருந்த கருத்துகள் தொடர்பில் நேற்றுமுன்தினம் முற்பகல் வெளிவிவகார அமைச் சில் இடம்பெற்ற செய்தியாளர் மா நாட்டில் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் உள்நாட்டுப் போரின் போது இடம்பெற்ற போர்க்குற்றங்கள் குறித்து பொறுப்புக் கூறுவது மற்றும் நல்லிணக்கத்திற்கான உள் நாட்டுப் பொறிமுறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் செப்ரெம்பர் அமர்வுக்கு முன்னதாக ஏற்படுத்தப்படவேண்டும் என எதிர்பார்ப்பதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் கடந்த செவ்வாயன்று கருத்து வெளியிட்டிருந்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 29ஆவது அமர்வை கடந்த திங்கட்கிழமை ஆரம் பித்து வைத்து உரையாற்றுகையி லேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையின் புதிய அரசு அரசமைப்பு மாற்றத்தை நிறைவேற்றியுள்ளது. அதனை உரிய விதத்தில் நடைமுறைப் படுத்தினால் ஜனநாயகம் மற்றும் சட்டத்தின் ஆட்சி குறித்த நம்பிக்கைகளை அது ஏற்படுத்தும்.

செப்ரெம்பர் மாதத்திற்கு முன்னர் பொறுப்புக்கூறுதல் மற்றும் நல்லிணக்கத்திற்கான நம்பகத்தன்மை மிகுந்த பொறிமுறையை ஏற்படுத்துவதற்கான வெளிப்படையான அனைவரையும் உள்வாங்கும் செயற்பாடுகள் குறித்து எனது அலுவலகம் இலங்கையுடன் தொடர்ந்தும் பேச்சுகளை மேற் கொள்ளும். சகல அரசியல் கட்சிகள், சிவில் அமைப்புகள், பாதிக்கப்பட்டவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் கலந்தாலோசிக்குமாறும் இலங்கை அரசை நான் கேட்டுக் கொள்கிறேன் – என அவர் தெரிவித்துள்ளார். (த–சி)

## பல வருடங்களின்

அவ்வாறு நோய்த் தொற்றுக்கு உள்ளாகியிருக்கக்கூடும் என்று எதிர்பார்ப்பதாக மருததுவர்கள் தெரிவித்தனர். பாதிக்கப்பட்டவர் தற்போது யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார் என்று கூறப்பட்டுள்ளது.

மலேரியாவின் தாக்கம் இலங்கையில் மிக மிக குறைந்து கிட்டத்தட்ட இல்லாத நிலையை எட்டியுள்ள போது புதிய நோயாளி ஒருவர் இனங்காணப்பட்டுள்ளமையால் அவரது வீட்டைச் சுற்றியுள்ள பல குடும்பத்தினரும் இன்று முற்பகல் தொடக்கம் மலேரியா பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர். நோய் வேறுயாருக்கும் இருப்பது கண்டறியப்பட்டால் அவர்களுக்கு மலேரியா தடுப்பூசி ஏற்றப்படும் என்று சண்டிலிபப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைத் தரப்புத் தெரிவித்துள்ளது.

தொற்றுக்குள்ளான 35 வயதுடைய குறித்த நபர் பத்து வருடங்களுக்கு மேலாக இந்தியாவில் வசித்து வந்த நிலையில் சுமார் 2 வாரங்களுக்கு முன்னர் மாதகலுக்கு வந்திருந்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (உ–4,115)

## வடமராட்சியில்

கல்லூரி வீதி, கலிகைச் சந்தி, வதிரிச் சந்தி, துன்னாலை, வேம்படிச் சந்தி, வடமராட்சி எரிஞ்சம்மன் கோவிலடி ஆகிய இடங்களில் வைத்தே இந்த இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

பாடசாலை முடிந்து வீடு திரும்பும் மாணவிகளுக்குப் பின்னால் சென்று தொல்லை கொடுப்பது, அவர்களின் பயணங்களுக்கு இடையூறு விளைவிப்பது, இளம் பெண்களுடன் அநாகரிகமாக நடந்து கொள்வது ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகத் தெரிவித்தே இந்த இளைஞர்கள் கைதுச் செய்யப்பட்டனர்.

இவர்கள் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு இவர்களின் பெற்றோர் வரவழைக்கப்பட்டனர்.

பெற்றோர் முன்னிலையில் கடும் எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் இந்த இளைஞர்கள் விடுவிக்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலை நேரத்திலும், ஏனைய நேரங்களிலும் வீதிகளில் அநாவசியமான முறையில் நடமாடுவோர், கூட்டமாக நிற்போர், வீதிகளில் அட்டகாசம் புரிவோர், கோஷ்டி மோதல்களில் ஈடுபடுவோர் ஆகியோர் தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதை அடுத்தே நேற்று இந்த நடவடிக்கையில் இறங்கினர் நெல்லியடிப் பொலிஸார். (த–109)

## 20 ஆவது

"அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான ஆங் கில மொழி மூலமான வர்த்த மானி அறிவிப்பு வெளியி டப்பட்டுள்ளது. தமிழ் மற்றும் சிங்கள மொழிகளிலும் அவற்றை அச்சிடுவதற் குரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன" என்று அந்த அதிகாரி குறிப் பிட்டுள்ளார்.

கடந்த 12ஆம் திகதி நடந்த சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்தில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் முன் மொழியப்பட்ட 237 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தை தெரிவு செய்வதற்கான யோசனையே வர்த்தமானியில் பிரசுரிக் கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்ட இந்த யோசனையின் படி, 145 உறுப்பினர்கள் தொகுதி வாரியாகவும், 55 உறுப்பினர்கள் மாவட்ட ரீதியில் விகிதாசார முறைப்படியும், 37 உறுப்பினர்கள் தேசியப் பட்டியல் மூலமும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படுவர்.

எனினும், இந்த யோசனையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட சிறு மற்றும் சிறுபான்மையினக் கட்சிகள் நிராகரித்துள்ளன. ஐக்கிய தேசியக் கட்சியும் கூட இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. (உ–5)

## எதிர்பாராத

எதிர்பாராத விதத் தில் விரைவில் திடீரென நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்பதை உங்களுக்குக் கூறி வைக்க விரும்புகிறேன்" – என்று ஜனாதிபதி எம்மிடம் கூறினார்.

### 20ஆவது திருத்தம் திருத்தங்களுடன் நிறைவேறும்

20ஆவது திருத்தம் வர்த்தமானி பிரகடனத்துடன் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். இன்றைய 20ஆவது திருத்த சட்டமூலத்தில் என்னவித உள்ளடக்கம் இருந்தாலும், அவற்றில் அவசியமானவை குழுநிலை விவாதத்தின் போது கொண்டுவரப்படும். புதிய திருத்தங் களை உள்வாங்குவதன் மூலம் மேலும் திருத்தியமைக்கப்படும். இதன்மூலம் நான் உங்களுக்கு ஏற்கனவே வழங்கியுள்ள சிறுபான்மை மக்களுக்குப் பாதகமான எதையும் தேர்தல் திருத்தம் என்ற பெயரில் செய்ய இடம் தரமாட்டேன் என்ற எனது உறுதிமொழியை நான் நிச்சயம் காப்பாற்றுவேன்.

சிறுபான்மை ம்க்களுக்குத் தொகுதி நிர்ணயம் தொடர்பில் அநீதி ஏற்பட்டுவிடக்கூடாது என்ற காரணத்தினாலேயே நாடாளுமன்ற மொத்த உறுப் பினர் தொகையை 255ஆக ஆரம்பத்திலேயே அறிவித்திருந்தேன் என்பதையும் நான் உங்களுக்கு ஞாபகப்படுத்துகிறேன்" – என்று ஜனாதிபதி எம்மிடம் மேலும் தெரிவித் தார்– என்றார் மனோ கணேசன்.(த–சி)

## கழிவு

5 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவிலும் 3 மாதத்திற்கு ஒரு தடவை ஒரே கிணற்றிலிருந்து குடிதண்ணீர் எடுக்கப்பட்டு பரிசோதனைக்கு உள்ளாக்கப்படும். மூன்று தொடக்கம் 5 வருடங்கள் வரைக்கும் இந்தக் கண்காணிப்பை மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.

குடிதண்ணீரில் ஏதாவது மாறுதல்கள் ஏற்பட்டால், அது தொடர்பில் பொதுமக்களுக்கு உடனடியாகவே அறிவிக்கப்படும். இந்த நடவடிக்கை மூலம், மக்களுக்குச் சுத்தமான குடிதண்ணீர் கிடைப்பதை உறுதிப்படுத்த முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர் பரிசோதனைக்குரிய நிதி ஏற்பாடுகளை, குறித்த 5 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுக்கு உட்பட்ட பிரதேச சபையிடம் கோரவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (உ–5)

## இலங்கை–இந்தியா

வரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார்.

கடலுக்கு அடியில் சுரங்கப்பாதை அமைக்கப்பட்டாலும் கூட, அதற்கு மேலாக கப்பல்கள் பயணம் செய்ய முடியும். தனுஸ்கோடிக்கும், இலங்கை எல்லைக்கும் இடையிலான தூரம் 23 கிலோமீற்றர் மட்டுமே. இந்த கடல் பாலம் சார்க் போக்குவரத்து வலையமைப்பை வலுப்படுத்தும்.

பாக்கு நீரிணைக்கு மேலாக தரைப் பாலம் மற்றும் தொடருந்துப் பாதையை (ரயில்பாதை) அமைப்பதற்கான திட்டம் ஒன்று, சாத்திய ஆய்வு மற்றும் நிதியிடல் தொடர்பான பரிசீலனைகளுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நிலையில் இந்த திட்டத்துக்கு சுமார் 23 ஆயிரம் கோடி ரூபா (இந்திய மதிப்பில்) தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா – இலங்கைக்கு இடையில் இணைப்பை ஏற்படுத்துவது மட்டுமன்றி, மியான்மார் வழியாக, வட–கிழக்கு இந்தியாவை தாய்லாந்துடன் இணைக்கும் தரைப் பாதையை அமைப்பதற்கு இந்திய அரசு கவனம் செலுத்துவதாகவும் நிதின் கட்காரி தெரிவித்துள்ளார். (த–5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த மீது மற்றுமொரு குற்றச்சாட்டு

## சில் உடைகள் பகிர்ந்தளிக்க ரூ. 6000 லட்சம் எடுத்தாராம்



கொழும்பு, ஜூன் 18

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விகாரைகளில் சில்' உடை பகிர்ந்தளிக்க 6 ஆயிரம் இலட்சம் எடுத்துள்ளார். முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் தான் இந்தப் பணம் எடுக்கப்பட்டுள்ளது என நேற்று முன்தினம் குற்றஞ்சாட்டிய பெருந் தோட்டத்துறை அமைச்சரும், சபை முதல்வருமான லக்ஷ்மன் கிரியெல்ல, மஹிந்தவுக்கு எதிராக முன்வைக்கப்படும் குற்றசாட்டுகளை விசாரிக்க நீதிமன்றங்களும் போதுமானவையல்ல. நீதிபதிகளும் போதுமான அளவில் இல்லை என்றும் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக அன்று குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டபோது, அவர் அஞ்சவுமில்லை. ஒளியவுமில்லை. பழிவாங்குகிறார்கள் என்று கூறவுமில்லை. நீதிமன்றத்துக்குச் சென்று கூண்டில் நின்று சாட்சியமளித்தார். ஆனால், மஹிந்தவோ குற்றச் சாட்டுகளுக்குப் பதிலளிக்காமல் நாடு முழுவதுமுள்ள விகாரைகளுக்குச் சென்று, பழிவாங்குகிறார்கள்... பழிவாங்கு கிறார்கள் என்று கூறுகின்றார் என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஐ.தே.க தலைமையகமான சிறிகொத்தவில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நம்பிக்கையில்லாப் பிரேரணை, 20ஆவது திருத்தச் சட்டவரைவு என்பவற்றைக் கொண்டு வந்துள்ளனர். எவர்மீது நம்பிக்கை உள்ளது என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும். அதற்கு நாடாளுமன்றத்தைக் கலைத்து அவர்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். நிராகரிக்கப்பட்ட எதிர்க்கட்சி நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர முடியாது. நம்பிக்கை இல்லை அல்லது நம்பிக்கையை உறுதிப் படுத்தல் என்பவற்றை மக்கள்தான் செய்ய வேண்டும். அதனால்தான் மக்களுக்கு வாய்ப்பளிக்க வேண்டும் என ஐ.தே.க கூறுகிறது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை நகைப்புக்குரியது. அரசு உருவாகி 5 மாதங்களுக்குள்ளே எந்தவொரு நாடும், எந்தவொரு நாட்டிலும் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படவில்லை. பழிவாங்கல் குறித்து ஒரு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. மறைப்பதற்கு ஏதாவது உள்ளவர்கள்தான் விசாரணைக்கு அஞ்சுவர். இல்லாவிட்டால் யார் விசாரணைக்கு அஞ்சுவது? மறைப்பதற்கு ஒன்றும் இல்லையா யின் ஏன் விசாரணைக்கு அஞ்ச வேண்டும்?- என்றார்.

(த-சி)

# தேர்தலை சந்திக்க ஓரணியில் திரள்க

## சு.க உறுப்பினர்களை அழைக்கிறார் மைத்திரி



கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்றம் விரைவில் கலைக்கப்பட்டு பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளதால், அதை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அனைத்து உறுப்பினர்களும் ஓரணியில் திரள வேண்டும்" – என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று அழைப்பு விடுத்துள்ளார்.

வெவ்வேறு திசையில் பயணித்தால் வெற்றி இலக்கை நோக்கி நகரமுடியாது எனவும் அவர் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உட்கட்சிப்பூசல் வலுத்துவருவதால், கட்சி இரண்டாகப் பிளவுபடும் எனக் கூறப்பட்டுவரும் நிலையில், அதை தடுத்துக் கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை நேற்று முன்தினம் கொழும்பில் சந்தித்து ஜனாதிபதி பேச்சு நடத்தினார்.

சு.கவின் அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

நாடாளுமன்ற கலைப்பு, அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவு ஆகிய விடயங்கள் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளன. மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம் விரைவில் நாடாளுமன்றத்தைக் கலைக்கவேண்டியுள்ளதால், பொதுத்தேர்தலை எதிர்கொள் வதற்குத் தயாராகுமாறு சு.க. உறுப்பினர்களுக்கு இதன்போது அழைப்பு விடுத்த ஜனாதிபதி, வெவ்வேறு திசையில் பயணிப்பதை விடுத்து ஓரணியில் திரளுமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு சு.க. உறுப்பினர்களுள் பெரும்பாலானோர் இணக்கம் தெரிவித்துள்ளனர். மேலும் சிலர் நாடாளுமன்றம் விரைவில் கலைவதைத் தாம் விரும்பவில்லை எனவும், அவ்வாறு கலைக்கப்பட வேண்டுமானால் 20 நிறைவேறிய பின்னரே அதைச் செய்யவேண்டும் எனவும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். அத்துடன், முன்னாள் ஜனாதிபதியையும் இணைத்துக் கொண்டு பயணிக்கவேண்டும் எனவும் இந்தச் சந்திப்பின்போது கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் 23ஆம் திகதி 20ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு, அதன் மீது இருதினங்கள் விவாதம் நடத்தப்பட்டு 26ஆம் திகதியன்று சட்டவரைவு நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

20 ஆவது திருத்தச்சட்டம் சாதாரண சட்டவரைவாக வரு வதால், அதில் ஏதேனும் குறைபாடுகள் இருப்பின், எவருக்கேனும் உயர்நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யமுடியும். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் 20 நிறைவேறு வது தாமதமாகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனினும், அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் யோசனைகளை உள்வாங்கி 20ஐ சபையில் சமர்ப்பிப்பதற்கு ஜனாதிபதி உத்தேசித்துள்ளதால் அவ்வாறானதொரு நிலை ஏற்படாது என்றே சுட்டிக்காட்டப்படுகிறது.

20ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் சிறு மற்றும் சிறுபான்மையினக் கட்சிகளின் பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் இன்று பேச்சு நடத்தவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# மைத்திரி-மஹிந்த இணைப்புக்கு குழு

நாடாளுமன்றத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வெற்றிபெற வேண்டுமானால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவும் கட்சிக்கு அவசியம் என சு.கவிலுள்ள மஹிந்த ஆதரவு அணி உறுப்பினர்கள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் நேற்று முன்தினம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அத்துடன், தற்போதைய ஜனாதிபதிக்கும் முன்னாள் ஜனாதிபதிக்குமிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கு ஒருங்கிணைப்புக் குழுவொன்று அவசியம் எனவும், இருவருக்குமிடையிலான பேச்சுகள் மீளவும் ஆரம்பிக்கப்படவேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உட்கட்சிப்பூசல் வலுத்துவருவதால், கட்சி இரண்டாகப் பிளவுபடும் எனக் கூறப்பட்டுவரும் நிலையில், அதைத் தடுத்து கட்சியைப் பலப்படுத்தும் நோக்கில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களை நேற்று முன் தினம் கொழும்பில் சந்தித்து ஜனாதிபதி பேச்சு நடத்தினார். சு.கவின் அமைச்சர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபைகளின் உறுப்பினர்கள், தொகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போதே சு.கவிலுள்ள மஹிந்தவின் விசுவாசிகளால் மேற்படி வலியுறுத்தல் விடுக்கப் பட்டுள்ளது.

இதற்குப் பதிலளித்துள்ள ஜனாதிபதி, கட்சி பலமடைவதையே தானும் விரும்புவதாகவும் கட்சியில் இருப்பதற்கு எவருக்கும் தடையில்லை எனவும் இடித்துரைத்துள்ளார். பிரதமர் வேட்பாளர் பதவியை முன்னாள் ஜனாதிபதிக்கு வழங்க முடியாது என அவர் மீண்டும் உறுதியாகக் கூறியுள்ளார்.

இதனையடுத்து, இருவருக்கு மிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் சந்திப்புகளை நடத்துவதற்காக 6 பேரடங்கிய ஒருங்கிணைப்புக் குழு அமைப்பதென்ற யோசனைக்கு சுதந்திரக் கட்சிக் கூட்டத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது. (த)

# பிரதமராவதற்கு மஹிந்த சூழ்ச்சி

## நவீன் திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 18

அரசால் கொண்டு வரப்படும் 20 ஆவது திருத்த சட்டத்திற்கு இடையூறு வரும் பட்சத்தில் எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு அமோக வெற்றியை பெற்றுக் கொடுத்து 20ஆவது சட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நவீன் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தலவாக்கலை நகரில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகக் கட்டடத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் இங்கு உரையாற்றுகையில்,

நாட்டில் நடைபெற்று முடிந்த ஜ[illegible]ாதிபதித் தேர்தலில் படுதோ[illegible]ியடைந்த முன்னாள் ஜனாதிப[illegible] தற்போது உள்ள ஜனாதிபதி மை[illegible]திரிபால சிறிசேனவுக்கு உதவிக்[illegible]ரம் நீட்டாமல் மீண்டும் பிரதமர் [illegible]வதற்காகச் சூழ்ச்சிகளை மேற்கொ[illegible]டு வருகின்றார்.

தற்போது நாடாளுமன்றில் [illegible]ய தேசியக் கட்சிக்கு ஆட்சிப் [illegible]ம் குறைவாகக் காணப்படுவத[illegible]ல் உடனடியாகப் பொதுத் தேர்[illegible]ல நடத்துவது தொடர்பில் [illegible]த வெள்ளிக்கிழமை ஐக்கிய [illegible]ய கட்சியின் காரியாலயத்தில் [illegible]ட கூட்டம் ஒன்றை நடத்தினோ[illegible]. இதனடிப்படையில் ஜனாதிபதி [illegible]த் திரிபால சிறிசேனவுக்கு இத[illegible]த் தெரிவித்து நடைமுறைப்ப[illegible]வ தற்காக தீர்மானம் ஒன்[illegible]த் துள்ளோம்.

தற்போது ஐக்கிய மக்கள் [illegible]ர முன்னணி நாலா பக்கமாக[illegible]ள வுபட்டிருப்பதனால் நடைபெற[illegible]ள தேர்தலில் நுவரெலியா மாவ[illegible]ல் ஜனாதிபதி மைத்திரிபால சி[illegible]ள வின் கட்சியில் போட்டியிடு[illegible]கு ஒருவரும் இல்லை – என்றா[illegible] (த)

# லண்டன் சந்திப்பை பகிரங்கப்படுத்துக

## கோருகிறது பொதுபலசேனா

கொழும்பு, ஜூன் 18

புலம்பெயர் அமைப்புகளுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. அவர்களுடனான பேச்சுகள் தனிப்பட்ட முறையில் மேற்கொள்ள அனுமதியளிக்க முடியாது. அத்துடன், லண்டனில் நடைபெற்ற சந்திப்புகளைப் பகிரங்கப்படுத்த வேண்டும் என பொதுபல சேனா அரசுக்கு எச்சரிக்கை விட்டுள்ளது.

கொழும்பு கிருலப்பனையில் அமைந்துள்ள அவ்வமைப்பின் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வமைப்பின் தலைவர் டிலான் வித்தானகே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் சமூகத்திற்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல. இலங்கை சனத்தொகையில் 7.5 வீதமான தமிழர்கள் இன்று வெளிநாடுகளில் புலம்பெயர் சமூகமாக வாழ்கின்றனர். அபிவிருத்திக்கும், இலங்கையின் நல்லிணக்கத்திற்கும். புலம்பெயர் தமிழ் சமூகத்தின் பங்கு இன்றியமையாததாகும். ஆனால், புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சுகளில் ஈடுபடுவதற்கு முன்னர். இலங்கையிலுள்ள பௌத்த அமைப்புகளுடன் பேச்சுகளில் ஈடுபடவேண்டும். ஏனென்றால், வரலாற்றில் விடுதலைப் புலிகளுடன் இணைந்து இந்த நாட்டின் ஒற்றுமைக்கும், அபிவிருத்திக் கும் பல்வேறு வகையில் பங்கம் விளைவித்தவர்கள் புலம்பெயர் தமிழ் அமைப்புகளே.

இந்த நாட்டைப் பயங்கரவாதத்திலிருந்து மீட்ட இராணுவத்தினரின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தி புலம்பெயர் தமிழர்களுடன் கைகோர்க்க அனுமதியளிக்கப் போவதில்லை. வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர புதிய அரசின் துணையுடன்தான் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார். புலம்பெயர் தமிழர்களுக்கு விழா எடுப்பதற்கு முன்னர் இச்சந்திப்புகள் தொடர்பில் சிங்கள–பௌத்த அமைப்புகளுடன் பேச்சுக்களில் ஈடுபடவேண்டும். இல்லா விடின் நீண்டகால தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியாது. அதற்கு அனுமதியளிக்கப் போவதுமில்லை – என்றார். (த)

# ரணில் விக்கிரமசிங்கவே பொருத்தமான பிரதமர்

## அமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்

கொழும்பு, ஜூன் 18

நாட்டுக்கு மிகவும் பொருத்தமான பிரதமர் ரணில் விக்கிரமசிங்க என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்

100 நாள்கள் எனக் கூறி 200 நாள்களை பெற்றுக்கொண்டது ஆரோக்கியமான செயல் அல்ல. எனினும் வெகு விரைவில் நாடாளுமன்றம் கலைக்கப்படும். நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் ஒன்றுக்குச் செல்வதைத் தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது.

ஜனாதிபதிக்கு அவசியமான எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவருக்காகச் செயற்படுவதற்கு ஐக்கிய தேசிய கட்சி ஆயத்தமாகவே உள்ளது. பிரதமர் ரணில் விக்ரமசிங்கவை தவிர வேறு ஒருவரும் இப்பதவிக்கு பொருத்தமானவர்கள் அல்ல– என்றார்.(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

*யாழ். மாவட்ட தாச்சித் தொடர்*

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனதுஅங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இந்தத்தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இருபாலை விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து புதுமடம் வைகறை அணி மோதவுள்ளது. (ம-23)

*தங்கராசா ஞாபகார்த்த தொடர்*

வித்தியானந்தாக் கல்லூரியின் மறைந்த அதிபர் அமரர் தங்கராசாவின் ஞாபகார்த்த உதைபந்தாட்டத் தொடர் குறித்த கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தத்தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களாக பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் மந்துவில் பாரதிதாசன் அணியை எதிர்த்து மாமூலை விண்ணொளி அணி மோதவுள்ளது.

பிற்பகல் 4மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வட்டுவாகல் உதய சூரியன் அணியை எதிர்த்து உடையார் கட்டு நண்பர்கள் அணி மோதவுள்ளது.

(ம-102)

# வடமாகாண கரம் தொடர்

## வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம், சென்.ஜோன்ஸ் சம்பியன்







யாழ்ப்பாணம், ஜூன்18

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட கரம் தொடரின் 15வயதுப் பிரிவில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியால அணியும் 19வயதுப் பிரிவில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியும் சம்பியன் ஆகின.

இறுதியாட்டங்கள் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெற்றன.

*15வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டம்*

15வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியால அணியும் சென். ஜோன்ஸ் கல்லூரி அணியும் மோதின.

இரண்டு தனிநபர் ஆட்டங்களையும், ஒரு இரட்டையர் ஆட்டத்தினையும் கொண்ட இறுதியாட்டத்தில் முதலாவது தனிநபர் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக ஜெனுசனும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியால அணி சார்பாக நேயனும் மோதினர். இதில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியால அணி சார்பாக நேயன் 19:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் முதலாவது வெற்றியை பதிவு செய்தார்.

இரண்டவது தனிநபர் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக டிலக்சனும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியால அணி சார்பாக றொசாந்தும் மோதிக் கொண்டனர். எப்படியாவது இந்த தனிநபர் ஆட்டத்தை வெற்றிபெற்றாக வேண்டும் என்ற நிலையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரன் டிலக்சன் தனது திறமையான காய் நகர்த்தல் மூலம் அபாரமாக விளையாடி 25:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று ஆட்டத்தை சமனிலைப் படுத்தினார்.

வெற்றியாளரை தீர்மானிக்கும் இரட்டையர் ஆட்டத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக சுஜீவன், சந்தோஸ் இருவரும் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியால அணி சார்பாக கவியவன், சயந்தன் இருவரும் மோதிக் கொண்டனர். இதில் வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலஅணி 23:2 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று மாகாணச் சம்பியன் ஆனது.

*19வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டம்*

19வயதுப் பிரிவு ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதிக் கொண்டது. இரண்டு தனிநபர் ஆட்டங்களையும், ஒரு இரட்டையர் ஆட்டத்தினையும் கொண்ட இறுதியாட்டத்தில் முதலாவது தனிநபர் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி சார்பாக மிதுசனும் சென்.பற்றிக்கஸ் கல்லூரி அணி சார்பாக அப்பிரேமினும் மோதிக் கொண்டனர். இதில் 17:13 என்ற புள்ளி அடிப்படையில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி வீரன் மிதுசன் முதலாவது வெற்றியை பதிவு செய்தார்.

இரண்டவது தனிநபர் ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக அபினாஸும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி சார்பாக சுஜீவனும் எதிர் கொண்டனர். இதில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி அபினாஸ் 24:0 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவான முறையில் இரண்டாவது செற்றைக் கைப்பற்ற 2-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று மாகாணச் சம்பியன் ஆனது சென்.ஜோன்ஸ்.

(ம-23)

### பிரதேச செயலகங்களுக்கிடையிலான உதைபந்தாட்டம்

# சம்பியனானது தெல்லிப்பழை

மாங்குளம், ஜூன் 18

பிரதேச செயலகங்களிற்கிடையிலான பெண்களிற்கான உதைபந்தாட்டத் தொடரில் தெல்லிப்பழைப் பிரதேச செயலகம் கிண்ணத்தை கைப்பற்றி அசத்தியுள்ளது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதியாட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை எதிர்த்து யாழ்ப்பாண பிரதேச செயலக அணி மோதியது. ஆட்டம் ஆரம்பமாகி எட்டாவது நிமிடத்திலேயே தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியின் வீராங்கனை தர்மி தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைக் கோலாக்க தெல்லிப்பழையின் ஆதிக்கம் ஆரம்பமானது. மேலதிக கோல்கள் எதுவும் பதியப்படாமல் பந்து அங்குமிங்குமாக அல்லோல கல்லோலப்பட முதல்பாதி 1:0 என்று தெல்லிப்பழையின் ஆதிக்கத்துடன் நிறைவடைந்தது.

பழிதீர்க்க வேண்டும் என்ற கட்டாயத்தில் யாழ்ப்பாணம் பிரதேச செயலகமும் ஆதிக்கத்தை தொடர வேண்டும் என்ற முனைப்பில் தெல்லிப்பழையும் ஆரம்பமானது ஆட்டத்தின் இரண்டாவது பாதி. யாழ். பிரதேச செயலகத்தின் போராட்டத்தில் அனல் பறந்தது. ஆனால் அவர்களின் முயற்சிகளை கோலாக்க அனுமதிக்கவில்லை தெல்லிப்பழை. இரண்டாம் பாதியின் 11வது நிமிடத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியின் வீராங்களை சாணு மிகச் சிறப்பான கோலைப் பதிவுசெய்ய வாய்ப்பு தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியின் பக்கம் சாய்ந்தது. இறுதி வரை தெல்லிப்பழையின் ஆதிக்கம் நீடித்து நிலைக்க முடிவில் 2:0என்ற கோல் கணக்கில் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

(ம-422)

### பேராசிரியர். நா.பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த கிண்ணம்

# வவுனியா தபால் திணைக்களத்திடம்



மாங்குளம், ஜூன் 18

அரச திணைக்கள விளையாட்டுக் கழங்களுக்கிடையேயான பேராசிரியர். நா.பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த கிண்ணத்தினை வவுனியா தபால் திணைக்களம் கைப்பற்றியுள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் உடற்கல்வி அலகினால் வவுனியா வளாக முன்னாள் முதல்வர் அமரர் பேராசிரியர். நா.பாலகிருஸ்ணன் ஞாபகார்த்த அரச திணைக்கள விளையாட்டுக் கழங்களுக்கிடையேயான அணிக்கு 6 பேர் பங்குபற்றும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட மென்பந்து துடுப்பாட்டத்தொடர் கடந்த சனி, ஞாயிறு தினங்களில் வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்றது. இறுதியாட்டத்தில் வவுனியா பொது வைத்தியசாலை அணியை எதிர்த்து வவுனியா தபால் திணைக்கள அணி மோதியது. நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற வவுனியா தபால் திணைக்கள அணி களத்தடுப்பை தேர்வு செய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய வவுனியா பொது வைத்தியசாலை அணியானது நிர்ணயிக்கப்பட்ட 05 பந்துப்பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 35 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அதிகபட்சமாக வி.சுரேஸ்குமார் 18 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் அதிகபட்சமாக எம்.சுரேஸ், ஆனந்தன் ஆகியோர் தலா இரண்டு இலக்குகளை கைப்பற்றினர்.

36 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி பெறலாம் எனும் நிலையில் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வவுனியா தபால் திணைக்கள அணியினர் 4.4 பந்துப்பரிமாற்றங்களில் இலக்கை அடைந்து கிண்ணத்தைக் கைப்பற்றினர்.

சிறந்த துடுப்பாட்ட வீரராக வவுனியா தபால் திணைக்கள அணியைச் சேர்ந்த கே.வேனுஸனும்;, சிறந்த பந்துவீச்சாளராக வவுனியா தபால் திணைக்கள அணியைச் சேர்ந்த எம்.சுரேஸ்குமாரும் சிறந்த களத்தடுப்பாளராக வவுனியா தபால் திணைக்கள அணி வீரர் எஸ்.எஸ்.ஹேரத்தும், சிறந்த சகலதுறை ஆட்டக்காரராக வவுனியா பொது வைத்தியசாலை அணியைச் சேர்ந்த வீரர் வி.சுரேஸ்குமாரும் தெரிவு செய்யப்பட்டனர்.

வெற்றிபெற்ற அணியினருக்கான கிண்ணங்களை வியாபார கற்கைகள் பீட முன்னாள் பீடாதிபதியும் வவுனியா வளாக விளையாட்டு ஆலோசனைப் பேரவைத்தலைவருமான கலாநிதி த.மங்களேஸ்வரன் மற்றும் வவுனியா வளாக ஊழியர்கள் வழங்கிகௌரவித்தனர்.(ம-422)

### யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டத் தொடர்

## உடுவில் மகளிர், வேம்படி மகளிர் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கனிஷ்ட பிரிவு இருபாலருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் 15வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி அணியும் 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியும் வெற்றி பெற்றன.

*15வயது பெண்கள்*

பிற்பகல் 3மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற 15 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் உடுவில் மகளிர்கல் லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் உடுவில் மகளிர் கல்லூரி அணி 38:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது.

*17வயதுப்பிரிவு பெண்கள்*

பிற்பகல் 4.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்ற 17 வயதுப்பிரிவு பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக்கல்லூரி அணி மோதிக் கொண்டது. இதில் வேம்படி மகளிர் உயர்தர பாடசா[illegible] 40:39என்ற புள்ளிகளி[illegible] படையில் வெற்றி பெற்றது.(ம-23)



வடமாகாண பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கராட்டி தொடரில் யாழ்.மாவட்டம் சார்பாக கலந்துகொண்ட வேலணை மத்திய கல்லூரி மாணவன் [illegible] கானந்தன் முாளி 17 வயதிற்குட்பட்ட [illegible] போட்டியில் வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இது உலகமகா நடிப்புடா சாமி

பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் தொடரில் டோனி இல்லாதது புதுமையான உணர்வை தந்தது. இவரது குரல் ஒலித்துக் கொண்டே இருந்தது. இவ்வாறு தெரிவித்துள்ளார் கோஹ்லி.

கடந்தவருடத்தின் இறுதிப்பகுதியில் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரின் போது டெஸ்ட் அரங்கில் இருந்து டோனி ஓய்வு பெற்றார். இந்த நிலையில் டோனியின் பிரிவு தொடர்பாக கோஹ்லி தெரிவித்ததாவது – பங்களாதேஷிற்கு எதிராக தொடரின் பொழுது டோனி இல்லாதது புதுமையான அனுபவமாக இருந்தது. இதேபோன்ற ஒரு சூழல் சச்சின் ஓய்வு பெற்ற போதும் ஏற்பட்டது.

ஒரு கிரிக்கெட் வீரராக டோனியுடன்தான் பெரும்பாலான நேரத்தை செலவிட்டோம். டோனி சொல்வதை கேட்டோம். அவருடன் பல விடயங்கள் தொடர்பாக விவாதித்தோம். இவரது அணுகுமுறை அணியுடன் கலந்திருந்தது. இப்படி இந்திய அணியில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு வீரரை திடீரென காண முடியவில்லை. இவரது குரல் மட்டும் எங்கள் மத்தியில் எப்போதும் ஒலித்துக் கொண்டே இருந்தது –என்றார். (ம)



## ஆஷஸ் தொடரில் ஆஸி. தடுமாறும்



வரவிருக்கும் ஆஷஸ் தொடர் இங்கிலாந்தில் நடைபெறுவதால் ஆஸ்திரேலியாவைக் காட்டிலும் இங்கிலாந்துக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் இருப்பதாக பாகிஸ்தான் சகலதுறை வீரர் –ஜுகித் அப்ரிடி தெரிவித்துள்ளார்.

கடந்த 14 ஆண்டுகளாக சொந்த மண்ணில் இங்கிலாந்து அணி ஆஷஸ் தொடரை இழந்ததில்லை.

இந்த நிலையில் இங்கிலாந்தின் வாய்ப்புத் தொடர்பாக அப்ரிடி தெரிவித்ததாவது:– உள்நாட்டில் விளையாடுவதால் இங்கிலாந்துக்கு சாதகங்கள் அதிகம். இங்கிலாந்தில் எப்படி வீச வேண்டும் என்பதை அந்த அணியின் பந்துவீச்சாளர்கள் நன்கு அறிவார்கள். இங்கிலாந்தில் அவர்கள் சிறப்பாக வீசுவதை நாம் பார்த்து வருகிறோம், மற்ற நாடுகளில் அவர்கள் சோபிக்க முடிவதில்லை.

ஒருநாள் ஆட்டங்களில் இங்கிலாந்து தடுமாறலாம். ஆனால் டெஸ்ட் ஆட்டங்களில் அவர்கள் சவாலாகவே திகழ்வார்கள். எந்த அணி வெல்லும் என்று ஒரு அணியை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியாவிட்டாலும், இங்கிலாந்துக்கு அவர்கள் சொந்த மண் என்பதால் வாய்ப்புகள் அதிகம்– என்றார். (ம)

## முரளி விஜய்க்கு அபராதம்

விதிமுறைக்கு முரணாக தனது துடுப்பு மட்டையில் விளம்பர இலச்சினையை பயன்படுத்தியதுக்காக முரளி விஜய்க்கு 25 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இந்தியா, பங்களாதேஷ் அணிகள் மோதிய பதுல்லா டெஸ்ட் சமநிலையில் முடிவடைந்தது. இதில் முதல் இன்னிங்ஸில் 150 ஓட்டங்கள் குவித்தார் இந்திய வீரர் முரளி விஜய்.

இந்த ஆட்டத்தில் விஜய் பயன்படுத்திய துடுப்பு மட்டையில் இருந்த விளம்பர இலச்சினை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையின் விதிக்கு மாறாக, அதிகமான நீளத்தில் இருந்தது. இதை சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஏற்கவில்லை. இதையடுத்து பதுல்லா டெஸ்ட் ஆட்டத்துக்கான சம்பளத்தில் 25 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை ஆட்டம் முடிந்ததும் அபராதத்தை விதிக்காமல், சில நாட்களின் பின்னர் விதித்தது புதுமையாக உள்ளது. (ம)

## கார்ல்சனிடம் வீழ்ந்தார் ஆனந்த்

நோர்வேயில் நடைபெற்ற செஸ் தொடரில் உலக சம்பியனும் மிகவும் இளம் வீரருமான மக்னஸ் கார்ல்சனிடம், இந்தியாவின் விஸ்வநாதன் ஆனந்த் தோல்வியடைந்துள்ளார்.

முதல் இரு ஆட்டங்களில் வெற்றி பெற்ற ஆனந்த், கார்ல்சனுக்கு எதிரான ஆட்டத்தில் நூலிழையில் வெற்றி வாய்ப்பைத் தவறவிட்டார். இதன் மூலம் 5.5 புள்ளிகளுடன் 5வது இடத்தில் உள்ளார் ஆனந்த். தனது அடுத்த ஆட்டத்தில் ஆனந்த், கருவானாவை எதிர்கொள்கிறார். (ம)





## ரொனால்டோவை கொப்பியடித்த நெய்மர்

ரசிகர்களை நோக்கி நெய்மர் அடித்த பந்து கூட்டத்தில் இருந்த சிறுவனை தாக்கியதையடுத்து அந்தச் சிறுவனுக்கு பந்தொன்றை பரிசளித்து ஆறுதல் தெரிவித்துள்ளார் நெய்மர்.



கோபா அமெரிக்கா கால்பந்து தொடர் சிலி நாட்டில் நடந்து வருகிறது.

இதில் பெரு நாட்டிற்கு எதிரான ஆட்டத்தில் பங்கேற்பதற்காக பிரேஸில் வீரர்கள் தயாரான வேளையில் வீரர்களை வேடிக்கை பார்ப்பதுக்காக ரசிகர்கள் கூடினார்கள். அப்பொழுது ரசிகர்களை உற்சாகப்படுத்தும் விதமாக நெய்மர் அடித்த பந்து ஒரு சிறுவனை தாக்கியது. இதனையடுத்து அந்த சிறுவன் வலியால் அழ ஆரம்பித்தான். சம்பவத்தை அறிந்த நெய்மர் அந்த சிறுவனை அழைத்துச் சென்று தனது கையொப்பமிட்ட பந்தை பரிசளித்து சமாதானப்படுத்தியுள் ளார். அண்மையில் இவ்வாறான சம்பவமொன்றில் ரொனால்டோ சிறுவன் ஒருவனுக்கு பந்தைப் பரிசளித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## பகலிரவு டெஸ்ட் விரைவில் ஆரம்பம்

பகலிரவு டெஸ்ட் ஆட்டங்களை நடத்துவது உறுதியாகியுள்ளதாக சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை தெரிவித்துள்ளது.

ரி–20 ஆட்டத்தின் தாக்கத்தால் டெஸ்ட் ஆட்டத்தின் மீதான நாட்டம் குறைந்து வருகிறது. குறைவான ரசிகர்களே டெஸ்ட் ஆட்டங்களை நேரில் ரசிக்கிறார்கள். இதனால் ரசிகர்களை கவர்வதற்காக டெஸ்ட் தொடர்களை பகலிரவாக நடத்த சர்வதேச கிரிக்கெட் கட்டுப் பாட்டுச்சபை திட்டமிட்டது. இதன்படி ஆஸ்திரேலியாவில் பகலிரவாக டெஸ்டை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. நியூசிலாந்து அணியுடன் ஆஸ்திரேலியா பகலிரவு டெஸ்டில் மோதுகிறது.

குறித்த பகலிரவு டெஸ்ட் தொடருக்காக இளம் சிவப்பு பந்துகள் பயன்படுத்தப்படவுள்ளதாகவும் அப் பந்துகள் தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)



வவுனியா முஸ்லிம் மகா வித்தியாலய மாணவன் ஹாஜா மொஹிதீன் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான மாகாண மட்டக் கராத்தே தொடரின் காட்டா போட்டியில் தங்கப்பதக்கத்தை பெற்றமைக்காக பாடசாலை சார்பாக அதிபர் எம்.எஸ் றம்ஸீன் கேடயங்களும் பதககங்களும் வழங்கி கௌரவித்துள்ளார். (ம்)

### இந்தியா – பங்களாதேஷ் முதல் ஒருநாள் ஆட்டம் இன்று

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான மூன்று ஒரு நாள் ஆட்டங்களைக் கொண்ட தொடரின் முதலாவது ஆட்டம் பகலிரவு ஆட்டமாகஇன்று ஆரம்பமாகிறது. (ம)



## யாழ்.மாவட்ட தாச்சித் தொடர் தென்றல், விக்னேஸ்வரா அபாரம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் தனது அங்கத்துவக் கழகங்களுக்கு இடையில் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் பண்டத்தரிப்பு அறிவொளி விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத்தொடரில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 6.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் நவாலி தென்றல் அணியை எதிர்த்து கீரிமலை அணி மோதிக் கொண்டது. இதில் நவாலி தென்றல் அணி 7:5 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற இரண்டாவது ஆட்டத்தில் இருபாலை விக்கினேஸ்வரா அணியை எதிர்த்து நாவற்குழி ஐயனார் அணி மோதிக் கொண்டது. இதில் இருபாலை விக்கினேஸ்வரா அணி 8:3 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம–23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிண்ணங்களைக் குவிப்பேன்

அடுத்து வரும் ரென்னிஸ் தொடர்களில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள செரீனா வில்லியம்ஸை வீழ்த்தும் அளவுக்கு ஆக்ரோஷமாக செயற்படப்போவதாக தரப்படுத்தலில் நான்காம் இடத்திலுள்ள ரஷ்யாவின் மரிய ஷரபோவா தெரிவித்துள்ளார்.

அடுத்தடுத்து பலரென்னிஸ் தொடர்கள் தொடர்ச்சியாக நடைபெற விருப்பதுடன் அமெரிக்க ரென்னிஸ் தொடரும் நடைபெறவுள்ளது இந்த நிலையில் அடுத்த தொடர்களில் தனது செயற்பாடு தொடர்பாக ஷரபோவா தெரிவித்ததாவது ரென்னிஸ் என்றார் செரீனாதான் என்ற ஒரு மாயை தற்பொழுது ஏற்பட்டுள்ளது. குறிப்பாக அமெரிக்க தொடர்களில் செரீனாவின் ஆதிக்கம் அதிகமாக இருக்கும் என்று தகவல்கள் தொடர்ச்சியாக வெளிவந்துகொண்டிருக்கின்றன. நடப்பு வருடத்தில் நடக்கவுள்ள அடுத்தடுத்த தொடர்களிலும் வருடத்தின் இறுதிப்பகுதியில் நடக்கவுள்ள அமெரிக்க தொடரிலும் செரீனாவின் ஆதிக்கத்தை இல்லாமல் செய்து கிண்ணத்தை கைப்பற்றுவேன். அமெரிக்க கிண்ணத்தைக் கைப்பற்றுவது எனக்குப் புதிதல்ல– என்றார்.

(ம)



ஷரபோவா

# ரென்னிஸ்ஸை சந்தித்த கிரிக்கெட்



கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், பிரபல முன்னாள் ரென்னிஸ் வீரர் போரிஸ் பெக்கருடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை தனது முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ளார்.

கிரிக்கெட்டில் பல சாதனைகள் படைத்த சச்சின் டெண்டுல்கருக்கு ரென்னிஸ் விளையாட்டு மீது அலாதி பிரியம். சச்சின் துடுப்பு மட்டையை பிடிப்பதற்கு முன்னர் ரென்னிஸ் விளையாட்டில்தான் அதிக ஆர்வம் காட்டினார். இந்த நிலையில் ரென்னிஸ் ஜாம்பவான் போரிஸ் பெக்கரை, சச்சின் டெண்டுல்கர் நேரில் சந்தித்துள்ளார். அவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படத்தை முகப் புத்தகத்தில் பதிவேற்றி, என்னைக் கவர்ந்த ரென்னிஸ் சூப்பர் ஸ்டாருடன் இருக்கிறேன். எவ்வளவு அருமையான மனிதர் இவர். இவரை பார்த்து தான் நான் வளர்ந்தேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜேர்மனைச் சேர்ந்த போரிஸ் பெக்கர் தனது 17 ஆவது வயதில் ரென்னிஸ் வீரர்களின் கனவான விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றி மிகவும் இளம் வயதிலேயே விம்பிள்டன் தொடரைக் கைப்பற்றியவர் என்ற சாதனை புரிந்தவர். என்பது குறிப்பிடத்தக்கது.

(ம)

**For Rent**

Annex with one bed room, attached bathroom, kitchen, large hall.
only 3 minutes distance to Nallur temple.
suit for working couple. Advance 225000/=

Contact : 077 295 8009

**வேலைவாய்ப்பு**

யாழ் நகரில் உள்ள Cellelectronics தொலைபேசி விற்பனை நிலையத்திற்கு விற்பனையாளர் ஒருவர் தேவை.
தகைமை
* கல்வி- A/L
* வயது20-35
* ஆங்கிலத்தில் உரையாடக்கூடியவராய் இருத்தல்
* கணினி அறிவு.

தொடர்பு :- 077 383 4483
(61052)

## மரண அறிவித்தல்

### திருமதி ஞானேஸ்வரி மனோகரன்



குமரகோட்டம் கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் லோட்டன் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி மனோகரன் 17.06.2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு மனோகரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து- இலட்சுமி தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் வடிவம்மா தம்பதியரின் மருமகளும் சமுத்திரராஜ்(Medical Rep zydas Alidac), கஜன்ராஜ்(Higher national diploma in information technology 2nd year - ATI Jaffna), மதுராஜினி (நுண்கலைப்பீடம்-நடனம் 2nd year) ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிசாந்தனின் (BOC-நெடுந்தீவு) சிறியதாயும், சிவரட்ணம், சிவனேஸ்வரி, செல்வரெட்ணம், அரசரட்ணம், தவனேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரியும், ரஞ்சினிதேவி, தர்மசீலன், ஜமுனாதேவி, சத்தியசீலன், ஸ்ரீகரன்-கௌசி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.06.2015) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**லோட்டன் வீதி, மானிப்பாய்.** தொடர்பு 077 730 5033 **தகவல் குடும்பத்தினர்.**
(61056)

# ஆட்டம் காண்கிறது பெடரரின் ஆட்டம்

ஹாலே ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில்சுவிற்சர்லாந்தின்ரோஜர் பெடரர் ஜேர்மனியின் பிலிப் ஹோல்ஸை போராடி வீழ்த்தினார்.

ஹாலே தொடரில் 7 முறை கிண்ணம் வென்றவரான பெடரர் ஹோல்ஸை இலகுவாக வீழ்த்துவார் என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கிட்டத்தட்ட 2 மணி நேரம் போராடியே வெற்றி பெற்றார். 7–6, 3–6, 7–6 என்ற அடிப்படையில் 2–1 என்ற செற் கணக்கில் பெடரர் வெற்றி பெற்றாலும் அவர் வெற்றி பெற்ற இரண்டு செற்களும் மேலதிக நேரம் வழங்கப்பட்டு முடிவு தெரியாது இழுத் தடிக்கப்பட்ட செற்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் ஏற்கனவே 7தடவைகள் ஹாலே கிண்ணத்தைக் கைப்பற்றிய பெடரர் நடால் போன்ற ஆக்ரோஷமான வீரரரை எதிர்கொண்டு எட்டாவது தடவையைக் கிண்ணத்தை கைப்பற்றுவாரா என்பது சந்தேகமாகியுள்ளது.

(ம)


பெடரர்

## அணிகளில் சிறந்தது சென்னை தலைவர்களில் சிறந்தவர் டோனி

இந்திய அணித்தலைவர் டோனி ஒரு நேர்மையான வீரர் என்று மேற்கிந்திய தீவுகளின் டிவைன் சிமித் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

டோனி தொடர்பாக சிமித் தெரிவித்ததாவது நான் விளையாடிய அணிகளிலேயே சென்னை சூப்பர் கிங்ஸ் அணியே சிறந்தது. சென்னை சூப்பர் கிங்ஸ் ஓய்வறையில் நாம் நிம்மதியாக இருக்கலாம். அனைத்து விதங்களிலும் நம்மீது அக்கறை இருக்கும். பிளெமிங் போன்ற ஒரு பயிற்சியாளர், சுரேஷ் ரெய்னா போல ஒரு நண்பர். இவையல்லாமல் அனைத்திற்கும் மேலாக எம். எஸ். டோனி.

டோனியைப் பொறுத்தவரை யாரும் வாய்ப்புகள் தரவில்லை என்று குற்றம்காண முடியாது. அவர் நிறைய வாய்ப்புகளை வழங்குவார், பிறகு அந்த வீரர்தான் அதனை மேலே எடுத்துச்செல்ல வேண்டும். டோனி ஒரு நேர்மையான கிரிக்கெட் வீரர். உலகின் தலைசிறந்த வீரர்களில் ஒருவர், தருணத்துக்கு ஏற்ப சிந்திக்கும் மூளை படைத்தவர். எதைப் பற்றியும் கவலைப்படாமல் சுதந்திரமாக விளையாட வேண்டும் என்று எப்போதும் வலியுறுத்துபவர்.

கடந்த இரண்டு தொடர்களாக டோனியின் தலைமைத்துவத்தை நெருக்கமாக கவனித்து வருகிறேன். அவற்றிலிருந்து பலவற்றை மனதில் எடுத்துக்கொண்டு எனது ஆட்டத்தில் அவற்றை நுழைத்துள்ளேன். சென்னை சூப்பர் கிங்ஸ் அணியில் விளையாடியதும், டோனியிடம் நிறைய உரையாடியதும் என்னை சிறந்த கிரிக்கெட் வீரராக உருவாக்கியுள்ளது என்றார். (ம)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org